# தமிழர் மருத்துவம்

பொதுப் பதிப்பாசிரியர்
**அ. அப்துல் மஜீத்**
இயக்குநர்
தொல்லியல் துறை, சென்னை - 600 113.

பதிப்பாசிரியர்
**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 600 005.

©

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

2000

அ.கீ.சு. நூலக வெளியீடு எண் : 449

தமிழ்நூல் வெளியீடு எண் : 124

# தமிழர் மருத்துவம்

பொதுப் பதிப்பாசிரியர்

**அ. அப்துல் மஜீத்**

இயக்குநர்

தொல்லியல் துறை, சென்னை - 600 113.

பதிப்பாசிரியர்

**முனைவர் சு. செளந்தரபாண்டியன்**

காப்பாட்சியர்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

சென்னை - 600 005.

©

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

2000

முதற் பதிப்பு 2000

பிரதிகள் 500

தமிழர் மருத்துவம்

© தமிழ்நாடு அரசு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

பொதுப் பதிப்பாசிரியர் :

திரு. அ. அப்துல் மஜீத்
இயக்குநர்
தொல்லியல் துறை

பதிப்பாசிரியர் :

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

வெளியீடு :

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-600005

விலை : ரூ.100 -

அச்சிட்டோர் :

தொல்லியல் துறை
தரமணி, சென்னை-600113

G.O.M.L. Publication No. 449
Tamil Publication No. 124

# THAMIZHAR MARUTTUVAM

*General Editor*
**A. ABDUL MAJEED**
Director
Department of Archaeology, Chennai - 600 113

*Editor*
**Dr. S. SOUNDARAPANDIAN**
Curator
Government Oriental Manuscripts Library
Chennai - 600 005

©
Government Oriental Manuscripts Library
2000

First Edition 2000
No. of Copies : 500

THAMIZHAR MARUTTUVAM

© Government Oriental Manuscripts Library

General Editor :

THIRU. A. ABDUL MAJEED
Director
Department of Archaeology

Editor :

DR. S. SOUNDARAPANDIAN
Curator
Government Oriental Manuscripts Library

Price : Rs. [illegible]

Published by :

Government Oriental Manuscripts Library
Chennai - 600 005

Printed at :

Department of Archaeology
Tharamani, Chennai - 600 113

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்
சென்னை-600 009
நாள் : 19-6-2000
தி.பி. 2031/ஆனி 5

# அணிந்துரை

தமிழ்மொழி மற்றும் அதன் பல்நூற்றாண்டுப் பண்பாட்டு சிறப்பை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுபவை கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் ஆகிய எழுத்துச் சான்றுகளாகும். இவற்றில் ஓலைச்சுவடிகள் எளிதில் அழிந்துவிடக் கூடியவை; எண்ணிக்கையில் ஏராளமானவை. இன்றைய காகித உலகில் இவை பயன்பாடற்றவையாகப் பலவிடங்களிலும் ஒதுங்கிக் கிடக்கின்றன. இவற்றைச் சேகரித்துப் பாதுகாக்கத் தமிழக அரசு பல்வேறு அமைப்புகளையும் ஊக்குவித்து உதவி வருகிறது. அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகச் சேகரிப்பில் பல்வேறு துறை சார்ந்த எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட சுவடிகள் உள்ளன. இவற்றில் பல அச்சில் வராதவை. **மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களது தலைமையிலான தமிழக அரசு, இச்சுவடிகள் அனைத்தும் அச்சிடப்பட வேண்டுமென்பதில் பெருமுனைப்புக் காட்டி நிதி ஒதுக்கீடு செய்து பதிப்பிக்கச் செய்து வருகிறது. அவ்வகையில் 'தமிழர் மருத்துவம்' என்னும் இந்நூல் வெளியிடப் படுகிறது.

தமிழ் மண்ணில் பல கலைகள் பிறந்து, வளர்ந்து, செழித்து வேரூன்றியுள்ளன. இவற்றில் உலகளாவும் பாராட்டப்படும் கலைகள் உண்டு. அவற்றில் ஒன்று தமிழனின் மருத்துவக் கலையாகும். இது வாழையடி வாழையெனப் பெற்ற பயிற்சியின் விளைவாக அமைந்த அனுபவக் கலையாகும். இடையே,

அந்நிய ஆட்சி மற்றும் அதன் பண்பாட்டுத் தாக்கங்களால் இக்கலைப் பயிற்சியிலும், தொடர்ச்சியிலும் தொய்வு ஏற்பட்டு விட்டது. எனினும் முன்னோர்கள் விட்டுச் சென்றுள்ள மருத்துவச் சுவடிகள் அத்தொய்வைச் சரி செய்யும் வாய்ப்பை நல்கியுள்ளன.

'தமிழர் மருத்துவம்' என்னும் இந்நூலில் ஏறத்தாழ முந்நூற்றுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் மருந்தும், நோயும் சொல்லப்பட்டுள்ளன. சிறிதும் பெரிதுமாக இத்தலைப்புகளில் சொல்லப்படும் நோய்களை அறியும்போது மனிதனுக்கு இத்தனை நோய் வருமா? என்று மலைப்பாகவுள்ளது. இந்நோய் ஒவ்வொன்றிற்கும் குணப்படுத்தும் மருந்துகளை அறியும்போது தமிழனின் மருத்துவ ஆற்றலைக் கண்டு வியப்புக் கூடுகிறது.

மருந்தைச் சொல்லி எந்த நோயைக் குணப்படுத்தும் என்றும், நோயைச் சொல்லி எந்த மருந்து குணப்படுத்தும் என்றும் இந்நூல் நல்ல தமிழில் நடை பயில்கிறது. இடையிடையே எளிய பாடல்களும் உள்ளன. உட்கொள்ளும் மருந்துகள், வெளிப்பூச்சு மருந்துகள், பத்தியப் பொருட்கள் என்று விவரிக்கும் போது கையாளப்படும் சொற்களின் நயம் தமிழுக்கே உரிய சிறப்பைக் காட்டுகிறது. உட்கொள்ளும் மருந்தைச் சொல்லும்போது, உள்ளுக்குத்தர, சாப்பிட, குடிக்க, கொடுக்க, கலந்து கொடுக்க, சேர்த்துக் கொடுக்க என்று பல்வேறு சொற்கள் பயன்படுவதைக் காண்கின்றோம். இச்சொற்கள் மருந்தின் சுவை, பண்பு, நோயாளியின் நிலை ஆகியவற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

தமிழால் எதுவும் முடியும் என்பதற்கு இந்நூல் நல்ல எடுத்துக்காட்டாகும். இதுபோன்று இன்னும் பல நூல்கள் வெளியிடப்பட்டு தமிழுக்கு ஆக்கமும், ஊக்கமும் தரப்பட வேண்டும். மருத்துவர்களும், ஆய்வாளர்களும், பொதுமக்களும் இதுபோன்ற நூல்களை வரவேற்று ஆதரிக்கக் கடமைப் பட்டுள்ளார்கள்.

அன்புடன்

மு. தமிழ்க்குடிமகன்

# தமிழர் மருத்துவம்

## பதிப்புரை

இந்நூல் இதுவரை அச்சில் வெளிவராதது.

அ.கீ.சு. நூலகத்தில் டி. 1903 மற்றும் ஆர் 8093 ஆகிய இரு தாட்சுவடிகளில் இருந்த நூலே இங்கு பதிப்புப்பெறுகிறது.

சுவடிகளில் **வைத்தியச் சாஸ்திரம்** என்ற தலைப்பே உள்ளது; இதே தலைப்பில் நூலகம் வேறு ஒரு நூலை வெளியிட்டுள்ளதால், இந்த நூலுக்குத் **தமிழர் மருத்துவம்** என்ற தலைப்பு பதிப்பாசிரியரால் நல்கப்பட்டுள்ளது.

இந்நூல், பழனியை அடுத்த புளியம்பட்டியைச் சேர்ந்த பெ. பழனிச்சாமிக் கவுண்டர் தனது அனுபவத்தில் அவரே உருவாக்கியவைகளும், அவருக்குப் பிறர் சொன்னவைகளும், அவருக்கு முன்பாக நம் முன்னோர் கண்டவைகளும், பிறர் குறிப்புகளும் கொண்டதாகும்'

பழனிச்சாமிக் கவுண்டர் குறிப்புகள் 1921-இல் எழுதப்பட்டவை.

குறிப்புகள் எழுதி வைக்கப்பட்டது பிற்காலத்தில் ஆனாலும், இதன்கண் கூறப்பட்டுள்ள மருத்துவ உண்மைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டவைகள் எனல் வேண்டும்,

சித்த மருத்துவத்தின் காலம் யாது? சித்த மருத்துவம் என்பது ஏதோ ஒரு சித்தரால் எழுதப்பட்டது அல்ல; பல சித்தர்கள் கூடி எழுதியதும் அல்ல.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழர் வாழ்ந்த வாழ்வின் பலனால் உருவானதே சித்த மருத்துவம்.

தமிழர்கள் கண்ட மருத்துவ முறைகளை நூலாக வடித்ததும்; மேலும் புதுக்கி வளர்த்ததும் சித்தர்களாவார்கள். அதனால் சித்தர்கள் பெயரால் சித்தமருத்துவம் எனப்படுகிறது.

அதர்வணவேதத்தில் காணலாகும் மருத்துவக் குறிப்புகள் சித்த மருத்துவக் குறிப்புகளே.

அதர்வணவேதம் குறைந்தது கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது ஆகலாம்.

எனவே கி.மு. 2500 என்ற ஒரு கால எல்லையே, உத்தேசமாக சித்தமருத்துவத்தின் காலம் என மதிப்பிட இடமுளது.

வடமொழி அதர்வணவேதத்தில் மட்டுமல்லாது, வடமொழிக் கிருஹ்ய சூத்திரங்களிலும் மருத்துவக் குறிப்புகள் உள்ளன. பாரஸ்கர கிருஹ்ய சூத்திரம், போதாயன கிருஹ்ய சூத்திரம், ஆபஸ்தம்ப கிருஹ்ய சூத்திரம், காதிரா கிருஹ்ய சூத்திரம் என்று வடமொழியில் சில கிருஹ்ய சூத்திரங்கள் உள்ளன.

இக்கிருஹ்ய சூத்திரங்களின் கருத்துகள் பெரிதும் தமிழர் வாழ்க்கைக்கு ஒத்துப்போகக் கூடியவைகளே; வேறு வகையாகச் சொன்னால், வடமொழிக் கிருஹ்ய சூத்திரங்கள் தமிழர் வாழ்வை அப்படியே காட்டுவன என மதிப்பிடலாம்.

எனவேதான், பிற்காலத்திய வடமொழி நூற்களைக் கொண்டு, முற்காலத்திய வடமொழி நூலான அதர்வண வேதம், மேலே கண்டவாறு மதிப்பிடப்பட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, அண்மைக்காலங்களில், மிகப் பழைய சித்த மருத்துவ அச்சு நூற்களை மறுபதிப்புச் செய்து வெளியிட்டு உதவும் நிறுவனம் தாமரை நூலகம் (7, என்.ஜி.ஓ. காலனி, வடபழனி, சென்னை-26) ஆகும்.

இங்கு பதிப்பிக்கப்படும் இத்தமிழர் மருத்துவம் எனும் நூல், சிறந்த நூலாக மிளிரும் தன்மையைக் கண்டு மெச்சிய சித்த மருத்துவ நிபுணர் மதுரை ஏ. என். அனுமந்தன் ஆச்சாரி ஆவார்.

"இதைக்கட்டாயம் அச்சிட்டு வெளியிடுங்கள்" என்று மதுரை ஏ. என். அனுமந்தன் ஆச்சாரி அவர்கள் நூலகத்திடம் வேண்டு கோள் விடுத்தார்கள். மிகப்பழைய மருத்துவ அச்சு நூற்களை ஆங்காங்கு நேரிற் சென்று, அரிதின் முயன்று, பெற்றுப் பல மருத்துவர்களுக்கு அளித்து, பல மருந்துகள் முடிக்கப்பட காரண மாக இன்றும் (1998) இருந்து வருகிறார்.

இங்கு பதிப்புக் காணும் நமது இந்த மருத்துவ நூலிலும், இதற்கு முன்பு அச்சாகியுள்ள நூற்களிலும் காணலாகும் தமிழர் மருத்துவ அறிவுகள் பலப்பல! அவை சொல்லில் அடங்கா!

மருந்துப் பொருள் ஒவ்வொன்றிலும் உள்ள தனித்த, வேறுபட்ட குணங்களைத் துல்லியமாகத் தமிழர்கள் கூறியுள்ளனர்!

நெய்யை எடுத்துக் கொள்ளலாமா?

அதிலும் துல்லியம்! இன்ன மருந்துக்குப் பன்றி நெய் சேர், இன்ன மருந்துக்கு வெள்ளாட்டு நெய் போடு, இன்ன மருந்துக்கு பசு நெய் தேவை என்று பிரித்துப்பிரித்து, வெகு அழகாக, வெகு நுட்பமாகக் கூறியவர்கள் தமிழர்கள்!

பொதுவாகத் தமிழ் மருத்துவ நூற்களிற் காணலாகும் தமிழ்ச் சொல்லாட்சிகள் நயமிக்கவை; பல புதிய சொல் வடிவுகளையும், வழக்கில் இல்லாத சொற்களையும் அவற்றில் காணலாம்.

எடுத்துக்காட்டாக, இந்தச் சுவடியில், 'நிழலுலர்த்தி' என்று ஒரு சொல் வருகிறது; 'நிழலிலுலர்த்தி' என்பதே பொருள். ஆனால், நிழலுலர்த்தி என்றே எல்லா இடங்களிலும் கட்டுப் பாடாக எழுதப்பட்டுள்ளது. எனவே சுவடிப்பிழையாக வந்த சொல் அல்ல இது. நிழலிலுலர்த்தி என்பதையே, சுருக்கமாக, நிழலுலர்த்தி என்று கூறும் ஒரு புது மரபு மருத்துவ சுவடி களில் காணப்படுகிறது. ஆனால் விரைவாகப் படிப்பவர்களுக்கு ஏற்ற வகையில், 'நிழலிலுலர்த்தி' என்றே அச்சொல் இங்கு பதிப்பிக்கப்பெறுகிறது.

இவ்வாறு சுவடி ஆய்வாளர்களுக்குப் பெருவிருந்தாக இருப்பது மருத்துவச்சுவடி ஆகும்.

சொல்லாய்வாளர்களுக்கும் மருத்துவ நூற்கள் சிறந்த ஆடுகள மாக இருக்கிறது!

இச்சுவடியில் ஓரிடத்தில், "சுவறச் சுவற ஊறவைத்து" என வந்துள்ளது.

சுவற-வற்ற

நீர் வற்றும்படியாக ஊறவைத்து என்பது பொருள்.

'கடல் சுவறவிட்ட படலம்' என்று பரஞ்சோதிமுனிவர் எழுதிய திருவிளையாடற் புராணத்தில் வருகிறது. அந்த அருஞ் சொல்லை மருத்துவ நூலிற் பார்க்க, இன்பம் பொங்குகிறது!

அதுமட்டுமல்ல, மருத்துவர்கள் நிலையில் வழக்கில் பயிலும் ஒரு சொல்லாகச் 'சுவற' என்பது இருந்து, பின்பு அருஞ்சொல் லாக இலக்கியத்தில் மட்டும் இருக்கும் ஒரு நிலை ஏற்பட்டது என்பதையும் அறியவருகிறோம்.

இந்நூலில், மருந்துப் பெயர்களைப் பார்த்துக் கொண்டே வந்தால், அவ்வப்போது புதிய புதிய மருந்துப் பெயர்கள் தென்பட்டு நம்மை மருட்டும்! வியப்பிலும் ஆழ்த்தும்!

ஓரிடத்தில், சிறுமுன்னை என்றொரு பொருள் குறிப்பிடப் படுகிறது. புன்னை என்பதையே நாம் அறிவோம்; அதனைப் பின்னை எனவும் வழங்குப. அதற்கு எதிர்ச்சொல்போல முன்னை வந்துள்ளது பாருங்கள்!

புன்னை அல்லது பின்னை பெருகி வளர்ந்த காரணத்தால் அவ்வூர் பின்னத்தூர் என அழைக்கப்பட்டிருக்கலாமோ?

இந்நூலிற் காணும் இன்னொரு பெயர் கொத்துமல்லி; கொத்துக்கொத்தாக விளைவதால் அதற்குக் கொத்துமல்லி என்று பெயர் ஏற்பட்டது பொருத்தமே! கொத்தமல்லி என்று நாம் அனைவரும் கூறி, எழுதிவருவது பிழை என்பது இச்சுவடி ஆய்வால் இன்று துலக்கமுறுகிறது.

அதைப் போன்றே, இந்நூலிற் பயிலும் இன்னொரு சொல் **நல்ல சந்தனம்!**

நல்ல சந்தனம் என்றால், சிறந்த சந்தனம் என்றுதான் நாம் நினைக்கிறோம்; உண்மை அதுவல்ல!

நல்ல சந்தனம் = கறுப்புச் சந்தனம்

சந்தனத்தில், கறுப்பு நிறம்கூட உண்டா?

உண்டு என்றுதான் இந்த நூல் கூறுகிறது!

அதுமட்டுமல்ல! சிவப்புச் சந்தனம்கூட உண்டு என்று இம் மருத்துவ நூல் தெரிவிக்கிறது; செஞ்சந்தனம் என்று அதனைச் சுட்டுகிறது.

முன், நல்ல சந்தனம் என்று கண்டோமல்லவா? அதனைச் சிறிது நோக்கலாம்.

நல்ல = கறுப்பு

ஆம்! நல்ல எனும் தமிழ்ச்சொல்லுக்குக் கருமை எனும் ஒரு பொருள் உண்டு.

நல்ல பாம்பு = கருமைநிறம் கொண்ட பாம்பு.

ஆம்! நல்ல பாம்பு என்றால், கருமை நிறத்தைப் பெற்ற பாம்பு என்பது குறிப்பு.

நல்லெண்ணை = கரிய நிறமுள்ள எண்ணை,

**மருத்துவச் சுவடிகள் பதிப்பிப்பதில் சில சிக்கல்கள் உள.**

மருந்துப் பொருட்களின் பெயர் வடிவங்களை வரையறை செய்வதே அது!

எடுத்துக்காட்டாக, இந்தச் சுவடியில், தழுதலை, தழுதாளை என்றெல்லாம் ஒரு பொருள் குறிக்கப்படுகிறது. இவற்றில் எது

சரி? இரண்டுமே பிழை என்றே தோன்றுகிறது. உண்மையான வடிவம் தழுதாழை ஆகலாம்; இங்கு தழுதாழை (Clerodendron phlomoides) என்றே பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பதிப்புச் சிக்கலைத் தோற்றுவிக்கும் இன்னொரு கூறு இரண்டு சொற்கள்போலத் தோன்றும் மருந்துப் பெயராகும்!

எடுத்துக்காட்டாகக் கண்டுபரங்கி!

கண்டு வேறு பரங்கி வேறா? இரண்டும் சேர்ந்து ஒரு பொருளைக் குறிக்குமா?

கண்டுபரங்கி (Premna herbaceae) என்பது ஒரு பொருளே! இதன் பயனை இந்நூலில் அறியலாம்.

தமிழ்ச் சித்த மருத்துவம் கண்டறிந்த மருந்து வடிவங்களையே ஆங்கில முறை (Allopathy) மருத்துவம் இன்று பின்பற்றுகிறது!

கீழ்வரும் பட்டியல் இதனை விளக்கும்:-

| தமிழர்கள் கண்டறிந்த முறை | ஆங்கிலம் பின்பற்றிய முறை |
|---|---|
| 1. குடிநீர் | Syrup |
| 2. குளிகை | Tablet |
| 3. லேகியம் | Lambative |
| 4. சூரணம் | Powder |

தமிழ்ச் சித்தமருத்துவத்தில் பல கோட்பாடுகள் (Theories) உள்ளன. இவை இன்னும் நன்கு ஆய்ந்து வெளிப்படுத்தப்படவில்லை,

சித்த மருத்துவம் கண்ட மருந்துக் கோட்பாடுகள் Theories of Medicines) வியப்பிற்குரியவை!

எடுத்துக்காட்டாக, ஒரு நோய்க்குக் கூறப்படும் மருந்துகள் பலவாக உள்ளன!

ஒரு நோய்க்கு ஒரு மருந்துதான் என்பதைத் தமிழ்ச்சித்த மருத்துவம் ஏற்றுக்கொள்ளவில்லை! நடைமுறையில், ஒரு நோய்க்குப் பல மருந்துகள் ஏற்பட்ட உண்மையை ஒரு போதும் சித்த மருத்துவம் ஒதுக்கியதில்லை!

அவ்வாறு, ஒரு நோய்க்குக் கூறப்படும் பல மருந்துகளை உன்னிப்பாக நோக்கினால், அதில் ஒரு மருந்து மிக எளிமையானதாக, பலரும் தயாரித்துப் பின்பற்றக் கூடியதாக அமைந்திருக்கும்! அத்தகைய மருந்தே காலத்தை வென்று நின்றுள்ளது.

தயாரிக்கக் கடுமை தரும் மருந்து முறைகள் மெல்ல மெல்ல மறைந்தன என்று கருதலாம்!

அப்படி மறைந்தவை போக எஞ்சியுள்ளவைகளே, இங்கு பதிப்பிக்கப்படும் நூலில் உள்ளவைகள் என நாம் அறிதல் தகும்!

எடுத்துக்காட்டாக, சிலவிதக் காய்ச்சல்களுக்கு மருந்தாகக் கந்தகம், அரிதாரம், இன்னும் பல மூலிகைகளைக் கலந்துசெய்யும் ஒரு மருந்தை இங்கு பதிப்பிக்கப்படும் இந்நூல் கூறும். அதே வேளையில், அதே இடத்தில், மிக எளிய மருந்து ஒன்றும் கூறப்பட்டுள்ளது, "கஞ்சாங்கோரையைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்" என்பதே அது!

இந்த இரு மருந்துகளையும் நன்கு ஆய வேண்டும்!

அஃதாவது, பின்னர் கூறப்பட்ட கஞ்சாங்கோரைக் கசாயம் என்பது இயற்கை மருத்துவம்; தமிழன், அவனது வாழ்வின் போக்கில் இயற்கையாக அல்லது தற்செயலாகக் கண்டறிந்தது!

முன்னர் மொழியப்பட்ட கந்தகம், அரிதாரம் முதலியன கலந்து செய்த மருந்து இயற்கை மருந்து அல்ல! செயற்கை மருந்து! அஃதாவது, சேர்க்கப்பட்ட மருந்து! மருத்துவ அறிவாளி ஒருவன், பலபொருட்களையும் அறிந்து தெளிந்தபின் சேர்த்த மருந்து அது! இது, மருத்துவக் கலையின் வளர்ச்சியைச் சுட்டுவது! மருத்துவ அறிவின் உயர்ச்சியைப் பறை சாற்றுவது! மருத்துவ அறிவை நிலைப்படுத்துவது (Standardising the medical knowledge)!

இவ்வாறு, சித்த மருத்துவ மருந்துகள் ஆய்வுக்கு இடனாக உள்ளன!

சித்தமருத்துவர்கள் மேற்போக்காக நோய்களுக்கான மருந்துகளைக் கூறியதாகத் தெரியவில்லை!

வயிற்றுவலி என்றால், அதில் எத்தனையோ வகைகள் உள்ளன! சுரம் என்றால், அதிலும் எத்தனையோ பிரிவுகள் உள்ளன!

இப்படிப்பட்ட நோய்ப் பிரிவுகளை எல்லாம் பல நூறு, ஆண்டுகளாகக் கூர்ந்து நோக்கி ஆய்ந்து பனை ஓலைச் சுவடிகளில் குறித்துக்கொண்டு, பரம்பரை பரம்பரையாகக் கருத்துகளைத் தவழவிட்டு, இன்ன நோயில் மொத்தம் இத்தனை பிரிவுகளே என்று அறுதியிட்டுள்ளனர் தமிழர்கள்!

இது சித்த மருத்துவத்தின் சிறந்த பண்புகளில் குறிக்கத் தக்கது!

எடுத்துக்காட்டாக இந்த நமது நூலிலேயே இன்ன நோய் இத்தனை வகைப்படும் என்பதற்கான குறிப்புகள் ஆங்காங்கே உள. சிலவற்றை நாம் கீழே காணலாம்:-

| வ.எண் | நோய் | வகைகள் |
|---|---|---|
| 1. | வாயுத்திரட்சி | 36 |
| 2. | வயிற்று வியாதி | 66 |
| 3. | சதையடைப்பு | 18 |
| 4. | பித்தம் | 128 |
| 5. | சன்னி | 18 |

இவ்வளவு நுணுக்கமாக நோயைக் கண்டு தெளிந்தபின் தான் மருத்துவம் செய்யவேண்டும் என்பது சித்தமருத்துவக் கோட்பாடு (Theory of Siddha System)!

தமிழர்களிடையே இக்கருத்து ஊறவேதான், வள்ளுவர், "நோய் நாடி, நோய் முதல் நாடி" என்ற குறள் யாக்க விழைந்தார் என மதிப்பிடலாம்.

தமிழர்கண்ட சித்தமருத்துவ மருந்துகளை மூன்று வகைக் காலக்கட்டங்களில் அடக்கிக் காணமுடியும்:-

1. எளிய, இயற்கை மருத்துவம் கண்ட காலம்

2 வணிகம் பெருகிய காலக்கட்டம்

3. தொழில்நுட்பம் தோன்றிய காலக்கட்டம்.

1. ''சுக்கை அரைத்து நெற்றியில் தடவ, தலைவலி தீரும்''- இது முதற்காலக் கட்டம்.

இவ்வாறு எளிய மருத்துவமே சித்த மருத்துவத்தின் ஆரம்ப மருத்துவம் என்று கருதலாம்.

பல்வேறு வகை நோய்களுக்கு இவ்வாறு எளிய தமிழ் மருத்துவம் கூறப்பட்டுள்ளது!

2. அடுத்ததாக, வாணிகம் பெருகிய ஒரு நிலையில், மலைபடு, காடுபடு பொருட்கள், மருத்துவர்களின் கைக்கு எளிதிற் கிட்டவே, அவர்கள் அவற்றைக்கொண்டு தங்களின் தொழில் திறனைப் பலவாறாக வெளிக்காட்டினர்; புதிது புதிதாக மருந்துச் சேர்க்கை களை அப்படித்தான் அவர்கள் உருவாக்கினார்கள்! மருந்துகள் செய்வதில் ஒருவரை ஒருவர் விஞ்சினர்! இன்ன பொருளைச் சேர்த்தால், இன்ன விளைவு ஏற்படும் என்று தெளிவைக் கைக் கொண்டனர்!

3. மூன்றாம் கட்டத்தில், தொழில் நுட்பம் பெருகியது!

குழித்தைலம், காய்ச்சி வடித்தல், புடம் போடுதல், இரச வேலைகள், முப்பு தயாரித்தல், வாலை வடித்தல் போன்ற தொழில் நுணுக்கங்கள் இந்த காலத்தில் பெருகின!

சிறந்த தொழில்நுட்பங்களைப் புகுத்தி ஒருவரை ஒருவர் விஞ்சினர்!

இரசத்தை முறிப்பதற்கு அது வழி என்று ஒருவர் சொன்னால் இதோ இன்னொரு வழி என்று வேறு ஒரு தமிழ் மருத்துவர் சொல்லும் வளர்ச்சி நிலை ஏற்பட்டது.

இந்நூலில். மேற்கண்ட மூன்று காலக்கட்டங்களின் ஒரு தொகுப்பைப் பார்க்கிறோம்.

மருந்து செய்யும் போது இன்னபக்குவத்தில் இறக்க வேண்டும் என்பதை வெகு எளிதாக, அதே நேரத்தில் வெகு துல்லியமாகக் கூறியவர்கள் தமிழர்கள்!

'மெழுகுப் பதத்தில் இறக்கவும்', 'கம்பிப் பதத்தில் இறக்கவும்', என்றெல்லாம் மருத்துவ ஓலைச் சுவடிகளில் காண்கிறோம்.

அஃதாவது, அந்த மருந்தைக் கிண்டிக் கொண்டிருக்கும் போதே, மருந்தானது மெல்ல மெல்லக் கெட்டிப்படும்; ஆனால் மிகவும் கல் போலக் கெட்டியாகிவிடக் கூடாது! இடைப்பட்ட நிலையில், அந்த மருந்தானது மெழுகைப் போலத் திரளும்! அப்போது இறக்கவேண்டும்!

நமது இந்த மருத்துவ நூலில், 'மிளகு மிதக்கும் பக்குவத்தில் இறக்கவேண்டும்' என்று கண்டுள்ளது வியப்பானது!

நல்லெண்ணையையும் மிளகையும் ஒன்றாகக் காய்ச்ச வேண்டும்; எதுவரை காய்ச்ச வேண்டுமாம்! காய்ச்சிக் கொண்டிருக்கும் போதே, அந்த மிளகுகள் மேலே வந்து மிதக்குமாம், அப்போது இறக்கிவிடவேண்டும்! இஃது ஒரு பக்குவம்! துல்லியமானது!

தமிழர் கண்ட அறிவியல் நுட்பமே இது!

ஆயுர்வேதம் என்ற மருத்துவமுறை, தமிழர்களின் சித்த மருத்துவமுறையின் ஒரு பிரிவுதான்! ஆனால், உலகு ஆயுர்வேதத்தை அறிந்திருப்பதைப் போலத் தமிழர்களின் சித்தமருத்துவம் அறியப்படவில்லை!

நெல்லிக்காயிலிருந்தே லேகியம் செய்து வைத்துக்கொண்டு, அதற்கு ஒரு வடமொழிப் பெயர் ஒட்டினால், விற்பனை ஆகிறது!

அதே மருந்திற்கு 'நெல்லிக்காய் லேகியம்' என்று எழுதினால், எவரும் வாங்குவதில்லை!

இது தமிழர்களின் சித்தமருத்துவம், தமிழ்நாட்டிலேயே, தமிழர்களாலேயே, புறக்கணிக்கப்படுவதற்கு ஓர் எடுத்துக்காட்டு! சான்று!

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், தமிழ் மருத்துவத்தை அடியோடு ஒழித்துக்கட்ட ஒரு முயற்சி நடந்துள்ளது!

ஆங்கிலேயர்களுக்குத் தமிழ் மருத்துவத்தை எல்லாம், தமிழ் மருத்துவம் என்றோ, சித்தமருத்துவம் என்றோ தெரிவிக்காமல், எல்லாம் 'ஆயுர்வேதம்' என்று அவர்களுக்குத் தவறாகத் தெரிவித்துள்ள ஒரு சூழ்ச்சியையும் நாம் காண்கிறோம்; ஆங்கிலேயர் நூற்களால் இது தெளிவாகிறது!

ஆனால், தமிழ் மருத்துவம் ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டிருந்ததால், சூழ்ச்சி பலிக்கவில்லை!

**ஓலைச்சுவடியால் தமிழ் மருத்துவம் பிழைத்தது** என்றுகூட நாம் கூறலாம்!

மருத்துவ நூற்களின் நடை அலாதியானது! சுவையானது! ஒவ்வொரு நூலிலும் ஒரு நடையழகு இருக்கும்!

முதலில் நடையை அறிந்து கொண்டு, பிறகு பொருளைத் தெளியவேண்டும். எடுத்துக்காட்டாக,

''ஆடாதோடைச்சாறு

நெய்

பால்-

வகைக்குப் படி 1''

என்று இருந்தால், மேலே வந்த 3 பொருட்களிலும் ஒவ்வொரு படி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது பொருள்; அஃதாவது, 'வகைக்கு' என்று இறுதியில் வந்தால், அதற்கு முன்பு சொல்லப் பட்ட பொருள்கள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஆய்வுப் புதையலாக விளங்குகிறது இந்நூல்!

அன்புடன்

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**

எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ. பிஎச்.டி.

பதிப்பாசிரியர்

## Mortar and Pestle !

Tamil Siddha medical system is an ancient one - C. 4500 years old!

In fact it had paved the way to some other medical systems like Ayurveda.

Since the Tamil community was very ancient when compared to other communities of India, many achievements had taken place on Tamil soil.

One can not but wonder at the present book.

Innumerable medicinal herbs, powders, seeds, oils etc., have been dealt with here.

In fact a complete list of sanative substances in Siddha system has not yet been prepared by us.

This volume will help much in this line.

**Dr. S. Soundarapandian**
M.A., M.A., B.Ed., Dip. Skt , Ph.D.
Editor

# வைத்தியச் சாத்திரம்

## 1. சங்கவேர் கற்பம்

சங்கவேர் காடியிலரைத்துத் தின்னச் சர்வ வியாதியும், வெள்ளாட்டுக் கோமயத்தில் அரைத்துக் குடிக்கச் சூலை வியாதியும் பாகலிலைச் சாற்றில் - காமாலையும், பசுவின் நெய்யில் பெருவயிறும், எண்ணையிற்—பாண்டும், பசுவின் கோமயத்தில் — பீசமும் வீக்கமும், பசுவின் பாலிற் — பெரும்பாடும் தீரும்!

வேப்பெண்ணையில் நசியமிட, ஒரு தலை நோயும் தீரும்.

## 2. வசம்புக் கற்பம்

வசம்புச் சூர்ணம் படி 2, நெல்லிக்காய்ச் சாற்றில் பிசறி உலர்த்துக. இப்படிப், 12 தரம் பிசறி யுலர்த்திப், புதுக் கலசத்தி லிட்டு, வேடுகட்டித் 90 நாள் தானியப்புடம் வைத்து எடுத்து, வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ள, பெருத்த வாதத் தேகம் இளைக்கும்!

நெய்யில் கொள்ள, இளைத்த தேகம் பருக்கும்!
ஒரு மண்டலங் கொள்ளவும்.
புளி விடவும்.
(புளி விடவும் - புளியைத் தின்னக் கூடாது).

## 3. ஈசல் கற்பம்

முருக்கிதழ் போலச் சிவப்பாய் முற்றிய ஈசல்களைப் பீங்கானி லிட்டுக், கால் பணவெடை வெண்காரஞ் சேர்த்துப் பிசைந்து, வெய்யிலில் வைக்கத் தைலம் இறங்கும்.

மேற்படி தைலம் கழஞ்சு 1, கந்தகம் கழஞ்சு 1, பெருங்காயம் கழஞ்சு 1 இந்துப்பு கழஞ்சு 1, வேப்பின் முத்துப் பருப்பு கழஞ்சு 1 - இவைகளை யரைக்கக் குழம்பாகும்.

மேற்படி குழம்பு பாக்களவு வெற்றிலையில் தடவிக் கொடுக்கப் பாம்புக்கடி தீரும்!

பஞ்சிற்றோய்த்து நசியமிட, விஷமிறங்கி, வுயிர் எழுந்திருக்கும்!

கண்ணிலிட அடியில், குழம்பில் பணவெடை $\frac{1}{8}$, சீனிக்கற்பூரம் வராகனெடை நசியமிட அடக்க மெழுந்திருக்கும்.

நான்று கொண்டு உயிர் அடக்கமானால், உச்சியில் குடோரி யாடிக் குழம்பிட்டு, நெருப்பெழத் தேய்க்கவும்.

அடக்கம் விழிக்கும்; பின்னும் நசியமிடவும்.

பிள்ளையில்லாதார்க்கு, வீட்டுக்கு விலக்கமான நாலாம் நாள், வெற்றிலையில் பாக்களவு கொடுக்கப், பிள்ளை யுண்டாம்!

இந்தக் குழம்பு, மஞ்சாடி அளவு 8 நாள் தின்று, நீரிழிவு, மூத்திரப் பாழை, மூத்திரவிசதி தீரும்!

பனங் கருப்புக் கட்டியில், மஞ்சாடியளவு 8 நாளுண்ண மூல ரோகம் தீரும்!

### 4. சிற்றாமணக்கின் கற்பம்

சிற்றாமணக் கெண்ணையும், பெருங்காயமும் சேர்த்து, இள வெந்நீரில் கொடுக்க, குன்மம், வயிற்றுவலி, தீரும்!

மேற்படி எண்ணையில் இந்துப்பு பொடித்துக் கொடுக்கப், பெருவயிறு தீரும்!

மேற்படி பருப்பவும், சிறு கடுகும் பாலிலரைத்துக் கொடுக்கலும் பெருவயிறு தீரும்!

மேற்படி எண்ணையும், பூசனிக்காய்ச் சாறும் கலந்து குடிக்கப் பிச்சு தீரும்!

### 5. காதில் புழு

ஆடு தின்னாப்பாலை யிலையைக் கசக்கிப் பிழியப், புழு விழும்.

## 6. காதில் வலி

காது நோவுக்குப் பேய்ச்சுரை விதையை எண்ணையிற் கொதிக்கவைத்து விடவும்.

(எண்ணை என்பது, சிற்றாமணக்கு எண்ணை).

## 7. காது கேளாததற்கு

பெருங்கொன்னைப் பட்டையும் முருங்கைப்பட்டை யிலையும் கசக்கிப் பிழியவும்.

## 8. இரணங்களுக்கு எண்ணை

இரசம்
அதிமதுரம்
செங்கழுநீர்க் கோட்டம்
சுக்கு
கஸ்தூரி மஞ்சள்
வெள்வெங்காயம்
வசம்பு
செண்பகப்பூ
வெளிச்சிப்பிசின்
கருங்குங்கிலியம்
நெல்லிக்காரக் கந்தகம்
காசுக்கட்டி
நன்னாரி வேர்
பொன்முசுட்டைவேர்
புங்கம் வேர்
அவுரிவேர்
வேம்பாடப்பட்டை
வகைக்கு வராகன் - 1
எண்ணை படி 1/2

மேற்படி மருந்துகளைத் தட்டிப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிச் சீலையில் தோய்த்துப் புண்ணுக்குப் போட,

1. கண்டமாலை
2. பிளவை

3. விப்புருதி
4. அரைக்கடி
5. பவுத்திரம்
6. சிலந்தி
7. அரையாப்பு

இன்னும் அநேகம் புண்கள் தீரும்!

## 9. பிள்ளை பெற்றவளின் வயிற்று வியாதி

பிள்ளை பெற்ற வயிற்றில், இரத்தசீதம் விழுந்தால்,

வசம்பு
சுக்கு
ஊமத்தம் கவர்

இம் மூன்றையும் அரைத்துப், பொங்கக் கொதிக்க வைத்து, அடி வயிற்றில் வலிக்கிற இடத்தில் மூன்றுநாள் பூச, வயிற்று வியாதி குணமாகும்.

## 10. படு விழுகிற மேகத்திற்கு

1. கருங்குறுவை யரிசி இரண்டாவது களைந்த கழுநீரும், ஆதிப்பட்டை சாறு சரிகூட்டிச், சருக்கரை சேர்த்துக் குடிக்கவும்.

பத்தியம் - அரைக்கீரைகள் கூட்டவும்.

2. குப்பைமேனிக் கொழுந்து
முடக்கொற்றான் கொழுந்து
தேங்காய்ப்பால்

அரைத்து, வேகவைத்துச் சாப்பிடவும்.

3. அருகம் வேர்
நற்சீரகம்

பசுவின்னெய்யி லரைத்து, 3 நாள் சாப்பிடவும்.

## 11. இலைக்கள்ளிக் கற்பம்

இலைக்கள்ளிவேர் உலர்த்திப் பொடித்த சூரணம், குளவிந்த மஞ்சள் சூரணம் சேர்த்து இவ்விரண்டும் வெள்ளாட்டு நெய்யி லுண்ண

### 12. சரீரம் நன்றாக

மேற்படி இலைக்கள்ளிச் சூரணம் பாற்சோற்றிலுண்ணச் சரீரம் நன்றாகும்!

மேற்படி சூரணத்தை நெற்றியிலிட்டுச் செல்ல இராசவசியம் முதலியன வுண்டாகும்!

### 13. குட்டம் தீர

மேற்படி சூரணமும், மிளகுப் பொடியும் கோசலத்தில் கொள்ள, 18 குட்டமுந் தீரும்!

### 14. மூலரோகம் தீர

மேற்படி சூரணம், எண்ணையில் கொள்ள, மூலரோகம் தீரும்!

### 15. வெதுப்பும் குளிரும் போக

மேற்படி வேரும், மேற்படி கள்ளியிலையும் புகைபோட, வெதுப்பும், குளிரும்போம்!

### 16. கணப்பித்தம், உள் காய்ச்சல்களுக்கு

பூசனிக்காய்ச்சாறு
கருப்பஞ்சாறு
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு
நெல்லிக்காய்ச்சாறு
பசுவினெய்
வகைக்குப் படி 4
ஏலம்
அதிமதுரம்
முந்திரிப்பழம்
வகைக்குப் பலம் 1
கருப்புக்கட்டி
சுக்கு

இருநாழிநீர் வார்த்து, கரைத்துக் காய்ச்சி 4 தரங் கொடுக்க, நீர்ப்பாடு, தாகமும் நிற்கும்.

## 17. செரியமைக்குணத்துக்கு

இரண்டு வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிப் பெருங்காயத்தைப் பொடித்து வைத்துச் சுருட்டிக் கருதில் கோர்த்துச் சுட்டுக், காடியிலிட்டுத் தண்ணீர்விட்டுப் பிசைந்து குடிக்க, வயிற்றிலுண்டான சோறும், அசீரணக் கழிச்சலும் தீரும்!

## 18. நீரடைப்புக்கு

வெள்ளரிக்காய்ச்சாறு
வாழைக்கிழங்குச்சாறு
கற்றாலஞ்சாறு
நெல்லெண்ணை
வகைக்குப் படி 1

சேர்த்து,

அதிமதுரம்
திப்பிலி
இந்துப்பு
நெருஞ்சிக்காய்
சந்தனம்
முந்திரிப்பழம்
சிறுபூளைவேர்
வெள்ளரி விதை-
வகைக்கு வராகனெடை -1

பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சி, மேலுக்கு ஓத்தடமிடவும்; சலம், மலம் விடும்.

## 19. நீரடைப்பிற்கு

நீரடைப்புக்கு நெருஞ்சிச் சமூலம் கசாயமிட்டுக் கொடுக்கவும். (சமூலம்-இலை, தண்டு, பூ, காய், வேர் முதலிய செடியின் எல்லா உறுப்புகளும்)

## 20. சலம், மலம் விட

மேற்படி நெருஞ்சிச்சமூலம், ஆவாரஞ்சருகு, அரைச்சருகு, இஞ்சி இவைகளையும் கசாய மேலதையுமிட்டுக் கொடுக்கவும்.

சலம், மலம் விடும்.

(மேலதை-மேலே சொல்லப்பட்ட கசாயத்தை)

## 21. குண்டியக்காரத்திற்கு

மொசுமொசுக்கைச்சாறு

வெங்காயச்சாறு

இவ்விரண்டும் கலந்து கொடுக்க அக்கரை முறியும். இரத்தம் உடனே நிற்கும்.

கைகண்டது.

## 22. வாயில் இரத்தம் விழுவதற்கு

மணத்தக்காளியை யரைத்து, 3 உருண்டை கொடுக்கவும் தீரும்!

## 23. நீர்ப்பாட்டுக்கு

சாதிக்காய்
சாதிப்பத்திரி
பொரித்த வெண்காரம்

இவ்வைந்து வகையும் கூட்டி, எண்ணை வார்த்து, மைபோல ரைத்துப், பருத்திக்கொட்டையளவு கொடுக்கவும்.

## 24. வல்லாரைக் கற்பம்

வல்லாரை யிலையை நிழலிலுலர்த்திச் சூரணித்துக் காடியில் கொள்ளச், சகல வியாதியும் தீரும்!

60 நாளுண்ண, நரை திரை மாறும்!
90 நாள் சாப்பிட கேட்டதெல்லாம் தரிக்கும்!

## 25. சங்கம் வேர் கற்பம்

வடக்கே போகிற சங்கம் வேரைக் கோலாலே கல்லிப் பிடுங்கி, மேற்புறஞ் சீவி, நிழலிலுலர்த்திப் பொடித்து, வஸ்திர காயஞ் செய்து, புதுக் கலசத்தில் வைத்துக்கொண்டு, சுபதினத்தில், நெய்யிற் குழைத்து, நாற்பது நாள் சாப்பிடச், சரீரத்திலுள்ள சகல வியாதியும் தீரும்!

குட்டம் 18ம் தீரும்!.
பிள்ளையில்லார்க்குப் பிள்ளை உண்டாகும்!
நரை திரை மாறும்!
வெள்ளாட்டு முரியில் கொள்ளச் சோகை தீரும்!
(வஸ்திரகாயம் - துணியில் வடிகட்டுதல்)

(வெள்ளாட்டு முரி - வெள்ளாட்டு உரோமத்தாலான கம்பளித் துணி; இதில் வடிகட்டுவர்.

இருக்குவேதத்தில், ஆட்டு ரோமத் துணியில் சோமபானம் வடிகட்டுதல் கூறப்படுகிறது. இம்மருத்துவச் சுவடிக் குறிப்பால் இருக்குவேத நாகரிகத்திற்கு அடிப்படை தமிழர் நாகரிகமே என்ற குறிப்பு உள்ளமை புலனாகிறது.)

## 26. மூக்கிலும் வாயிலும் இரத்தம் விழுதலுக்கு

கடுக்காயைப் பொடித்து ஆடாதோடைச் சாற்றில், 14 தபா சுவறச் சுவறச் ஊறவைத்து, உலர்த்திப் பொடித்துத் தேனில் மூன்று கழஞ்சு வீதமுண்ண, மூக்கில், வாயில், தண்டில் விழுகிற இரத்தம், இருமல், பெரும்பாடு தீரும்!

வாதத்தால் இரத்தம் வந்தால் நாற்றம்; உள் நாக்கு வறட்சி; நாசியிற் புண்ணாயிருக்கும்.

அதற்கு மருந்து, நாசியிர் பசுவினெய் நிறுத்தவும்.
கல்லுப்பை, வெள்ளாட்டுப் பாலில் நசியமிடவும்.

பித்தத்தால் வந்தால், மூக்கில் மஞ்சள் சாறுபோல் நீர் விழும் நாறும்.

மருந்துக்குக் குறுவை நெல்லரிசி பழையது, கற்கண்டு சர்க்கரை எருக்கம்பாலிலரைத்து நசியமிடவும்.

## 27. மூக்கடைப்பு

மூக்கடைப்பு, இரத்தம் விழுதல், தலைக்கனம் இவைகளுக்கு ஒரு நெல்லிமுள்ளியைச் சூரணித்து, வெல்லங்கூட்டிப் பிசைந் துருட்டிக், காலையில் 4 கழஞ்சு வீதம் சாப்பிடவும்.

## 28. மூக்கு நாற்றம்

மூக்கு நாற்றம், இரத்தம் விழுதலுக்குத் துளசிச்சாறு, மஞ்சள் சாறு, சாரணையிலைச்சாறு, நல்லெண்ணை-வகைக்குப் படி $\frac{1}{8}$ ஊற்றி யிடித்துப் பதமாய்க் காய்ச்சி நசியமிடவும்.

கைகண்டது.

## 29. தாம்பிர பற்பம்

சுத்தித்த செம்பை, வெங்காயச் சருகுபோல் லேசாய்த் தகடடித்துப் பொடியாகச்சே, வெட்டின கழஞ்சு 8, இரசம், கந்தகம், கல்லுப்பு சேர்த்து, வகைக்குக் கழஞ்சு 1 பொடித்துத் தேங்காய்த் தொட்டியிலிட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு, வெய்யிலில் வைக்க, உருகிக் கரையும், இதைக் கிண்டி, யுலர்த்திப், பொடித்து, வளையல் குப்பியிலிட்டுத் துணியிலடைத்து, ஏழு சீலைமண் செய்து, சாடியில் மணலிட்டு வைத்து, மேலும் மணலிட்டு, மேற்சாடி மூடி, சந்துவாய் சீலைமண் செய்து, அடுப்பில் வைத்து, மெதுவாய் எரிக்கவும்.

மேற் சாடியின்மேல், வைக்கோலைப் போடப், பற்றி யெரிந் தால், தீயையாற்றி, ஒரு நாளிருந்து, மறுநாளெடுக்கக் கற்பமா யிருக்கும்!

சர்க்கரையில் காற்பணவெடை கொடுக்கக் குடல்வாதம், நாபிச்சூலை, குடல் புரட்டு, வாயுத்திரட்சி, கவுசை, விப்புருதி முதலியன தீரும்!

பத்தியம் - குருவி, முயல்,

துவரம் பருப்பு,

தூதுவிளங்காய்,

தண்டங்கீரை,

வெள்ளரிக்காய்,

வெள்ளாட்டு வற்றல் ஆகும்.

(வெள்ளாட்டு வற்றல் - உப்புக் கண்டம்).

## 30. சுரசிந்தாமணி மாத்திரை

அப்பிரகம்

இரசம்

கந்தகம்

நேர்வாளம்

வகைக்குப் பலம் 1

திப்பிலி கழஞ்சு 1

எலுமிச்சம்பழச் சாற்றி லரைத்துக் குளிகை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும்.

இஞ்சிச்சாறு அல்லது சுக்குக் கசாயத்தில் பித்தச்சுரமும், ஆடாதோடைச்சாறு அல்லது குதிரைவாளச் சாற்றில் வாத சுரமும், சிலேட்டுமச் சுரமும் தீரும்!

## 31. சச்ச வயிரவன் மாத்திரை

இரசம்

நாபி

கந்தகம்

சாதிக்காய்

வகைக்கு வராகனெடை 1

திப்பிலி வராகனெடை 2

வெற்றிலைச் சாற்றிலரைத்து, உளுந்தளவு மாத்திரை செய்து அனுபானத்திலிடவும்.

## 32. ஆனந்த வயிரவ மாத்திரை

சாதிலிங்கம்

நாபி

சுக்கு

திப்பிலி

மிளகு

வெண்காரம்

கந்தகம்

இவைகளைச் சுத்தித்து, எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து, மிளகளவு உண்டை செய்து, இஞ்சிச் சாற்றிலிடவும்.

## 33. வங்கப்பற்பம்

வெள்ளீயம் வேண்டியது சட்டியிலிட்டு, முளிமஞ்சள் (?) பலம் 2, ஓமம் படி 1 பொடித்துச் சிறுகச் சிறுகப் போட்டு, இருப்புக் கரண்டியால் வறுக்கத், திருநீறுபோல் பற்பமாகும்.

கற்றாழை மண்டி ஆழாக்கு, மணப்பாகு (?) பாக்களவுங் கூட்டி, யதில், 2 பணவெடை பற்பம் சேர்த்துப், 15 நாள் சாப்பிட மோர்போல் சிறுநீரிறங்குவதும், பசுவின் பாலும் மணப் பாகுங் கூட்டி, 2 பணவெடை பற்பம் சாப்பிட, இரத்தம் போல் நீரிறங்குவதும், ஆவரங் கொழுந்தை எருமை மோரிலரைத்ததில், $\frac{1}{2}$ வராகனெடை பற்பம் சேர்த்துச் சாப்பிடச் சலக்கழிச்சலும் 2 வராகனெடை ஏலம் பொடித்துப் பசுவின் வெண்ணையில் குழைத் ததில் அரை வராகனெடை சேர்த்துச் சாப்பிட, வாய் விசந்தியும், மேற்படி பற்பம் தேனிற் கொள்ளச் சரீரம் பருக்கும்.

அதிமதுரச் சூரணம் வராகனெடை 3இல், அப்பிரகப் பற்பமும் மேற்படி வகைக்கு வராகனெடை $2\frac{1}{2}$ சேர்த்துண்ண வெகுசலமும், மேற்படி 2 வகை பற்பத்துடன் மேற்படி 2 வகை செந்தூரமுஞ் சேர்த்துப் பச்சைக் கற்பூரம் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுக்க மார்பெறிப்பும், எள்ளுந் தேங்காயும் வறுத்தரைத்ததில் பணவெடை பற்பம் கொடுக்கச் சன்னியும்;

அம்மான் பச்சரிசிச் சாறாழாக்கில் 2 பணவெடை கொடுக்க ஆண்கட்டும்; சர்க்கரையிற் கொள்ள எரிமூத்திரமும்; ஆமுக்கீரை வேர்ப்பட்டைச் சாற்றில் கொள்ள, மூக்கில் ரத்தம் விழுவதும், பூசனிக்காய்ச் சாற்றில் கைகாலெரிப்பும் தீரும்!

பத்தியமாயிருக்கவும்.

## 34. பூபதி பற்பம்

இரசம் பலம் 1
ஏழுதலைவேர்
நெல்லிப்பருப்பு
வாய்விளங்கம்
ஏலம்
லவங்கம்
லவங்கப்பத்திரி
கோரைக்கிழங்கு
சுக்கு
மிளகு
திப்பிலி
கடுக்காய்

சரியெடை; சுத்தித்தவேர் இவைகளைச் சூரணித்து, வெருகடிப் பிரமாணம் சர்க்கரை கூட்டி, இளவெந்நீர் கொள்ள,

1. வயிற்று நோய்
2. மூலவியாதி
3. வயிற்று எரிப்பு
4. வாதம்
5. பித்தம்
6. சிலேட்டுமம்
7. பாண்டு ரோகங்கள்
8. காமாலை

இவைகள் தீரும்.

## 35. பெருவயிறு, வீக்கத்திற்கு

பேய்ப்பீர்க்கங்காய்ச் சாற்றைக் குழம்பாகக் காய்ச்சி, அதற்குச் சரியாகப் புளிவிட்டு, துழாவித் திரட்டி வைத்துக் கொண்டு, பாக்களவு இளவெந்நீரில் 8 நாள் சாப்பிடப், பெருவயிறு (மகோதரம்), புறநீர்க்கோவை தீரும்!

## 36. வயிறு வீக்கத்திற்கு

செவ்வலரி வேர், சன்னசாலைக்கடுகும் (?) எலுமிச்சம்பழச் சாற்றி லரைத்துப் பூசவும்.

மேற்படிக்கு, நாயுருவிச் சாம்பலைப் பசுவின் கோமயத்தில் கரைத்து, வடித்துக் காய்ச்சி வெய்யிலில் வைத்துத் தேனில் சாப்பிடத் தீரும்!

## 37. முகம், கைகால் வீக்கத்திற்கு

மூக்கிரட்டை வேர், கீழாநெல்லி வேரும் வகைக்கு விளங்காய்ப் பிரமாணம் அரைத்து, அரிசிமாவுடன் கலந்து, கூழ் காய்ச்சி 3 நாள் தின்ன வீக்கம் வற்றும்.

## 38. மருந்தீட்டுக்கு

வல்லாரையும், நல்லாரையும், சரியா யரைத்துப் பசுவின் பாலில் சாப்பிடவும்.

மேற்படிக்கு, எலுமிச்சம் பழச்சாற்றில் துருசு கொடுக்க ஒடுக்கும்.

பயற்றங்கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

## 39. சீதச் சுரத்திற்குத் தசமூலக் கசாயம்

பாதிரி

சிறுமுன்னை

பெருவாகை

வில்வம்
கண்டங்கத்தரி
நெருஞ்சி
பெருங்குமிழ்
சிற்றாமுட்டி
சீந்தில் தண்டு
பற்பாடகம்
சுக்கு
காரெள்ளுப் பொரி

இவைகளைப் பொடித்து, வடிகட்டிய தயிரிற் கொள்ள, அதிசாரச் சுரந் தீரும்!

## 40. பித்தச் சுரத்திற்கு

முந்திரிப்பழம்
சீந்திற் தண்டு
பற்பாடகம்
முத்தக்காசு
கடுகுரோகணி

இவைகளைச் கசாயமிட்டுக் கொடுக்க, வாதச் சுரம் தீரும்!

## 41. சிலேட்டுமச் சுரத்திற்கு

கண்டங்கத்திரிவேர்
தூதுவளை வேர்
மிளகறச்சவேர் (?)
வாகைப் பட்டை
தேற்றாங்கொட்டை
சுக்கு
மிளகு
திப்பிலி

வகைக்கு வராகனெடை - 1, இவைகளைக் கசாயமிட்டுத் திப்பிலிப் பொடி சேர்த்துக் கொடுக்கவும்.

## 42. அதிசாரச் சுரத்திற்கு

சுக்கு

கடுக்காய்

முத்தக்காசு

அதிவிடயம்

தேவதாரம்

இவைகளைச் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

## 43. சிலேட்டுமச் சுரத்திற்கு

1. நன்னாரி வேர்

கோட்டம்

இலுப்பைப் பூ

இவைகளைக் கசாயமிட்டுத், தேன் சேர்த்துக் கொடுக்கவும்.

2. மேற்படிக்குப் பேராமுட்டி வேர், சிறுவழுதலை வேர், ஆடாதோடை வேர், முத்தக்காசு, செங்கழுநீர்க் கோட்டம், சிறு தேக்கு, நிலவேம்பு, சிறு கோஞ்சோறி வேர் இவைகளைக் கசாய மிட்டுக் கொடுக்கவும்.

## 44. வாதச் சுரத்திற்கு

1. பேராமுட்டி

கொத்துமல்லி

பேரீஞ்சு

நெற்பொரி

இவைகளைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

2. மேற்படிக்கு, கண்டங்கத்திரி வேரும், சுக்கும் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

3. மேற்படிக்கு, சீந்தித் தண்டு, நெல்லி வற்றல், சிறுகாஞ் சோறி, இருவேலி, மிளகு, சுக்கு, கடுக்காய் இவைகளைக் கசாய மிட்டுக் கொள்ளவும்.

## 45. சிலேட்டுமச் சுரத்திற்கு

கறிவேம்பு
கண்டங்கத்திரி
நொச்சி
கரிசலாங்கண்ணி
பற்படாகம்
நன்னாரி
வில்வம்
காவட்டம் புல்
துளசி
கஞ்சாங்கோரை
ஆடாதோடை

இவைகளைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

## 46. அதிசாரச் சுரத்திற்கு

வட்டத்திருப்பி
முத்தக்காசு
மலைவேம்பு
மாதுளை
காசுக்கட்டி
சீந்தில்தண்டு
மஞ்சள்
கொத்தான்வேர்
கொன்றைப்பட்டை
துலரைவேர்
அதிவிடயம்
திப்பிலி

சுக்கு
நிலவேம்பு
சிறுவழுதலைவேர்
கண்டங்கத்திரிவேர்
பேய்ப்புடல்
நெற்பொரி

இவைகளைக் கசாயமிட்டுண்க. வாதச்சுரம் தீரும்!

2. மேற்படிக்கு,
சிறுவழுதலை
வேப்பம்பட்டை
கடுக்காய்
தான்றிக்காய்
நெல்லிமுள்ளி
கண்டங்கத்திரி

இவைகளைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

## 47. குன்ம வகைக்கு

பேய்க்குமட்டி யெண்ணை
காட்டாமணக்கின் கிழங்கு
சிலதைவேர்
அழிஞ்சியிலை
காசரணம்வேர்
சாரணைவேர்
வேலிப்பருத்திவேர்
கொடுவேலிவேர்
பாவட்டைவேர்
நொச்சிவேர்
தழுதாழைவேர்
விழும்பிவேர்

நன்னாரிவேர்
குமிழம்வேர்
கழற்கொடிவேர்
பிரண்டைவேர்
முன்னைவேர்
வில்வவேர்
வாகைவேர்
புனல் முருங்கைப்பட்டை
கற்றாழம் வேர்
தூதுவளை வேர்
சிற்றாமணக்கம் வேர்
கொன்றைப்பட்டை
கண்டங்கத்திரிச் சமூலம்
நில ஆவரை வேர்
புளியம் பிரண்டைக்கிழங்கு
முடக்கொற்றான்
மாவிலங்கப்பட்டை
ஆயப்பட்டை
புங்கம்பட்டை
கொட்டைக்கரந்தை
கறிவேப்பம்பட்டை
ஆடாதோடை
செருப்படை
பொடுதலை
கோணவங்கிழங்கு
பிரண்டை

வகைக்குப் பலம் 2, பேய்க்குமட்டிக்காய் 50 இவைகளைச் சிறுக நறுக்கி, யிடித்து, எட்டு மரக்கால் தண்ணீர் போட்டு, நாலிலொன்றாய்க் காய்ச்சி வடித்து, மூன்றுபடி விளக்கெண்ணை சேர்த்து,

அரத்தை
தேவதாரம்
கோஷ்டம்
குங்குமம்
மரமஞ்சள்
செவியம்
சிறுதேக்கு
செவ்வல்லிக்கொடி
கருஞ்சீரகம்
நற்சீரகம்
வெந்தயம்
தக்கோலம்
கார்போகரிசி
இந்துப்பு
பெருங்காயம்
கடுகுரோகணி
காந்தம்
கற்கடகச்சிங்கி
விளாவரிசி
திப்பிலி
சதகுப்பை
கிராம்பு
வெட்பாலையரிசி
வசம்பு-

வகைக்கு வராகனெடை 4

அசமதாகம்
வாலுளுவை
மிளகு

வகைக்கு ஆழாக்கு 1

கடுக்காய் 100
வெள்வெங்காயம் 20

தானிக்காரம் 20

சாதிக்காய் 6

நேர்வாளவிதை 200

கழற்சிப் பருப்பு 20

புரசங்கொட்டை 50

சேங்கொட்டை 20

இவைகளை உரலிலிடித்து அல்லது அரைத்து, மேற்படி கசாயம் வகை கரைத்து, மூன்றுநாலார வைத்து, நான்காம் நாள் காய்ச்சி மெழுகுப் பதத்தில் பிடித்துக்கொண்டு, வியாதி கடினமாயிருந்தால் 1 கரண்டி வீதம் 3 நாள் கொடுத்துப், பின் ஒன்றுவிட் டொரு நாளாகப் 10 நாள் கொடுக்கவும்.

வியாதி, யதிகமானால், 1 காசெடை வீதம் கொடுக்கவும்.

பத்தியம். வெய்யில் படாமலிருக்கவும்; முருக்கைக் காய் முருங்கைக் கீரை சேர்க்கவும்.

1. குடல்வாதம்
2. கழல்வாதம்
3. பக்கச்சூலை
4. சூலை
5. பொருமல்
6. வாயு
7. குன்மம்
8. வலிக்குன்மம்
9. எரிகுன்மம்
10. வாதச்சூலை
11. அக்கினிமந்தம்
12. கடகரை
13. அகுவை
14. கவுசை
15. வெப்பு
16. வாலி, வியாதிகள் தீரும்!

## 48. நேத்திர வாயுவுக்கு

1. சாதிக்காய்
   விலாமிச்சம்வேர்
   சமுத்திரப்பச்சை
   செண்பகப்பூ அரும்பு
   பூலாங் கிழங்கு
   கல்நார்
   தேவதாரம்
   இரத்தச்சந்தனக்கட்டை
   நல்லசந்தனக்கட்டை
   சடாமஞ்சி
   அதிமதுரம்
   கோஷ்டம்
   மஞ்சிட்டி

வகைக்கு வராகனெடை - 2, பசுவின் பாலிலரைத்து, **எண்ணையி** விட்டுக் காய்ச்சி, மெழுகுப் பதத்திலிறக்கி, 4 நாளைக் கொருதரம் **2** கிலமறைப்பிட்டு முழுகவும்.

1. அஸ்தி சுரம்
2. மேகச்சுரம்
3. நெடுநாள் சுரம்
4. கண்ணெரிவு
5. கைகாலெரிவு, தீரும் !

2. மேற்படிக்கு,
   அதிமதுரம் வராகனெடை 1
   ஏலம் வராகனெடை 3
   லவங்கப்பட்டை வராகனெடை 1
   கொத்துமல்லி வராகனெடை 2
   வாய்விளங்கம் வராகனெடை 5

செண்பகவரும்பு வராகனெடை 5
நெல்லிப் பருப்பு வராகனெடை 2
மிளகு வராகனெடை 3
கிராம்பு வராகனெடை 1
மனோசிலை வராகனெடை 1
சவுக்காரம் வராகனெடை 1
அரிதாரம் வராகனெடை 1
சாதிக்காய் வராகனெடை 2
கோரோசனை வராகனெடை 1
மரமஞ்சள் வராகனெடை 2
மஞ்சிட்டி வராகனெடை 2
திப்பிலி வராகனெடை 4
வெட்டிவேர் வராகனெடை 4
விலாமிச்சம் வேர் வராகனெடை 3
செஞ்சந்தனக் கட்டை
நல்லசந்தனக் கட்டை
கோரைக் கிழங்கு
தான்றிக்காய்
பூலாங்கிழங்கு
வகைக்கு வராகனெடை - 2
சாதிப்பத்திரி
சீரகம்
கடுக்காய்
கஸ்தூரி மஞ்சள்
வகைக்கு வராகனெடை 1
திப்பிலி மூலம்
வங்காரப் பச்சை
வகைக்கு வராகனெடை 3
சிறுநாகப்பூ
கோஷ்டம்
சதகுப்பை

வகைக்கு வராகனெடை 5

குந்திரிக்கம் வராகனெடை 1

இவைகளைச் சூரணித்துத் தாழைவிழுதுச் சாறு பண்ணிச்

சிறுகீரை

பொன்னாங்கண்ணி

வெற்றிலை

முடக்கொற்றான்

கற்றாழைவேர்

வட்டச்சாரணை

சீதாச் செங்கழுநீர்

நீர் வள்ளிக்கிழங்கு

வகைக்குச் சாறு படி 1/4

எலுமிச்சம் பழச்சாறு

இளநீர்

வகைக்குப் படி 1/2

நெல்லிக்காய்ச் சாறு

பசுவின் பால்

நல்லெண்ணை

வகைக்குப் படி 3

இவைகளைக் கலந்து, 2 நாள் சூரியப்புடம் வைத்து, மூன்றாம் நாள் மேற்படி சூரணத்திற்சாகச் சேர்த்து, மெழுகுப் பதமாய்க் காய்ச்சி, வடித்து, நாலுநாளைக் கொருதரம் முழுகிவர, நேத்திர வாய்வு முதலியவைகள் தீரும்!

கைகண்டது.

பத்தியம் - புளி நீக்கவும்; உப்பு பத்தியம்.

## 49. வாதம் 80க்கும் தைலம்

காவிளவு 1

கோரைக்கிழங்கு வேர் 8

கற்றாழம் வேர் 4
ஆமணக்கம் வேர் 4
வெள்ளைச்சாரணை வேர் 4
சிறுகாஞ்சோறி வேர் 4
நெருஞ்சி வேர் 4
ஆதொண்டை வேர் 4
கருவேலம்பட்டை 8
அத்திவேர்ப்பட்டை 8
செங்கத்தாரிப்பட்டை 8
நிலஆவரை வேர் 4
கொட்டைக் கரந்தை 4
சித்தாமுட்டிவேர் 20
அமுக்கலாங்கிழங்கு 4
பூமிச்சர்க்கரைக்கிழங்கு 4
தண்ணீர்விட்டான் கிழங்கு 4
மருள்மஞ்சிக் கிழங்கு 4

இவைகளை நறுக்கி யிடித்து 16 வள்ளத் தண்ணீர்விட்டுப் 10 நாழி யாகக் காய்ச்சி, யதில்,

நெல்லிபருப்பு பலம் 8
லவங்கப்பட்டை பலம் 1
வாய்விளங்கம் பலம் 1
செண்பக அரும்பு பலம் 4
சந்தனக்கட்டை பலம் 4
அரத்தை பலம் 4
அதிமதுரம் பலம் 1
கடுகுரோகணி வராகனெடை 5
மணத்தக்காளி விதை 5
மஞ்சள் பலம் 1
மரமஞ்சள் பலம் 1
கொடிவேர் பலம் 5
திப்பிலி மூலம் பலம் 1

வசம்பு பலம் 5
சாதிப்பத்திரி வராகனெடை 5
விலாமிச்சம்வேர் பலம் 1
சிறுதேக்கு பலம் 1
மஞ்சிட்டி வராகனெடை 5
காட்டத்திப்பூ வராகனெடை 5
ஏலம்
கிராம்பு
லவங்கப்பத்திரி
சிறுநாகப்பூ வராகனெடை 5
கஸ்தூரி மஞ்சள் 1
மலைக்கஸ்தூரி மஞ்சள் வராகனெடை 5
சீரகம் வராகனெடை 5
கருஞ்சீரகம் வராகனெடை 5
சடாமஞ்சி வராகனெடை 5
செவியம் பலம் 1 -

இவைகள் சூரணித்துப் போட்டு, நொச்சியிலைச் சாறு படி 2, கொட்டைக்கரந்தைச் சாறு படி 1, கையாந்தகரை, முசுமுசுக்கை, பேய்ப்பீர்க்கு, பேய்ப்புடல், வாதமடக்கி, கற்றாழை, பொன்னாங் கண்ணி - வகைக்குச் சாறு படி 1,

பசுவின் பால் படி 4
நெல்லிப்பருப்பு படி 2
எண்ணை படி 4 -

இவைகளைச் சேர்த்துப் பொங்கக் காய்ச்சி, மேற்படி சூரணஞ் சேர்த்து, 3 நாள் மந்தக்கினியா யெரித்து, யிடித்துப் 12 நாள் தானியப்புடம் வைத்து எடுத்துக்கொண்டு, தலைமுழுகி நசியமிடவும்.

1. மிறுமந்தவாதம்
2. தனுர்வாதம்
3. சிரோ வாய்வு
4. விப்பிருதி
5. சூசிக வாய்வு
6. மண்டைப் பீனசம், தீரும்!

## 50. சன்னிக்குத் தைலம்

1. வேப்பம் விதை படி 2
பால் படி 1
கண்டம் பலம் 1
வசம்பு பலம் 4½
சதகுப்பை வராகனெடை 5
அரத்தை பலம் ½
கோரோசனை வராகனெடை 2
குங்குமப்பூ பலம் ½
நிலவேம்பு வராகனெடை 5
நாகப்பூ வராகனெடை 1
எருக்கம் பூ வராகனெடை ½
தேவதாரம் வராகனெடை 5
பச்சைப்பாம்புக்கண்டம் பலம் ½
கடுகுரோகணி வராகனெடை 5
வட்டத்திருப்பி வராகனெடை 5
மல்லிகைவேர் வராகனெடை 5
கடுக்காய் வராகனெடை 5

இவைகளைப் பொடித்து. நல்லெண்ணை உரி 1, வேப்பெண்ணை நாழி 1 ஆடாதோடைச்சாறு நாழி 1 இவைகளைக் கலந்ததிலிட்டுக் கடுகுப் பதமாய்க் காய்ச்சித், துவக்கிலிட்டுப் பிடிக்கத் தீரும்!

(துவக்கு-தோல்)

2. மேற்படிக்கு, ஊர்க்குருவி 10, இருபது குறுணி தண்ணீரி விட்டு, இரு நாழியாகக் காய்ச்சி எலுமிச்சம்பழச்சாறு, கையாந்த கரைச்சாறு, முலைப்பால் வகைக்கு படி 1, மணித் தக்காளி, கச்சந்திராய்ச் சாறு வகைக்குப் படி ½ வட்டத்திருப்பி, சீந்தில் தண்டு, நொச்சி, நன்னாரி, ஆடாதோடை இவைகளின் சாறு வகைக்குப் படி 1,

நல்லகிராம்பு பலம் 5
கண்டம் பலம் 5

நங்குமுப்பூ பலம் 1
வெள்ளுள்ளி பலம் ½
பேய்மிரட்டி வேர் பலம் ½
தேவதாரம் பலம் ½
மாடப்புறாவின் எச்சம் பலம் ½
முசுறுமுட்டை பலம் ½
நல்லெண்ணை
வேப்பெண்ணை
புங்கெண்ணை
விளக்கெண்ணை
பசுவின் நெய்
வகைக்குப் படி ¾

இவை சேர்த்து, மந்தாக்கினியா யெரித்துப் பதத்தில் வடித்துத் துவக்காயிட்டுப் பிடிக்கவும்.

பல் கிட்டியிருந்தால், வாய், உதடு, நாசி, மூக்கு, உச்சந்தலை முதலிய விடங்களிலிட்டுப் பிடிக்கவும்.

சகல சன்னியும் தீரும்!

சன்னிநாயகம், இதன் பெயர்.

## 51. பிரசாரிணித் தைலம்

முதியோர் கூந்தல் சமூலம் பலம் 100
பெருவாகை
குமிழ்
பத்திரி
முன்னை
வில்வம்
சிறுமல்லி
பெருமல்லி
சிறுவழுதலை
கண்டங்கத்தரி
நெருஞ்சி
சித்திசமூலம்

சிற்றாமுட்டி
பேராமுட்டி
நீர்முள்ளி
புனல்முருங்கை
சாரணை
சாதிச்சாரணை
சிற்றாமணக்கு
பேராமணக்கு
குறுகுறிஞ்சா
விழி
விடத்தேர்
தழுதாழை
எட்டி
அழிஞ்சி
காரிண்டு
செம்புளிச்சை
கொன்றை
நெருஞ்சி
இலவு
நீர்வள்ளி
சதுரக்கள்ளி
செங்கோட்டை
வெட்பாலைப்பட்டை
கருங்காலிப்பட்டை
தூதுவளைச் சமூலம்
சணப்பம் விதை
ஏறழிஞ்சி விதை
கொத்துமல்லி

வகைக்குப் பலம் 10

இரண்டு தூணி நீரிலிட்டுப் பதக்காகக் காய்ச்சி,

வெள்ளாட்டு இறைச்சிக் கசாயம் பதக்கு

கோசல (மாந்து) நல்லெண்ணை

சேர்த்து,

முத்தக்காசு
கஸ்தூரி மஞ்சள்
தேவதாரம்
நாணல் வேர்
தகரம்
குங்குமப்பட்டை
குகில்
காரகில்
கடுகு
சிற்றாமுட்டிவேர்
அரத்தை
கோட்டம்
சாதிக்காய்
அரேணுகம்
வசம்பு
வாய்விளங்கம்
கடுகுரோகணி
நன்னாரிவேர்
பெருமரப்பட்டை
தான்றிக்காய்
அவுரிவேர்
சிற்றரத்தை
ஏலம்
லவங்கப்பட்டை
சிறுநாகப்பூ
துத்தம்
துருசு
தக்கோலம் -
வகைக்குப் பலம் 1

மேற்படி கசாயத்தி லரைத்து, எண்ணெயிலிட்டுப் பதமாகக் காய்ச்சிச், சருவாங்கமும் பூசிப் பிடிக்க,

1. குசுமாகணம்
2. உன் மாதம்
3. விப்புருதி
4. மெல்ல நடக்கிற வாதம்

முதலிய சகலவாதமும் தீரும்! சரீரம் பெருக்கும் பலமுண்டாகும்.

## 52. கந்தகச் சுத்தி

கந்தகத்தைப் பாலிலிட்டுக் கரையக் காய்ச்சி, ஆறவைத்துப், புரை யூற்றித் தயிராகிய பின், கரைத்து இறுத்துவிட்டுக், கந்தகத்தையெடுத்துலர்த்தி, ஒரு சாடியில் குமரிச்சாறு அரைச் சாடிக்கு விட்டு, வேடுகட்டி, வேட்டின் பேரில் மேற்படி கந்தக முருக்கிக் கீழ்ச் சாடியி லிறங்கியிருக்கும்!

இப்படியே,

இலைக்கள்ளிச் சாறு
எருக்கலஞ்சாறு
மோர்க்காடி
ஆட்டு மூத்திரம்
பால்

இவைகளில் செய்தால் சுத்தியாகும்!

நாற்றம் இராது.

அவரைப் பயறளவு சர்க்கரையிற் கொடுக்கச்,

1. சிரங்கு
2. திமிரம்
3. உப்பிரம்
4. சூலை

முதலிய ரோகம் தீரும்!

## 53. அழிஞ்சித் தைலம்

அழிஞ்சிப்பட்டை பலம் 16
நொச்சிவேர்
காட்டுமுருங்கைவேர்
தழுதாழைவேர்
மாவிலங்கம் வேர்
விடத்தாலம் வேர்
கழற்சி வேர்

செம்புளிச்சை வேர்
புங்கம் வேர்
முற்றின வேப்பம் வேர்
சாரணை வேர்
பேராமுட்டி வேர்
அமுக்கலாம் வேர்
செம்முள்ளி வேர்
வகைக்குப் பலம் 4

இவைகளை யிடித்து, 12 வள்ளம் தண்ணீரிலிட்டு, 3 வள்ளமாகக் காய்ச்சி, யதில்,

பொன்னாங்கண்ணிச் சாறு
புங்கிலைச் சாறு
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு
மஞ்சள் கிழங்குச் சாறு - வகைக்குப் படி 1

சேர்த்து,

சுக்கு பலம் 2
மிளகு
திப்பிலி
கடுக்காய்
நெல்லிப் பருப்பு
கோரைக்கிழங்கு
வகைக்குப் பலம் 1
மணித்தக்காளி விதை
மஞ்சள்
மரமஞ்சள்
வாய்விளங்கம்
கொடிவேலிவேர்ப்பட்டை
திப்பிலி மூலம்
வசம்பு
விலாமிச்சம் வேர்

சிறுதேக்கு
மஞ்சிட்டி
ஏலம்
லவங்கம்
பத்திரி
சிறு நாகப் பூ
கஸ்தூரி மஞ்சள்
மலைக்கஸ்தூரி மஞ்சள்
சீரகம்
கருஞ்சீரகம்
அதிமதுரம்
சடாமஞ்சி
அரத்தை
செவியம்
கடுகுரோகணி
சாதிக்காய்
சாதிப்பத்திரி
கிராம்பு
சந்தனக்கட்டை
நன்னாரிவேர்
கோரோசனை

வகைக்கு வராகனெடை - 5

இவைகளைப் பொடித்து, மேற்படி கசாயத்தி லரைத்து,

நெல்லெண்ணை படி $1\frac{1}{2}$
வேப்பெண்ணை
புங்கெண்ணை
இலுப்பெண்ணை
வெள்ளெங்காயத் தைலம்

வகைக்குப் படி $\frac{1}{2}$

பசுவின் பால் படி 2

இவைகளைக் கலந்து 3 நாள் மந்தாக்கினியா யெரித்து, நான்காம் நாள் வடித்துக் கொள்ளவும்.

ஒரு காசெடை பொரிமாவில் சாப்பிட்டு, நசியமிட்டு, மூழ்கிவர

1. ஒருபுறம் அசத்து வாதம்
2. கருவ வாதம்
3. சிலேட்டுமம்
4. விப்புருதி
5. சூரியவாய்வு
6. பீனிசம் - 9

முதலிய பல வியாதிகள் தீரும்!

## 54. பவுத்திரத்திற்கு

சோமநாதம்
பெருங்காயம்
கோரோசனை
இந்துப்பு
திப்பிலி
சாதிக்காய்
கிராம்பு

வகைக்கு வராகனெடை 1

சித்திரமூலவேர்ப்பட்டை
செங்கத்தாரி மூலவேர்ப்பட்டை

வகைக்கு வராகனெடை 2

இவைகளை யரைத்து. 3 படி நல்லெண்ணை கலக்கிக் காய்ச்சிச் சிவந்த பதத்தில் வடித்துக்கொண்டு, அரைக்கால்படி எண்ணை வீதம் . . . . ஆணிவிழுந்த பவுத்திரவுந் தீரும்!

புண்ணுக்கு ஆவாரங் கொழுந்து வைத்துக் கட்டவும்.
நான்குவகைப் பவுத்திரமுந் தீரும்!

கைகண்டது.

## 55. பிள்ளையில்லாதவளுக்கு

### 1. பாட்டு

1. தோடவிழ் அமுத வள்ளி
உரையுடன் பிரமி பாகல்
நீடிய குறிஞ்சாச் சாறு
நேரிய கழற் கொடியும்
கூடிய இவைய னைத்தும்
குளித்தநாள் குடிப்பா ராகில்
பேடியும் பிள்ளை யுண்டாம்
பெண்மையும் இளையா ளாமே

### 2. மேற்படிக்கு

பிராமணர் எச்சில்
வாழையிலையைச் சுட்டசாம்பல்
ஏழுமிளகு
ஏழு முருங்கைப் பூ
வெள்வெங்காயம்
வசம்பு

இவைகளை யரைத்து, உள்ளுக்குக் கொடுத்து மோராலும் துவாளை யிடவும்.

(துவாளை-மேற்பூச்சு)

### 3. மேற்படிக்கு

வாய் பேசாமல் போய்த் துளசியை வலது கையுள்ளாகச் சுற்றிவந்து சூரியன் எதிரே மூன்று இலை பறித்துப்போட்டு, (பிறகு) ஒரு பிடி இலை பறித்துக் கொண்டு, ஏழ் எறும்பும் (?), முருங்கைப் பிஞ்சு, மிளகு, வெள் வெங்காயம் கூட்டியரைத்து, இளவெந்நீரில் கலக்கிக் கொடுத்து, மேனியிலும் திமிரிடவும்!

கை கண்டது!

## 56. வயிற்றுக் கடுப்புக்கு

சீரகத்தை வறுத்துப் பொடித்துச் சரி சீனிச்சர்க்கரை கலந்து சிற்றாமணக்கெண்ணையிலாகிலும், பசுவினெய்யிலாகிலும் சாப்பிடத் தீரும்!

## 57. சுரத்தின் பேரில் கண்ட விஷபார வீக்கத்திற்கு

சிற்றாவரைக் கிழங்கு
சத்திச்சாரணைக் கிழங்கு
குறட்டைக் கிழங்கு
நன்னாரி வேர்
நறுமுன்னை வேர்
பெருந்துத்தி வேர்
அழிஞ்சி வேர்ப்பட்டை
அவுரி வேர்ப்பட்டை
வட்டக் கிலுகிலுப்பை வேர்
முடக்கொற்றான் வேர்
வேலிப் பருத்தி வேர்
முருக்கிலை
செம்முள்ளியிலை
இண்டு இலை
சங்கிலை
சிறுவமுதலை யிலை
தூதுவளை யிலை
கையாந்தகரை யிலை
செருப்படியிலை
சங்கிலை
சிறு இலை
ஊமத்தை
கழற்சி
நரியுடைவேர்

சரியெடை

வெள்வெங்காயப்பருப்பு படி 1

இவைகளை யிடித்துப் 10 படி யெண்ணையிலிட்டுக் காய்ச்சி வடித்து, உள்ளுக்குக் கொடுத்து நாசி, செவி, சருவாங்கமு மிடத் தீரும்!

## 58. வாதச்சன்னிக்கு

மயிலாடி
குருந்து
பெருங்குருந்து
எருமைமுன்னை
வில்வம் வேர்
காற்றாடினாயன்
சங்கங்குப்பி
நொச்சி
முக்காவளை
எருக்கு

வகைக்குக் கழஞ்சு 2

உள்ளி
வசம்பு
கொத்துமல்லி
கருஞ்சீரகம்
வெளிச்சப்பிசின்

வகைக்குக் கழஞ்சு 2

இவைகளை யரைத்து,

வேப்பெண்ணை
நல்லெண்ணை
இலுப்பெண்ணை

வகைக்குப் படி 1 சேர்த்துப், பதமாய்க் காய்ச்சி வடித்துக் காசெடை உள்ளுக்குக் கொடுத்து, உச்சி, நாசி, செவி, கழுத்து, உள்ளங்கால் முதலிய இடங்களில் தேய்த்துப் பிடிக்க, ஒரு நாளில் தீரும்!

### 59. விஷபாகச்சுரத்திற்கு

விளக்கெண்ணை
கழுதைலத்திச்சாறு
நீர்முள்ளிச்சாறு
ஆடாதோடையிலைச்சாறு
நார்த்தையிலைச்சாறு
பருத்தியிலைச்சாறு
மணத்தக்காளியிலைச்சாறு
வெள்ளருகுச்சாறு
நல்லருகுச்சாறு

வகைக்குப்படி 1

கழுதைப்பால் படி ½

இவைகளைக் கலந்ததில் உள்ளி, வசம்பு, மேற்படி வேர்கள் வகைக்குக் கழஞ்சு-1, மேற்படி சாறுவிட்டு அரைத்து, நல்லெண்ணை படி 1 சேர்த்து, பதமாய்க் காய்ச்சி வடித்து, உள்ளுக்குக் கொடுத்து, மேலிலும் துவளையிட, விஷபாகச்சுரமும் தீரும்!

### 60. கர்ப்ப விப்புருதிக்குத் தைலம்

கடுக்காய்
மஞ்சள்
இந்துப்பு
கடுகு
வெள்ளுள்ளி
வெண்காரம்

வகைக்கு வராகனெடை 5

விழிவேர்
நாட்டாமணக்கின் வேர்
நிலவாகை வேர்

வகைக்குப் பலம் 3

இவைகளை யிடித்து, 8படி நீர் விட்டு, ஒருபடியாய்க் காய்ச்சி, மேற்படி 6 மருந்துகளையும் அரைத்து, ஒருபடி ஆமணக்கெண்ணை

யும், ஆழாக்குக் கள்ளிப்பாலும் கலந்து, பதமாய்க் காய்ச்சி, வடித்துக், கழஞ்செடை கொள்ளக், கர்ப்ப விப்புருதி வயிற்றுவாதி, கட்டு இவைகள் தீரும்!

புளி, புகை நீக்கவும்.

## 61. மேகத்திற்கு

1. நிலப்பனைக்கிழங்கு
2. பூமிச்சருக்கரைக்கிழங்கு
3. நல்ல நெருஞ்சிச் சமூலம்
4. ஆலம் விழுது
5. செருப்படைச் சமூலம்
6. சீந்தில் தண்டுவேர்
7. கோரைக்கிழங்கு

வகைக்குப் பலம்-1

8. கழற்சிவேர் பலம் 1/8
9. ஏலம்
10. சீரகம்

வகைக்கு வராகனெடை 3

11. வெல்லம் பலம் 1
12. வெள்ளாட்டுப்பால் படி 1
13. பசுவினெய் படி $1\frac{1}{2}$
14. செருப்படையிலைச்சாறு

இடித்து, மேற்படி, மருந்துகளைப் பால்விட்டரைத்துச் சீலை வடிகட்டி, நெய்விட்டுக் கொதிக்கிற சமயத்திலே எல்லாம் பொடித்துப் போட்டு, ஒரு கொதியான பின் சீரகம், ஏலம் பொடித்துப் போட்டு, மூன்று கொதியான பிறத்தி, விநாயகபூசை செய்து, வடித்து, அந்தி சந்தி இருநேரமும் கொள்ளவும்; ஒரு கரண்டியளவு 12 நாளைக்கு.

கைப்பு, புளி நீக்கவும்.

நாலு நாளைக்கொருக்கால் விளக்கெண்ணை இட்டு முழுகவும்.

கண்டங்கத்திரி நெய், கண்டங்கத்திச் சமூலம், பலம் 50 இடித்துத் தூணிநீர்விட்டுக் குறுணியாகக் காய்ச்சி,

நெய் படி 2
கண்டுபரங்கி
திப்பிலி மூலம்
சுக்கு
வசம்பு
கொடிவேலி வேர்
குடசப்பாலையரிசி
ஆனைத்திப்பிலி
கடுகு
செவியம்
இலந்தைக் கொட்டை
அரேணுகம்
வாய்விளங்கம்
அதிவிடயம்
ஏலம்
நிலவேம்பு
சதகுப்பை
பெருங்காயம்
வகைக்கு வராகனெடை $\frac{1}{2}$

மேற்படி கசாயம் விட்டரைத்து, உரி வேப்பெண்ணை சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ள,

1. காசம்
2. சுவாசம்
3. குன்மம்
4. மகோதரம்
5. பிரமியம்
6. இருமல்
7. அருசி
8. பீனிசம் தீரும்.

புளி, புகை இச்சாபத்தியம்
(அருசி - ருசியற்ற தன்மை)

### 62. மூலத்திற்கு

நாயுருவி நெய்

நாயுருவிச்சமூலம் பலம் 50

இடித்துத் தூணி நீர் எட்டொன்றாக்கி,

நெய் படி 2
கொடுவேலி வேர்
சுக்கு
திப்பிலி
மிளகு
சுத்த நேர்வாளம்
சிவதை வேர்
இந்துப்பு
வட்டத்திருப்பி
புங்கம் வேர்
ஆவாரை வேர்
பிரண்டை வேர்
காட்டுக் கருணைக்கிழங்கு
புளிநறளைக் கிழங்கு
மருள்கிழங்கு
கடுகு
வெண்கடுகு

வகைக்கு வராகனெடை 1

இவைகளை யரைத்து, வெள்ளாட்டுப்பால் படி 2, மேற்படி நெய் படி 1 சேர்த்துக் காய்ச்சிப், பதத்தில் வடித்துக் கொள்ள மூலம் 6ம் தீரும்!

புளி, புகை நீக்கவும்.

### 63. குன்மம் தீர

புளியாரை நெய்

புளியாரைச்சாறு படி 2

முத்தக்காசு படி 1

இடித்துக் கசாயம் படி 1 வைத்து, நெய் படி 1 சேர்த்துக்,

காட்டத்திப்பூ
கோட்டம்
சந்தனம்
திப்பிலி
அதிவிடயம்
வெள்ளிலோத்திரம்
செவியம்
கொடுவேலிவேர்
குடசப்பாலைவேர்
மரமஞ்சள்
தேவதாரம்
வட்டத்திருப்பி
வில்வக்காய்
நெய்தல் கிழங்கு

யிவைகளை யரைத்திட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ள, குன்மம், தீரும்!

## 64. இரத்தப்பீனிசத்திற்கு

ஈர வெங்காயம் பலம் 1
பழம் புளி எலுமிச்சங்காயளவு
கழுதை லத்தி
விளாங்காய்
மரமாணம் (?)
சுட்ட சாம்பல்
ஒரு கொட்டை வெள் வெங்காயம்
வசம்பு

இவைகளை யிடித்துத், தலையில் நாலு நாழிகை நேரம் நன்றாய்த் தேய்த்துத், தலைநிறைய மருந்தை வைத்து அப்பிக் கட்டி, பின்பெடுத்து, நாசியில் பிழியவும்.

பின்பு, மூன்று நாளைக்குப் பின்பு தலை முழுகவும்.

பத்தியம் - பாலுஞ் சோறும்.

## 65. அஸ்திச்சுரம், மேகவெட்டைக்கு

கோதுமை மா பலம் 3
கற்றாழஞ்சோறு பலம் 3
பசுவினெய் படி 1
கிராம்பு
சாதிக்காய்
ஏலம்
நற்சீரகம்

வகைக்கு வராகனெடை 6

கற்றாழஞ் சோற்றைச் சாடியிலிட்டுச் சிவக்க வெந்ததின்பின், நெய்யைவிட்டுப் பாகுபோலானபின், கோதுமை மாவைப் போட்டுக் குழம்பானபின், கிராம்புப் பூவைப் பொடித்திட்டுச் சீனிச் சருக்கரை ஒரு பலம் போட்டுப் பாகுப் பதமாய்க் கிழறிச் சாப்பிடவும்.

கற்றாழஞ்சோறு நன்றாய்க் கழுவிச் சேர்க்கவும்.

பத்தியம்

## 66. வாயில் இரத்தம் விழுவதற்கு

1. பருத்திவிதைத்தூள்
வெள்ளாட்டுப்பால்
வாழைப்பூச்சாறு
தேன்
ஈரவெங்காயச்சாறு
கோழிமுட்டை வெள்ளைக்கரு

இவைகளை நன்றாய்க் கலந்து மூன்று நாள் கொடுக்கவும்.

2. மேற்படிக்கு, இலவம்பட்டையை யிடித்துச் சாறு வாங்கித் தேன் சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும்.

### 67. சத்தி நிற்கிறதற்கு

1. ஏலம்
எலுமிச்சம்பழ விதை
வெற்றிலைக்காம்பு

இவைகளைப் பொடித்து, எலுமிச்சம்பழச் சாற்றில் குழைத்து, நாவில் தடவவும் மூன்று நாள்.

2. மேற்படிக்கு,

முள்ளிவேர்ப்பட்டைச்சாறு
கண கிழங்கு
மிளகு
ஓமம்
மஞ்சள்
நெற்பொரி

இவைகளை யரைத்து, எருமைமோரிலிட்டுக் காய்ச்சி, மூன்று நாள் கொடுக்கவும்.

### 68. நீரிழிவுக்கு

சிறுசெந்தொட்டிவேர்
நிலையாவரை வேர்
கொடிவேலிவேர்
பிரண்டைவேர்
மருள்மஞ்சிக்கிழங்கு

வகைக்குப் பலம் 1

இரண்டுபடி கருங்குறுவை யரிசிமாவுடன் சேர்த்திடித்துக், களி கிண்டிக் கருப்புக் கட்டியும் நெய்யுஞ் சேர்த்து, நாலு நாள் சாப்பிட நீரிழிவு தீரும்!

### 69. பிரமியம், பெரும்பாடு, எலும்புருக்கி இவைகளுக்கு

தூதுவளம்பூ
முருங்கைப்பூ
வகைக்குப்பலம் 4
தண்ணீர்விட்டான்கிழங்கு பலம் 3
நெருஞ்சிவேர் பலம் 1
பூனைக்காலிவேர் பலம் 1
அதிமதுரம் பலம் 2

இவைகளைச் சூரணித்துப் பசுவின் பால் பதக்கு 1 குழம்பாய்க் காய்ச்சி, யதில் மேற்படிச் சூரணத்தைத் தூவிக் கிண்டிப் பசுவி னெய்யும் சர்க்கரையும் போட்டுக் குழம்புப் பதமாய்க் கிளறிக் கொட்டைபாக்குப் பிரமாணம் காலை, மாலை சாப்பிடப் பிரமியம், பெரும்பாடு, எலும்புருக்கி தீரும்!

### 70. நீரடைப்புக்கு

பலகறை
சுட்டசாம்பல்
வெங்காரப்பொடி
நாயுருவிச் சாம்பல்
இவைகள் சமன்
எலுமிச்சம் பழச்சாறு
தேங்காய்ப்பாலும்

சரிகூட்டி, யரைத்துக் கலக்கி, மூன்று நாள் சாப்பிட மூத்திரக் கிருச்சரம், மாங்கிஷ அடைப்பு, நீர்க்கட்டு, கல்லடைப்பு தீரும்!

### 71. மதுக பூஷண வாதக் குளிகை

திப்பிலி கழஞ்சு 1
சுத்தித்த நேர்வாளம் கழஞ்சு 2
செங்கழுநீர்க் கோட்டம் கழஞ்சு 3

கடுகுரோகணி கழஞ்சு 4
மனோசிலை கழஞ்சு 5

இவைகளைச் சூரணித்து, மூன்றுபடி இலுப்பைப் பூவில் ஆறுபடி தண்ணீர்விட்டு, உரியளவாகக் காய்ச்சி, வடித்து, மேற்படி சூரணத்திற்கு விட்டரைத்து, இரண்டு குன்றிமணிப் பிரமாணம் குளிகை செய்து, நிழலிலுலர்த்திக் கொள்ளவும்.

முலைப்பாலில் அல்லது புழுக்கின இளநீரில் யிரண்டு குளிகை யரைத்துச் சர்க்கரை மேற்பொடி போட்டுச் சாப்பிடப், பித்தச் சுரம், சன்னிவாதச்சுரம் தீரும்!

(புழுக்கின - தீய்த்த)

## 72. அமுதராத்திக் குளிகை

ஏலம்
லவங்கம்
அதிமதுரம்
செங்கழுநீர்க் கிழங்கு
கோரோசனை
ஓரிலைத் தாமரை
காசுக்கட்டி
பற்படாகம்
சந்தனம்
வகைக்குக் கழஞ்சு 2

இவைகளை இளநீர் விட்டரைத்துக், குன்றியளவு குளிகை செய்து, நிழலிலுலர்த்தி, இளநீரில் சர்க்கரை மேற்பொடியிட்டுக் கொடுக்கத் தாகச்சுரம், நாவறட்சி தீரும்!

## 73. நாவறட்சிக்கு

கொத்துமல்லி
சுக்கு
பூசனித் தண்டு

இவைகளை யிடித்து, 2 படி நீரிலிட்டு, ஆழாக்காய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

பத்தியம் - பொரிக்கஞ்சி கொடுக்கவும்.

### 74. சீதப் பஞ்சசுரக் குளிகை

நொச்சிக் கொழுந்து
வேப்பங்கொழுந்து
நெல்லிக்காய்
கந்தகம்
அரிதாரம்
மிளகு
இந்துப்பு

வகைக்குக் கழஞ்சு 1

பசுவின் பாலிலரைத்துக் குன்றியளவு குளிகை செய்துலர்த்திப் புழுக்கிய இளநீரில், தேனில், முலைப்பாலில் கொடுக்க, தாகச்சுரம், இஞ்சிச் சாற்றில் சீதச்சுரம் தீரும்!

2. மேற்படி சுரங்களுக்குக் குடிநீர்:-
கஞ்சாங் கோரையைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

### 75. சன்னிக்கு வீரபத்திரக் குளிகை

1. எலிப்பற் பாஷாணம் 21 நாள், எருக்கம்பாலில், வெய்யிலில் ஊறவைத்துலர்த்தி,

இரசம்
சாதிலிங்கம்
கந்தகம் - வகைக்குக்
கழஞ்சு 1

இஞ்சிச் சாற்றிலரைத்து, உளுந்தளவு குளிகை செய்து, வெய்யிலிலுலர்த்தித் தேனும், முலைப்பாலுங் கலந்ததில் திப்பிலி, சூரணங் கலந்ததில் மேற்படி குளிகை, முலைப்பாலிலரைத்துச் சேர்த்துக் கொடுக்கத் தீரும்!

பத்தியம்-கொள்ளு பயிறு துவரை, அரி இவைகளை வறுத்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

2. இதற்குக் குடிநீர்

பெருவாகை வேர்
கண்டங்கத்திரிவேர்
பேசாமுட்டிவேர்
நெருஞ்சிவேர்
ஆடாதோடைவேர்

இவைகளை நறுக்கி யிடித்து. இருநாழி நீரிலிட்டு, ஆழாக்காய்க் காய்ச்சி, யதில் மேற்படி குளிகை 1 கரைத்துத் திப்பிலிப் பொடி தூவி, இரவிற் கொடுக்கச் சகல சன்னியுந் தீரும்!

## 76. சலக்கழிச்சல் 24 வகைக்கு

அறுகு
சிறுபூளை
கொடுப்பை
கையாந்தகரை
கீழாநெல்லி
முடக்கொற்றான்
நாயுருவி
தலைச்சுருளி
கறிவேப்பிலை
ஊமத்தை
சிற்றாமணக்கு
கச்சநாரத்தை
எலுமிச்சை
பாகல்
முசுமுசுக்கை
சுரை
பூசனி

இவைகளிலை வகைக்குப் பலம் 1 சாறுவாங்கிச்,

சிற்றாமணக்கு
நாரத்தை
எலுமிச்சை
குறுந்தொட்டி

எருக்கு
இலாமிச்சை
வெள்ளரி
சூரைப்பூசனி

இவைகளின் வேர்

நீர்வள்ளிக் கிழங்கு
இலுப்பை
அத்தி
அரசு
வேம்பு

இவைகளின் பட்டை வகைக்குப் பலம் 1

இவைகளை யிடித்து, நாழி நீர் விட்டு 3 நாளூற வைத்து 3 நாள் காடாக்கினியா யெரியவிட்டு, நாழியானபின் யிறக்கி அதில்,

ஆலமுகில்
அதிமதுரம்
சந்தனம்
சீரகம்
கார்போகரிசி
விளாவரிசி
வெங்காரம்
சுக்கு
மிளகு
வாலுளுவையரிசி
ஓமம்
சதகுப்பை
கந்தகம்
சாஸ்திரபேதி
கல்நார்
பெருங்காயம்
வகைக்குப் பலம் 1

இவைகளை யரைத்து, நல்லெண்ணை, பசுவினெய் வகைக்கு நாழி 1 மேற்சொன்னவைகளை யெல்லாம் சேர்த்து, மறுநாள் மெழுகுப்

பதத்தில் காய்ச்சி வடித்து நாலு நாளைக் கொருதரம் சீயக்கா யிட்டு முழுக

நாள்தோறும் சருவாங்கமும் காலையில் பூசி, மாலையில் எருமைச்சாணம் தேய்த்து, வெந்நீரில் குளிக்கவும்.

ஞாயிற்றுக்கிழமை சூரியனைப் பூசித்து இதைச் செய்யவும்.

**கைகண்டது**

## 77. மேற்படிக்குக் கருவங்கச் செந்தூரம்

அடிகனத்த சட்டியில், காரீயத்தைப் போட்டுருக்கி, ஆவரம் வேருலர்த்தி யிடித்துச் சூரணத்தைப் போட்டு வறுத்த பின்பு, ஆவரையரும்புலர்த்திப் பொடித்த சூரணத்தைப் போட்டு வறுத்துப், பின்பு வெங்காயம் போட்டு வறுத்துப், பின்பு மேற்படி யரும்புச் சூரணம் போட்டு வறுத்துப், பின்பு மேற்படி வேர்ச்சூரணம் போட்டு வறுக்கச் செந்தூரமாகும்!

## 78. மேற்படி செந்தூரக் கழஞ்சு

ஆவரைச்சமூலம்
ஆத்திமேல்புல்லுருவி
விளாம்பிசின்

இம்மூன்றின் சூரணம் சரிக்கூட்டி, யதில் சேர்த்து, பேயன் வாழைப் பழம், தேன், சர்க்கரை, இவைகளிலொன்றில் ஏழுநாள் கொள்ளவும்.

அல்லது, ஆவரைச்சமூலம் குழித்தைலமிறக்கி, யதில் மேற்படி செந்தூரக் கழஞ்சு கொள்ளத் தீரும்!

## 79. தாகத்திற்கு

வில்வப்பழத்தாணும், ஆவரை வேரும் அரைத்துத் தண்ணீரில் கொடுக்கத் தீரும்!

## 80. வங்சாளச் சஞ்சீவி அக்கினிகுமாரச் செந்தூரம்

அரப்பொடி
உருக்குப்பொடி
செம்புப்பொடி
பித்தளைப்பொடி
வெண்கலப்பொடி
ஊசிக்காந்தம்
வெண்காரம்
மனோசிலை
அரிதாரம்-
வகைக்குக் கழஞ்சு 1
ரசம்
நெல்லிக்காய்
கந்தகம்
வகைக்குப் பலம் 1

இவைகளைக் கற்றாழஞ்சாறு விட்டு, மூன்றுநாளரைத்துலர்த்தி, அடிகனத்த சட்டியிலிட்டு, மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்து, மூன்றுநாளிடைவிடாம லெரித்து, ஆறவிட்டெடுக்கச் செந்தூரமாம்!

மேற்படி செந்தூரம்,
பச்சைநாலி வராகனெடை 1 (சுத்தித்தது)
திப்பிலி பலம் 1
திப்பிலிமூலம் பலம் 1

வெள்வெங்காயத்திலரைத்து, அரைப் பணவெடையளவு குளிகை செய்து, வெள்வெங்காயத் தைலத்தில் 1 மாத்திரை, 10 நாள், காலை மாலை கொள்ள, வயிற்றுக் கொப்பு வாயில் புறப்படாது!

சரீரச் சிலந்தி, வாணமடித்த புண் முதலானது தீரும்!

எட்டுநா ளுண்ணக், கிருச்சிர வாதம் போம்!

வெருகடி திப்பிலிச் சூரணம், தேன் கூட்டி மேற்படி மாத்திரை 10 நாளுண்ண

1. பிரமியம்
2. கல்லடைப்பு
3. சதையடைப்பு-18
4. இந்திரியக் கண்டியா-5

5. மந்தவாயு
6. பித்தம்-128
7. உஷ்ணக்காரம்-226
8. சேற்றுமரோகம், தீரும்!

மேற்படியை, வெள்வெங்காயத் தைலத்தில் 24நாள் கொள்ள,

1. வயிற்றுவியாதி-66
2. வாயுத்திரட்சி-36
3. பெருவயிறு
4. விஷப்பாகம்
5. சோற்றுக் காமாலை
6. பாண்டு வகை, தீரும்!

மேற்படி மாத்திரை 1, திரிகடுகுச் சூரணத்துடன், இஞ்சிச் சாற்றி லரைத்துத், தேனில் வார்த்து, 24 நாள் கொள்ள,

1. சன்னி-18
2. வாய்வு-80
3. சத்திக்குன்மம்-26
4. பைத்தியம்
5. நாறுகுணம்
6. வாய்வு
7. முகவாதம்
8. மண்டைச் சூலை
9. பீனிசம்-18
10. நாசிவலி
11. பிடரிவலி
12. தலைநோய்
13. செவிநோய்
14. தொண்டைநோய்
15. நெஞ்சுநோய்
16. முயல்கண்டன்
17. அண்டவாதம்

18. குடல்வாதம்
19. ஆனந்தவாய்வு
20. அந்திரவாய்வு
21. உள்வலிப்பு
22. புறவலிப்பு
23. குதவாதம்
24. நடுக்குவாதம், முதலியவைகள் தீரும்!

## 81. ஈளைக் காசத்திற்கு

வெள்வெங்காயம்
மிளகு
சீரகம்
கடுக்காய்
திப்பிலி
சுக்கு
ஓமம்
கிராம்பு
கடுகுரோகணி
தூதுவளைவேர்
வேப்பஞ்சாறு

வகைக்குப்படி 1 கலந்ததில் போட்டுக் காய்ச்சிப், பதத்தில் வடித்து, நாள் 1க்குக் காசளவு நெய்கொள்ளத் தீரும்!

கைகண்டது.

## 82. வாய்வுகளுக்கு

முற்றிய பிரண்டையை நறுக்கிப்படி 2, கல்லுப்பு படி ½ சேர்த்து வைத்து, ஒரு தாழிச் சட்டியில் 500 எருக்கங்காயை வைத்து, மேற்படி மருந்தை வைத்து மேலும் 500 எருக்கங்காயை வைத்து, மேலோடு மூடிக், குழி வெட்டி, எருமுட்டம் போட்டு, அதன்மேல் வைத்துத், தீயிட்டு, நீறாக வெந்த பின்பெடுத்துப், பொடித்து,

இந்துப்பு
வெடியுப்பு
வளையலுப்பு
உவர்மண்ணுப்பு
வெங்காரம்
சீனிக்காரம்
சதிச்சாரம்
நவச்சாரம்
திப்பிலி
திப்பிலிமூலம்
மிளகு
நற்சீரகம்
கொத்துமல்லி
வாய்விளங்கம்
மஞ்சிட்டம்
வட்டத்திருப்பி
அதிவிடயம்
மாதுளையோடு
செங்கழுநீர்க்கோட்டம்
செண்பக அரும்பு
ஏலம்
கிராம்பு
லவங்கப்பட்டை
வில்வக்காய்
அதிமதுரம்

வகைக்குப் பலம் 1/2

இவைகளைச் சூரணித்து ஒரு பங்கும், மேற்படி பிரண்டைச் சூரணம் இரண்டு பங்கும் சேர்த்துக், கலந்துகொண்டு, 24 நாள் கொள்ள,

1. வாய்வு 10
2. குன்மம் 8

3. கிராணி
4. மேலுப்புசம்
5. புளியேப்பம்
6. மூத்திரக்குட்டம்
7. அக்கினிமந்தம்,

முதலியவை தீரும்!

பத்தியம் - காரங்கூட்டிப் புளி நீக்கவும்.

## 83. வாயுக்கிராணிக்கு

நெல்லிக்காய்
கடுக்காய்
திப்பிலி
சுக்கு
மிளகு
கழல்பருப்பு
வகைக்குக் கழஞ்சு 1
நேர்வாளம் கழஞ்சு 1

எலுமிச்சங்காய்ச் சாற்றில் வேகவைத்து, இவைகளைக் கையாந்தகரைச் சாற்றி லரைத்துக் கழற்சிப் பருப்பளவு மாத்திரை செய்து, நிழலிலுலர்த்திக் கையாந்தகரைச் சாற்றிலாதல் வெந்நீரிலாதல் கொள்ளத் தீரும்!

## 84. பவுத்திரத்திற்கு

1. கொடுவேலிவேர் சூரணித்து, வஸ்திர காயஞ் செய்து, பணவெடை சூரணம் நெய்விழுதில் பொதிந்து, 20 நாள் கொள்ளவும்.

கைப்பு, புளிப்பு நீக்கிப் பத்திய மிருக்கவும்.

2. மேற்படியைப் பசுவினெய் படி 2, பால்படி 4 சேர்த்துக் காம்ச்சி, ஒரு கொதியானபின்பு இறக்கி, மறுநாள் அதிலுள்ள நீரை வடித்துவிட்டு, ஒரு பலம் சர்க்கரை போட்டு வேதித்து, ஒரு கரண்டி வீதம் 15 நாள் கொள்ளவும்.

3. மேற்படிக்கு, அவரைவேர், நெருஞ்சி முள் வகைக்குப் பலம் $\frac{1}{2}$ வெவ்வேறரைத்து, எள் படி 1 கோழிக்காரம் வராகனெடை 5 இவைகளை யிடித்துப் பசுவினெய்யிற் குழப்பி ஒரு நாளைக்கு முன்னைக்காயளவு மூன்றுருண்டையாக 5 நாள் விழுங்கவும்.

## 85. பவுத்திர வீக்கத்திற்கு

முட்கொளிஞ்சிவேர் அரைத்துப் பூசவும்.

வீக்கம் பழுத்துடைந்தால், கீழாநெல்லி அரைத்துப் பூசவும்.

## 86. வாதத்திற்கு

எருக்கிலைச்சாறு
வாதமடக்கியிலைச்சாறு
நொச்சிச்சாறு
காட்டுமுருங்கைப்பட்டைச்சாறு
வெள்ளாட்டுப்பால்
புங்கெண்ணெ
இலுப்பெண்ணை

வகைக்குப் படி 1

கள்ளிப்பால்
நல்லெண்ணை
வேப்பெண்ணை
விளக்கெண்ணை

வகைக்குப் படி $\frac{1}{2}$

அதிமதுரம்
கோட்டம்
சதகுப்பை
தேவதாரம்
ஓமம்
வாய்விளங்கம்

மரமஞ்சள்
கஸ்தூரி மஞ்சள்
வெளிச்சப்பிசின்
வலம்புரிக்காய்
திப்பிலி மூலம்

வகைக்கு 1 பலம்

பெருங்காயம்
இரசம்
நெல்லிக்காய்
கந்தகம்
வெள்ளைப்பாஷாணம்
அரிதாரம்
மனோசிலை
நாவி
நீறுவிஷம்

வகைக்கு வராகனெடை $\frac{1}{2}$

இவைகளைப் பொடித்து, அரைத்து, மேற்படி சாறு முதலியவற்றில் கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து, மேலுக்குப் பூசிப் பிடிக்கவும்.

சாயந்தரம் வெந்நீரில் குளிக்கவும்.

இப்படி நாற்பதுநாள் செய்யவும்.

1. சன்னிவாதம்
2. திமிர்வாதம்
3. முகவாதம்
4. குத்துவாதம்
5. தோள்வாதம்
6. சருவாங்க வாதம்
7. பக்கவாதம்
8. எரிவாதம்
9. நடுக்கவாதம்
10. அரைக்கீல்வாதம்

11. துடிவாதம்
12. முறுக்குவாதம்
13. வீசுவாதம்
14. தனுர்வாதம்-முதலிய 80 வாதமுந் தீரும்!

## 87. முகச்சன்னி, கபாலச் சன்னிக்கு

சாரணைவேர்
அமுக்கலாம் வேர்
சிறுகுறிஞ்சாவேர்
செவ்வகத்தி வேர்
செப்புநெருஞ்சிவேர்
சீந்தில் தண்டு
சிற்றாமுட்டி வேர்
வில்வவேர்
கொடுவேலிவேர்
சிற்றாமணக்கம் வேர்
எட்டிவேர்
சுண்டைவேர்
வேப்பம்பட்டை
வெற்றிலைக்கொடி
தாழைவிழுது
ஆதொண்டைவேர்
மிளகரணைவேர்
நார்த்தம்வேர்
துளசிவேர்
பேய்ப்பீர்க்கம் வேர்
முள்ளிவேர்

வகைக்குப் பலம் 8

இவைகளை யிடித்து, 12 மரக்கால் தண்ணீர் விட்டு, நான்கு நாழியாகக் காய்ச்சி,

மிளகு
கடுக்காய்
தான்றிக்காய்
நெல்லிக்காய்
வெற்றிலை
மஞ்சள்
மரமஞ்சள்
குங்கிலியம்
விலாமிச்சம்வேர்
அரத்தை
திப்பிலி
வெட்டிவேர்

வகைக்கு வராகனெடை 10

இவைகளை யரைத்து, நல்லெண்ணை, பசுவின் பால் வகைக்குப் படி 2 - இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் இறக்கி, வடித்துக் கொண்டு, காலையில் தலைமுழுகிச், சாயந்தரம் வெந்நீரில் முழுகவும்.

வெந்நீரில் புழங்கி வரவும்.

## 88. பூதிகா தைலம்

ஆயப்பட்டை பலம் 100
மலைதாங்கி வேர்
சாரணை வேர்
சித்தாமுட்டி வேர்
வில்வ வேர்
புங்கம் வேர்
ஆமணக்கம் வேர்
சதுரக்கள்ளி வேர்
வெங்காயம்
மாவிலங்கம் வேர்

சித்திரமூலம் வேர்
தூதுவளைச்சமூலம்
எருக்கம் வேர்
வகைக்குப் பலம் 8

இவைகளை யிடித்து, 32 மரக்கால் தண்ணீர்விட்டு, நாலு மரக்காலாகக் காய்ச்சி, வடித்து, மேற்படி ஆயப்பட்டை பலம் 100ம் இடித்து, 16 மரக்கால் நீர் விட்டு, 2 மரக்காலாகக் காய்ச்சி, வடித்து,

தேங்காய்ப்பால்
வெள்ளாட்டுப்பால்
கொள்ளுவெந்தநீர்
வகைக்கு மரக்கால் 2

செம்பருத்தியிலைச்சாறு
நொச்சியிலைச்சாறு
தாளியிலைச்சாறு
கையாந்தகரயிலைச்சாறு
நல்லெண்ணை
வகைக்குப் பலம் 4

இலுப்பெண்ணை
வேப்பெண்ணை
கடுகெண்ணை
புங்கெண்ணை
வகைக்கு வள்ளம்-1

சிற்றாமுட்டி வேர்
அமுக்கலாம் வேர்
நிலஉகாவேர்
நொச்சிவேர்
முள்ளிவேர்
கண்டங்கத்திரி
நாயுருவிச்சமூலம்

கோரைக்கிழங்கு
பேய்க்குமட்டிவேர்
முருங்கைவேர்
தூதுவளைவேர்

**வகைக்குப்பலம்...**

ஆனைவசம்பு
வாய்விளங்கம்
நவச்சாரம்
சத்திச்சாரம்
சடாமஞ்சி
பூவநாகேசுரம்
குக்குலு
கருங்குங்கிலியம்
செங்கழுநீர்க்கோட்டம்
அதிமதுரம்
சந்தனம்
சிரகம்
கருஞ்சிரகம்
மஞ்சிட்டி
தேவதாரம்
திப்பிலி
பெருங்காயம்
கண்டுபரங்கி
நெல்லிக்காய்
கந்தகம்
அரிதாரம்
துத்தம்
நாவி
மனோசிலை
ஊசிக்காந்தம்

வெங்காரம்
கடுக்காய்
தான்றிக்காய்
கடுகு
வேப்பங்கொட்டை
இந்துப்பு
பஞ்சலவணம்
ஏலம்
லவங்கப்பட்டை
கல்லுப்பு
சாதிக்காய்
சாதிப்பத்திரி
திப்பிலி மூலம்
கடுகுரோகணி
சதகுப்பை
வசம்பு
திகிடை
வெட்டிவேர்

வகைக்குப் பலம் $\frac{1}{2}$

இவைகளைச் சூரணித்து, மேற்படி கசாயம் விட்டரைத்துச் சேர்த்துக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடித்துக்கொண்டு முழுகிவர,

1. சன்னி
2. சருவாங்கவாதம்
3. பித்தம்
4. தலைவலி, தீரும்!

## 89. நார்த்தங்காய்த் தைலம்

நார்த்தங்காய்ச்சாறு
கையாந்தகரைச்சாறு
துளசிச்சாறு

பேய்ப்பீர்க்கஞ்சாறு

நொச்சிச்சாறு

தாழைவிழுதுச்சாறு

வகைக்குப்படி 2

வடிகட்டி, நல்லெண்ணை, பசுவினெய், சிற்றாமணக்கெண்ணை வகைக்குப் படி ½ சேர்த்துத்,

திப்பிலி

மிளகு

சிற்றரத்தை

கடுக்காய்

தான்றிக்காய்

நெல்லிப்பருப்பு

அசமதாகம்

கஸ்தூரிமஞ்சள்

பேய்ப்பீர்க்கன் விதை

வகைக்கு வராகனெடை 5

சூரணித்திட்டுப், பசுவின்பால் படி 4 விட்டுக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடித்து, மூன்று நாளைக் கொருதரம் தலைக்குத் தேய்த்து முழுகி வரவும்.

கஸ்தூரி

கோரோசனை

குங்குமப்பூ

வகைக்குப் பணவெடை 2, அரைப்படி மேற்படி தைலத்தில் பொடித்திட்டு, வெண்கலக் கிண்ணத்தில் லகுவாய்க் காய்ச்சிப், பஞ்சில் நனைத்து 5, 6 துளி நசியமிடவும்.

1. மண்டைப் பீனிசம்
2. சிராய்ப் பீனிசம்
3. இரத்தப் பீனிசம்
4. விடாத் தலைநோய்
5. ஒருதலைவலி

6. கண்ணெரிவு
7. காதுகேளாமை
8. பல்லுநோய்
9. முகவிசிவு
10. நீர்ப் பீனிசம்
11. சிழ்ப்பீனிசம்
12. நாசியில் முருங்கை விதைத் தோல் போல் விழுதல்
13. அதில் இரத்தம் பரவையாய் விழுதல்
14. வெகுவாய் இரத்தம் விழுதல்
15. சிராய்விழுதல்
16. ஊளை நாற்றம்

இப்படி, நாசியிலும் கபாலத்திலும் உண்டான அநேக வியாதிகள் தீரும்!

பத்தியம் - குளிர்ந்த சலம், வெயில், காற்று, புளி, புகை நீக்கவும்; பால் துவரைக் கூட்டவும்.

## 90. வாதக் கோடரித் தைலம்

ஆயப்பட்டை பலம் 100
நொச்சிவேர் பலம் 20
புங்கம் பட்டை
காட்டுமுருங்கைப்பட்டை
எருக்கலாம் வேர்
ஆடாதோடைவேர்
வேப்பம்பட்டை
சங்கங்குப்பிவேர்
கொடுவேலிவேர்
மஞ்சனத்திவேர்
அறுகங்கிழங்கு
வகைக்குப் பலம் 10
எட்டிப்பழம் பலம் 15

இவைகளை யிடித்துப் 16 மரக்கால் தண்ணீர்விட்டு, 4 மரக் காலாகக் காய்ச்சிப் பிழிந்து,

வெள்ளாட்டுப்பால் படி 1

நல்லெண்ணை,

வேப்பெண்ணை

வகைக்குப் படி 4

சேர்த்துத், திப்பிலி, பெருங்காயம், வெள்வெங்காயம், ஓமம், கடுகு, சுக்கு - வகைக்குப் பலம் 1, நற்சீரகம், கருஞ்சீரகம்,

வகைக்குப் பலம் $\frac{1}{2}$,

வெந்தயம் பலம் $\frac{1}{2}$

மரமஞ்சள்

கஸ்தூரிமஞ்சள்

இந்துப்பு

சதகுப்பை

சித்திரமூலம்

ஏலம்

இலவங்கம்

மனோசிலை

வெள்ளைப்பாஷாணம்

வகைக்குப் பலம் 2

இவைகளைச் சூரணித்துப் போட்டு, முன்று நாள் காய்ச்கி, மெழுகுப் பதத்திலிறக்கி, 4 ஆம் நாள் வடித்து மேலே முறுக்கித் தேய்த்து, எட்டுநாளைக் கொருதரம் தலை முழுகவும்.

கடம்பூறாத்தைலம்(?) விட்டுத், தினசரி சாயங்காலம் வெந்நீர் விடவும்.

வாதம் எண்பதும், சன்னியும் தீரும்!

### 91. பித்தவிகாரத்திற்கு எண்ணெய்

சிந்தில்தண்டு

தாமரைக்கிழங்கு

நீர்வள்ளிக்கிழங்கு
பொன்னாங்கண்ணி வேர்
ஆவரைமொட்டுப் பூ
குறுந்தொட்டி வேர்
நன்னாரி வேர்
முத்தக்காசு
செவியம்
நெல்லிப் பருப்பு

வகைக்கு வராகனெடை 5

இளநீர்படி 2
எண்ணை
பசுவின்பால்

வகைக்குப் படி 1

அதிமதுரம்
ஏலம்
செண்பக மொட்டு
விலாமிச்சம் வேர்
மரமஞ்சள்
கோஷ்டம்
செவ்வன்னிக்கொடி
சடாமஞ்சி
கொத்துமல்லி
சீரகம்
கருஞ்சீரகம்
லவங்கம்
தகரம்
லவங்கப் பட்டை
கஸ்தூரிமஞ்சள்
சாஸ்திரப்பேதி
நெல்லிவற்றல்

அகிற்கட்டை
நன்னாரிவேர்
முத்தக்காசு
தேவதாரம்
செங்கழுநீர்க் கிழங்கு
சீதேவியார்
செங்கழுநீர் வேர்
நல்ல சந்தனம்

இவைகளை இளநீர் விட்டரைத்துக் கரைத்துக், காய்ச்சிப் பதத்தில் வடித்துக், கரண்டியளவு சாப்பிட்டுத் தலை முழுகிவரப், பித்த விகாரம் திரும்!

இது கை கண்டது.

## 92. பெரும்பாட்டுக்குப் பஞ்சகௌவிய கிருதம்

பால்
பசுவினெய்
தயிர்
கோசலம்
சாணிப்பால்

வகைக்குப்படி 2

கோஷ்டம்
அதிமதுரம்
சிறுதேக்கு
கொத்துமல்லி
வாய்விளங்கம்
வாலுளுவை
வெட்பாலையரிசி
திப்பிலி
வெள்ளுள்ளி
வசம்பு

அரப்பொடி
கருஞ்சீரகம்
தேவதாரம்
அரத்தை
இந்துப்பு
சதகுப்பை
சந்தனம்
பூதவிருட்சம்
நன்னாரிவேர்
பொன்முசுட்டைவேர்
கீழாநெல்லிவேர்
சாரணை வேர்
வெள்ளைச்சாரணைவேர்
சத்திச்சாரணைவேர்
கீழாநெல்லிவேர்
கொடுவேலிவேர்ப்பட்டை
மிளகரணைவேர்
துத்திவேர்
அதிவிடயம்
கடுகுரோகணி
துருசு
பெரும்குரும்பைவேர்
கிராம்பு
காந்தகம்
சாதிக்காய்
சாதிப்பத்திரி
கடுகு
தான்றிக்காய்
நெல்லிப்பருப்பு
வில்வவேர்

வகைக்குக் கழஞ்சு 1

இவைகளைக் கோசலம் விட்டரைத்துக் கலக்கி, நாலுநாள், சிறு கொதியிட்டு, ஐந்தாம் நாள் வடித்து, எட்டுநாள் தானியப்புடம் வைத்துக்கொண்டு, காலையில் ஒரு கழஞ்செடை கொள்ள,

1. பெரும்பாடு
2. பித்தக் காமாலை
3. கும்பக் காமாலை
4. பெருவயிறு

முதலிய வியாதிகள் தீரும்!

### 93. இருமலுக்கு

கையாந்தகரையிலை
நாயுருவியிலை
கருந்தக்காளி யிலை
தூதுவளையிலை
எருக்கிலை
மோட்டுப்பூ 2
வேலிப்பருத்தியிலை 4
நெல்லரிசி

இவைகளைச் சேர்த்தரைத்து, நெய்யில் அடைசுட்டுச் சாப்பிடத் தீரும்!

### 94. விக்கலுக்கு

பூழை வேரை மோரிலரைத்துத் தின்னத்தீரும்!

### 95. மரணக்குறி

[பாட்டு]

1. காலோடு புறங்கால் வீங்கிக்
கணக்கவே கண்சி வந்து
காலிலே எட்டு மென்று
தனஞ்செயன் கீழே யானால்

போதவே வயிறு வீங்கும்
 பொருமிடு முழலை செய்யும்
யாவரும் அறியச் சொன்னால்
 இதுகண்டால் விட்டுப் போமே!
 (உழலை - தாகம்)

2. முதுகோடு வயிறு வீங்கி
 மூலமும் தாதும் கெட்டுச்
செவியோடு வாயும் கண்ணும்
 சேயவன் பரிசும் குன்றி
முடுக்கிட வாறு மூன்று
 முதியவன் கீழே யாகில்
விதியவன் வசம தென்று
 விட்டுநீ விரைவாய்ப் போமே!

## 96. பித்தவெறி, பயித்தியம்

1. உன்மாதம், மருள், அறிநினைவு, ஆம்பல் இவைகளுக்கு,
அமுதவள்ளிக்கிழங்கு
மொசுமொசுக்கைவேர்
செங்கழுநீர்க் கிழங்கு
தாமரைக்கிழங்கு

இவைகளை யரைத்துச் சர்க்கரை கூட்டி, பாலிற் கொடுக்கவும்.

2. மேற்படிக்கு,
பசுவின்நெய் படி 1
இலாமிச்சம் வேர்
நன்னாரி வேர்
சந்தனம்
அதிமதுரம்
கோஷ்டம்
ஏலம்
இஞ்சி
மஞ்சிட்டி
செண்பகப்பூ

வகைக்கு வராகனெடை 1

இவைகளைப் பசுவின் பால்விட்டரைத்துக் கலக்கிப் பதமாய்க் காய்ச்சி, வடித்துக் கரண்டியளவு கொள்ளவும்.

## 97. அறியோலகத்திற்கு

1. முலைப்பால் ஆழாக்கு
   கழுதைப்பால் படி 2
   பசுவின்பால் படி $\frac{1}{2}$
   நாய்ப்பாகல் சாறு படி $\frac{1}{8}$
   நாங்கூழு பிடி 1

இவைகளைச் சேர்த்து, 3 நாள் கொடுக்கவும்.

மேற்படி மூன்று நாளும், நெய்யும், எலுமிச்சம்பழச் சாறும் கூட்டி, உச்சியில் தேய்த்து, மேற்படி பழம் ஒன்றுக்கு ஒவ்வொரு குடம் குளிர்ந்த சலம்விட்டு, நான்காம்நாள்,

துலாம்பட்டை
கோழிமயிர்
தலைமயிர்
முருங்கைப்பட்டை
முடக்கொற்றான்
ஆட்டுமயிர்
மாட்டுக் கொம்பு

இவைகளைப் பொடித்துப் புகை காட்டித் தும்பைச் சாற்றில் காதுக்குரும்பியை யுரைத்துக் கண்ணிலிடவும்.

2. மேற்படிக்கு, மதுக்கரைப் பழம் 10 இளவெந்நீரிற் பிசைந்து வடிகட்டி, முன்னமே அடுப்புக்கரியை யுரைத்து, உள்ளுக்குக் கொடுத்துப் பின்பு வாயிலும் வயிற்றிலும் போனபின், மோருஞ் சோறுங் கொடுத்து நிறுத்தி, மறுநாள் குட்டித்தக்காளிச்சாறு நாழி 2, குன்றியிலைச்சாறு நாழி, மொசுமொசுக்கைச்சாறு, தாளிச் சாறு, நரிப்பயற்றஞ்சாறு

வகைக்கு நாழி 1, பசுவின்பால் படி 2
இவைகளைக் கூட்டிப் படியாகக் காய்ச்சிச், சருக்கரை

அல்லது வெல்லம் பலம் 6 சேர்த்து, லேகியப்பதமாய்க் கிளறி, எலுமிச்சங் காயளவு கொள்ளவும்.

கைப்பு, எண்ணை, புளிப்பு நீக்கவும்.

## 98. பைத்தியத்திற்கு

1. பசுவினெய்

எலுமிச்சம் பழச்சாறு

நெய்க்கொட்டான் பழச்சாறு

இவைகளைச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி, மூன்று நாள் தலை முழுகவும்; உள்ளங்கை, உள்ளங் கால்களுக்கு நன்றாய்த் தேய்க்கவும்.

எலுமிச்சம் பழச்சாறும், நெல்லிக் காய்ச்சாறும் கலந்துள்ளுக்குக் கொடுக்கவும்.

2. மேற்படிக்கு, பேய்க்கோவைத் தண்டுச் சாற்றில், சிறுபயறு நனையப்போட்டுப் பிசைந்து, நாங்கூழு மரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

3. அல்லது, தேற்றான் சூரணம் வெந்நீரில் கொடுக்கவும்.

4. மேற்படிக்கு, பேய்ப்புடல் குறுணி நீரில் கஷாயமிட்டு, வறுத்த சீரகப் பொடியும் நெய்யும் விட்டுக் கொடுக்கவும்.

5. தேற்றான் பொடி, கோமயத்தில் கொடுக்கவும்.

6. கழுதைப்பாலும், முசுமுசுக்கை, முசுறு, முட்டைக்குஞ்சு இவைகளைச் கூட்டி, எட்டு நாள் கொடுக்கவும்.

7. வேப்பெண்ணையும், இலுப்பெண்ணையும் சரிகூட்டி, ஆருதின்னாப்பாலை வேர், பெருங்காயம், கடுகுரோகிணி, கடுக்காய் வெளிச்சப்பிசின், வசம்பு, வெங்காயம் சரிகூட்டி, மேற்படி எண்ணையிலிட்டுப் பதமாய்க் காய்ச்சி, உள்ளுக்குக் கொடுத்து, மேலிலும் துலவளையிடவும்.

8. மேற்படிக்கு, பூசணிக்காய்ச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு - வகைக்கு ¼ படி கலந்து கொடுக்கவும். முசுமுசுக்கையிலை, புளியிலை, முசுட்டையிலை இவைகளைக் கலந்து வைத்துச் சாறு வாங்கித் துவளையிடவும்.

9. மேற்படி வியாதிக்கு,

ஒரு கொட்டை வெள்ளுள்ளி 1

வசம்பு

எருக்கம்பால் துளி 1

இவைகளைக் கூட்டிச் சிறுநீரில் நசியமிடவும்.

பனங்கருப்புக் கட்டியில் எருக்கம்பால் துளி 2 சேர்த்து, உள்ளுக்குந்தர, வாந்தியாகும்.

அதிகமானால், மோருஞ்சோறும் கொடுக்கவும்.

தேற்றான் தழையைத் துவைத்து மேலே துவளையிடவும்.

மேற்படி தழையை யிடித்து, வதக்கி, ஒத்தடங் கொடுக்கவும்.

மேற்படி யிலைச் சாற்றைப் பசுவின்பாலிற் கலந்துள்ளுக்குக் கொடுக்கவும்.

முசுமுசுக்கை, பேய்ப்புடல் இவைகளைக் கசாயஞ் செய்து கொடுக்கவும்.

10. கோவைத் தண்டுச் சாறும், பழம் புளியும், எலுமிச்சம் பழச்சாறும் - இவைகளைச் கலந்து கொடுக்கவும்.

11. இஞ்சிச்சாறும், கழுதைப்பாலும், கலந்து, சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும்.

12. இலுப்பைப் புண்ணாக்கில் எருக்கலாம்பால் விட்டுச், சிறுநீர் கூட்டி மூன்று நாள் நசியமிடவும்.

## 99. இரசம்முறிய

1. தண்ணீர் வற்றிய தேங்காயைத் துருவி, ஒரு சட்டியி லிட்டு, அதில் நாலைந்து எலுமிச்சம்பழ மறுத்துப் பிழிந்து,

அதைப் பிசைந்து பிழிந்து, ஒரு சிறை உள்ளுக்குக் கொடுத்து, மேலுந் துவளையிட்டு, வாழையிலைகளை விரித்து, அதன் மேலிருக்கவும். இரசம் பெருவிரல் நகக்கண்ணிலே புறப்படும்.

2. பெரும்பூசணிக்காய் மேலோடு சீவிப்போட்டு, நடுவிலே யிருக்கிற சகையும், கத்திரிப்பூவும் பிஞ்சும். பூவரசஞ்சாறும், மேற்படி பட்டைச்சாறும் சமனாய்க் கூட்டிக், கால்படி உள்ளுக்குக் கொடுக்கவும். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை துவளை யிடவும்.

3. பருத்தியிலைச்சாறு, வாழைவிழுதுச்சாறு, குட்டிக்தக்காலி யிலைச்சாறு, கோவையிலைச்சாறு சரிகூட்டி உள்ளுக்குக் கொடுத்து, மேலுக்குத் துவளையிட்டு வாழையிலையிலிருக்க இரசம் பெருவிரல் கண்ணு வழியே வரும்!

## 100. பழுபாகற்கிழங்குக்கற்பம்

பழுபாகற்கிழங்கை வெந்நீரிலரைத்துக் குடிக்கக் காசம் தீரும்!
தேனில் கொள்ள, மூத்திரஎரிவு, கிருச்சிரம் தீரும்!
நெய்யிற்கொள்ள, சகல வியாதியும் தீரும்!

நொய்யரிசியோடு சேர்த்துக் கூழ் காய்ச்சிக்கொள்ள, தீவன முண்டாகும்!

காடியிலுரைத்துக் கண்ணிலிடக் கண் படலந் தீரும்!
வெந்நீரிதரைத்துக் குடிக்க, உள்வெதுப்பு தீரும்!
புளியில் குடிக்க, ஆமை விஷந்தீரும்!
(தீபனம்-பசி)

## 101. நீரிழிவுக்கு

1. விளாம்பிசின், மஞ்சள் இவ்விரண்டையும் சூரணித்துக், கையாந்தகரைச்சாற்றில் இருபதுதரம் பாவனை செய்து, புதுப் பானையில் வைத்துக்கொண்டு, பத்துப் பணவெடை வீதம் தேனிற் கொள்ளத், தீரும், சகல நீரிழிவும்!

(பாவனை - தெளிவு)

2. மேற்படிக்கு, பெருமரத்து விதையைச் சூரணித்து, ஆறு காசெடை சிறுகீரைச் சாற்றில் கொள்ள, நெடுநாளாயிருக்கிற நீரிழிவு ரோகமுந் தீரும்!

3. மேற்படிக்கு, தேற்றாங்கொட்டை நாலரைக் காசெடை, அத்திக்காய்ப்பொடி இரண்டு காசெடை, மேற்றோல் நீக்கி, முளை போக்கிய வெள்ளைக் குன்றுமணிப்பருப்பு மூன்று இவைகளைக் குளித்த பசுவின் மோரி லரைத்துக் கலக்கித், தேன் சேர்த்து, 1 மண்டலங்கொள்ளச் சகல நீரிழிவுந் தீரும்!

## 102. தாகத்திற்கு

1. மருதம்பட்டை
இலாமிச்சம்வேர்
திரிபாலை
நாவற்பட்டை
கோரைக்கிழங்கு
கடலிராஞ்சிப்பட்டை
சந்தனம்
தேற்றாங்கொட்டை
கருவேலம்பட்டை
பொன்முசுட்டைவேர்
சிறுகீரைவேர்
வகைக்குப் பலம் 1

இடித்து, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், சந்தனம், லவங்கப்பட்டை, கோரைக்கிழங்கு சமன் சேர்த்துக் கசாயமிட்டுக் கொடுக்கத் தீரும்!

2. மேற்படிக்கு,
நெல்லிமுள்ளி
தான்றிக்காய்
கோரைக்கிழங்கு
பொன்முசுட்டைவேர்
தேற்றாங்கொட்டை

வகைக்கு மூன்றுகாசெடை யிடித்துக் கசாயமிட்டுக் கொடுக்க வெகு மூத்திரம் (6வகை) குணமாம்!

3. தாமரைக்கிழங்கு, அதிமதுரம், சந்தனம், சிறுகீரை வேர், சீந்தில்தண்டு இவைகளைக் கசாயமிட்டுத் தேன், சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும்.

4. தென்னம்பாளை யிடித்துப் பிழிந்து, அதில் தேன் சர்க்கரை கலந்து கொடுக்கவும்.

5. சிறுகீரை வேர், பச்சரிசிக் கழுநீரி லரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

6. மூங்கில் சுட்ட சாம்பல், நெல்லி மரம் சுட்ட சாம்பல் இவைகளை மோரில் கலக்கிக் கொடுக்கவும்.

7, கடுக்காயும், தாமரைப் பூவும் சூரணித்து, தேனில் குழப்பிக் கொள்ளவும்.

## 103. எரிகுன்மத்திற்கு

1. உள்ளி இஞ்சி இந்துப்பு
    மொத்தச் சிவதைச் சீந்தியுடன்
கொள்ளும் நிலயாவரை வேரும்
    குலவு மிளகு திப்பிலியும்
உற்றோர் எண்ணை உடனுறவேர்
    முடக்கொற் றானும் உடன்கூட்டி
தள்ளாந் தொக்க கழற்சொடி
    சாரணை எருக்கு கொடுவேலி

2. காட்டு நொச்சி நிலவாகை
    கடிப கொன்றை சமூலமுடனே
ஓட்டும் ஆதண்டை வாய்விளி
    ஆம ணக்கு முருங்கை
உற்ற சித்த செம்முள்ளி
    ...... ...... ......
காட்டா மணக்கு எண்ணையுடன்
    கொள்ளில் குன்மம்போம் கண்டாயே!

(கழல் - கழற்சி; வாய்விளி - வாய் விளங்கம்; சித்த - சித்தகத்தி)

3. வெள்ளுள்ளி இஞ்சி நெல்லி
விரவிய சாதா வேரி
தெள்ளிய இளநீர் பாலும்
சேரிவை நாலு நாழி
கொள்ளிவை கசாயம் வெந்து
கொதித்தொரு நாழி யானால்
மெள்ளவே நறுநெய் நாழி
விடுவது மிகவும் நன்றே!

4. நன்றதே கோஷ்டம் மேலாம்
நல்குவெங் காரம் இந்துப்பு
சென்றுற மணத்தி நற்சீர்
திப்பிலி கொத்த மல்லி
மூன்றிடுங் கிராம்பு வாசி
மிக்கசேங் கொட்டை கூட்டி
ஒன்றவே வெந்து நெய்வார்த்
தானுட்கொள்ளக் குன்மம் போமே!

5. போமதே வெய்ய மாந்தம்
பொருமிய பித்த குன்ம தாமே!

6. மேனிவேர், விழிவேர், ஆதண்டைவேர், ஆயப்பட்டை, கச்சத்தராமுள்ளிவேர், தவசிமுருங்கைவேர் வகைக்குப் பலம் 2 இடித்து, நாலு நாழி நீர்விட்டு, 1 நாழியாகக் காய்ச்சி வடித்ததில், கந்தகம், சாதிலிங்கம், மிளகு, மஞ்சள், இஞ்சி, வெங்காரம், அரிதாரம், அசமதாகம் வகைக்குப் பலம் 1, மேற்படி கசாயம் விட்டரைத்து, நல்லெண்ணை, வேப்பெண்ணை, வகைக்குப் படி 1 சேர்த்துக் காய்ச்சிக், கடுகுப் பதத்தில் வடித்து, தேகத்துக்குப் பூசிப் பிடிக்க 20 நாளில் சகல வாதமுந் தீரும்!

7. நொச்சியிலை
வாதமடக்கியிலை
எருக்கிலை
நார்த்தயிலை
எலுமிச்சனிலை

ஆடாதோடையிலை
நீர்முள்ளியிலை

இவைகளை மிடாவிலிடித்துப் போட்டு, வேது காய்ச்சி விடவும். புளியாகாது.

### 104. வலிகுன்மத்திற்கு

1. வெள்வெங்காயம்
இந்துப்பு
இரசம்
வெண்காரம்
சுக்கு
மிளகு
திப்பிலி
நற்கரந்தம்
வகைக்குக் கழஞ்சு 1
கள்ளிப்பால் பணவெடை 2
நொச்சியிலை

... ... ... ...

நொச்சியிலையை வாட்டிச் சாறு பிழிந்து, அரைத்து, மிளகளவு குளிகை செய்து, நிழலிலுலர்த்தி, இளவெந்நீரிற் கொள்ளவும்.

2. மேற்படிக்கு,
புங்காய்ப்பால் படி 1
இந்துப்பு பலம் 1
வெள்வெங்காயம் பலம் 2
நவச்சாரம்
கள்ளிப்பால்
வகைக்குக் கழஞ்சு 2

இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி, எண்ணை எடுத்துக்கொண்டு மூன்றுநாளைக் கொருதரங் கொள்ளவும்!

சுறாக்கருவாடு, மிளகுநீர் கூட்டவும்.

### 105. சுவாசக் காசத்திற்கு

சந்தனம்
கோஷ்டம்
அதிமதுரம்
சாத்திரவேதி
தற்கோலம்
கோரோசனை
முல்லைவேர்
இலாமிச்சம் வேர்
இருவேலிவேர்

இவைகளைச் சரிகூட்டி, இளநீர் விட்டரைத்து, இலந்தங்காயளவு குளிகை செய்துலர்த்தி, இளநீரில் மறுநாள் கொள்ளவும்.

### 106 சன்னி 13க்கு

வேப்பம்பட்டை
ஆடாதோடையிலை
வேலிப்பருத்தியிலை
துளசியிலை
நொச்சியிலை
மணத்தக்காளிச் சமூலம்
அழிஞ்சிமாலை

இவைகளின் சாறு வகைக்கு ஆழாக்கு

எண்ணெ நாழி 1
கற்கடகச் சிங்கி
சிறுதேக்கு
திரிபாலம் 4
கிலுகிலுப்பை வேர்
நரியுடைய வேர்
தலைச்சுருளிவேர்
வெள்ளுள்ளி

வசம்பு
கோஷ்டம்
கடுகுரோகணி
மஞ்சள்
மரமஞ்சள்
நாகப்பாம்பு மாமிசம்

வகைக்கு வராகனெடை 1

முலைப்பால் விட்டரைத்துக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி, வடித்துத் தேகமுழுதுந் தேய்த்து, நசியஞ் செய்து, புகை காட்டச் சகல சன்னியும் தீரும்!

மேற்படி சுரமும் தீரும்!

## 107. வாதத்திற்குப் பூதாதித் தைலம்

ஆயப்பட்டை
புங்கம்பட்டை
நொச்சிவேர்ப்பட்டை
சாரணைவேர்
வாதமடக்கிவேர்
தூதுவளைவேர்
சிற்றாமுட்டிவேர்
ஆதண்டைவேர்
பாவட்டைவேர்
துளசிவேர்
மாவிலங்கம் வேர்

வகைக்குப் பலம் 6 இடித்து, மரக்கால் தண்ணீர்விட்டு, எட்டொன்றாய்க் காய்ச்சி, வடித்து, நல்லெண்ணெய், வேப்பெண்ணை புங்கெண்ணை, இலுப்பெண்ணை, விளக்கெண்ணை வகைக்குப் படி ½ வெள்வெங்காயத் தைலம் இடித்து, எட்டிப்பழச்சாறு படி 1, பசுவின்பால் படி 4 இவைகளைக் கலந்து,

தேவதாரம்
வசம்பு

அரத்தை
கடுகுரோகணி
அதிமதுரம்
நாகப்பூ
சீரகம்
கடுகு
மஞ்சள்
மரமஞ்சள்
சுக்கு
திப்பிலி
மிளகு
வாய்விளங்கம்
இந்துப்பு
சிறுதேக்கு
ஆனைத்திப்பிலி
சித்தரத்தை
கூகை நீறு
கோஷ்டம்
பெருங்காய்
கடுக்காய்
ஓமம்
வெள்ளரும்பு

வகைக்கு வராகனெடை 3

பால்விட்டரைத்துச் சேர்த்து, நாலுநாள் மந்தாக்கினியா யெரித்து, ஐந்தாம் நாள் மெழுகுப் பதத்திலிறக்கி, வடித்து எட்டுநாளைக் கொருதரம் தலை முழுகிவரச் சகலமகா வாதங்களும், காதுநோய், இரைச்சல், பல்நோய், பெருவயிறு, வீக்கம் முதலியவை தீரும்!

இராத்திரி தசமூலக் கஷாயம் குடிக்கவும்.

## 108. மேற்படிக்கு விஷமுட்டித் தைலம்

எட்டிப்பழச்சாறு குறுணி 1
துளசி

ஆடாதோடை
பேய்த் தும்பை
வாதமடக்கி
சங்கங்குப்பி

இவ்வைத்து கானும் குறுணி 1,

பசுவின்பால் குறுணி 1
நல்லெண்ணை
வேப்பெண்ணை
புங்கெண்ணை
இலுப்பெண்ணை
ஆமணக்கெண்ணை

இவ்வைந்தெண்ணையும் குறுணி 1

இவைகளைச் சேர்த்து,

மூக்காவளைவேர்
கொடுவேலிவேர்
வேலிப்பருத்திவேர்
நொச்சிவேர்
புளிநடலைக்கிழங்கு
எருக்கம்வேர்
செங்கத்தாரிவேர்
முள்ளுக்கத்திரிவேர்
சிறுகாஞ்சோறிவேர்
உகாய்வேர்
கோஷ்டம்
கடுகுரோகிணி
நவச்சாரம்

வகைக்குக் கழஞ்சு 3

இந்துப்பு
அதிமதுரம்
கம்பளிப்பிசின்

தேவதாரம்
சதகுப்பை
சுடுகு

வகைக்குக் கழஞ்சு 2

பெருங்காயம் கழஞ்சு 80

இவைகளைப் பால்விட் டரைத்துச் சேர்த்து, ஐந்து நாள் காய்ச்சி ஆறாம் நாள் பத்துக் கடுக்காய்ச் சூரணத்தைத் தூவிக் காய்ச்சிப் பதத்தி லிறக்கி, வடித்துக் கொண்டு உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலிலும் பூசிப் பிடிக்க, வாதம் 84ம் தீரும்!

## 109. மேற்படிக்குப் பஞ்சாங்கத் தைலம்

எருக்கிலையின் வேர், தண்டு, காய், இலை, பூ சமூலம் இடித்தெடுத்துச் சாறு படி-4,

சுக்கு
உகாய்ச்சமூலம்
கொடுவேலி
மூக்காவளை
அமுக்கிலா
நொச்சி
இவைகளின் சமூலம்
முருங்கைப்பட்டை
வாதமடக்கி

வகைக்குப் பலம் 10

இடித்து, 110 படி தண்ணீர்விட்டு, எட்டொன்றாய்க் காய்ச்சி, நல்லெண்ணை, புங்கெண்ணை, ஆமணக்கெண்ணை, வேப்பெண்ணை வகைக்குப்படி 1 சேர்த்து. எருக்கம்பால் படி $\frac{1}{2}$ சாணாக்கிச் சாறு படி 4, பழங்காடி, கோமூத்திரம் வெள்ளாட்டுப் பால் வகைக்குப் படி 4 கூட்டி, ஏலம் கிராம்பு, தகரம், கோஷ்டம். இந்துப்பு, கடுகு, சிற்றேலம், வெள்ளிலோத்திரம், வகைக்குக் கழஞ்சு 10 இவைகளை வெள்ளாட்டுப் பாலிலரைத்துச் சேர்த்து, ஆறுநாள் காய்ச்சி, ஏழாம்நாள் வடித்துத் தேகாத்தியந்த இரண்டு நேரமும் ஏற்றிட, வாதம் 4-ம் தீரும்!

பின்பு, எட்டுநாளைக் கொருதரம் தலை முழுகவும்.

### 110. மண்டைநோய்ச் சன்னிக்கு

அகத்திப் பழுப்புச் சாறு
ஒருகொட்டைப் பூடு
சுக்கு
மிளகு
வசம்பு

இவைகளைத் தட்டி நசியமிடவும்.

### 111. காதுச் சூலைக்கு

பழுபாகல் கிழங்கை எண்ணையில் வேகவைத்துக் காதில் விட்டுப் பஞ்சி லடைக்கவும்.

### 112. அஸ்திச்சுரம், உள்காய்ச்சலுக்கு

கற்றாழம் வேர், துளசி வாட்டிப் பிழிந்த சாறு. மடக்கிளி நடுநின்ற கழுத்தை வாட்டிப் பிழிந்த சாற்றில், நற்சீரகம், ஏலம் வகைக்குக் காசெடை 2 அரைத்து. மேற்படி தண்ணீரில் கலந்து, சற்று நல்லவெல்லங் கூட்டி, 3 நாள் கொடுக்கத் தீரும்!

### 113. இடுப்பு நோவிற்கு

சதுரக்கள்ளி
வாழைக்கள்ளி

ஐந்தாறு கண்டம் பானையிலிட்டு, இரண்டுபடி தண்ணீர்விட்டு, வேடு கட்டி, அதன்மேல் கம்பரிசி மாப்போட்டு, பிட்டு வேக வைத்துக், கருப்பு கூட்டி, நெய் கூட்டிக் குழப்பி நக்க, சத்தி மாறும்!

### 114. மான வலிப்பிற்கு

ஏரம்புழுவையும்(?)., பெருங்குறிஞ்சிக் காவிலையையும் வெள்ளாட்டுப் பாலிலும் பசுவின் பாலிலும் வெவ்வேறாக வரைத்துப், பின்பொன்றாய்ச் சேர்த்தரைத்து, வில்லைகளாகச் செய்து, நிழலிலுலர்த்தி, நோயின் பலமறிந்து, இள வெந்நீரிலொரு வில்லை கொடுக்கவும்.

## 115. காமாலை 18க்கு

கரிப்பான் சாறு நாழி
கமலப்பழம் 2
எலுமிச்சம் பழச்சாறு உரி 1
காட்டுமல்லிகைச்சாறு ஆழாக்கு 1
கடுக்காய் 25
சுக்கு பலம் 1
அரப்பொடி ஆழாக்கு 1
மிளகு ஆழாக்கு 1
கிட்டப்பொடி ஒரு சேரை
ஓமம் பலம் 1
உள்ளி பலம் 1
நற்சீரகம் பலம் $\frac{1}{4}$
கருஞ்சீரகம் பலம் $\frac{1}{4}$
திப்பிலி பலம் $\frac{1}{4}$
மனோசிலை வராகனெடை 1

இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து, மேற்படி சாறுகளில் கலக்கி, நல்லெண்ணை விட்டுச், சூரியப்புடம் 3 நாள் வைத்து, நான்காம் நாள் எடுத்துக் கொண்டு, காலை மாலை வெருகடிப் பிரமாணம் 20 நாள் சாப்பிடவும்.

ஒன்றைவிட் டொருநாள் தலை முழுகவும்; பத்தியம்.

## 116. முயல்கண் வலிப்புக்கு

1. பூச்சைக் கொட்டை மரப்பழமும், மேற்படி மரப்பட்டையும் திப்பிலியுங் கூட்டி யரைத்து, உள்ளுக்குக் கொடுக்க.

2. சிறுகீரை வேர், அமுக்கலாம் வேர், செவ்வகத்திப்பூ வசம்பு மிளகு இவைகளைத் தட்டி நசியமிடவும்.

3. வெள்ளைச் சுண்டை, வெள்ளைக் குன்றிவேர் இவைகளை நாய் மூத்திரத்தி லரைத்துக் கண்ணில் அஞ்சனமிடவும் தீரும்;

## 117. கழுத்திற்கு மேற்பட்ட எல்லா வியாதிக்கும்

ஞாயிற்றுக்கிழமை மிளகுதக்காளிச் சமூலம் கொண்டுவந்து, நிழலிலுலர்த்திப் பொடித்துக் காலாழாக்கு பசுவினெய்யில், வெருகடி தூள் போட்டுக் காய்ச்சி, வாய் நிரம்ப அவல் போட்டு, நாசியிலிட்டு, 1 நாழிகை, தலையைப் பிடித்திருந்து விடவும்.

இப்படி 4 நாள் செய்யவும்.

உப்பு, புளி நீக்கவும்.

சகலப் பீனிசங்களும் தீரும்!

## 118. பீனிசத்திற்கு

மிளகு படி 1

நல்லெண்ணை படி 1

இவ்விரண்டையும் காய்ச்சி, மிளகு மிதந்த பின்பு இறக்கி, நன்றாய் ஆற்றிய பின் வடித்துச் சாயங்காலம் தலை முழுகி வரவும்!

## 119. மண்டைப் பீனிசத்திற்கு

சடைக்காஞ்சாவை 1 பலம் நன்றாய்ப் புடம் செய்து, சாதிக்காய் இரண்டை வெதுப்பிப் பொடித்து, அபினி வராகனெடை 1 சேர்த்து, நன்றாய்ச் சூரணித்து, வெருகடி தூள் நல்லெண்ணையி லிட்டுக் காய்ச்சி, ஒன்றைவிட் டொருநாளும், பின்பு நாலு நாளைக் கொருக்காலும் தலை முழுகி வரவும்.

புளி நீக்கவும்.

## 120. இருமல்

நெஞ்சிற் கோழைக் கட்டுக்குப் பசுவினெய் படி 1 காய்ச்சி யதில் பனை வெல்லம் போட்டு உருகுகிற போது, கருங்கொள் வஸ்திர காயம் செய்து ஒரு பிடி மாப்போட்டுக் கிளறி, இறக்கி வெந்நீரிற் குளித்துச் சாப்பிட்ட பின்பு, மேற்படி மருந்து 3 நாள் சாப்பிடவும் தீரும்!

கைகண்டது.

## 121. ஏலாத்திக் குளிகை

ஏலம்
கிராம்பு
நாகப்பூ
வில்வப்பழத்தின் சதை
நெற்பொரி
தினையரிசி
முத்தக்காசு
சந்தனம்
முடக்கொற்றான் விதை

இவைகளைப் பொடி செய்து தேனிற் கொள்ள, வாந்தி, இறைப்பு, பித்தம் தீரும்!

## 122. பிரபலாதிக் குளிகை

பொன்னாங்கண்ணிவேர்
கையாந்தகரை வேர்
நொச்சியிலை
ஆடாதோடையிலை
வேப்பிலை
கற்கடகச் சிங்கி
திரிகடுகு
இந்துப்பு
கல்லுப்பு
வளையலுப்பு
பொட்டிலுப்பு
தட்டுப்பு
அசமதாகம்
பெருங்காயம்
முத்தக்காசு
அரத்தை

கொடிவேலிவேர்
தேவதாரம்
மரமஞ்சள்
வட்டத்திருப்பிக்கிழங்கு
மஞ்சிட்டி
கடுகுரோகணி
அரேணுகம்

இவைகளை வெள்ளாட்டுச் சிறுநீரிலரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தி, இஞ்சிச் சாற்றில் கொடுக்க,

1. பழையசுரம்
2. மூன்றாமுறைச்சுரம்
3. நாலாமுறைச்சுரம்
4. சன்னி தீரும்!

## 123. அமிருதாதிச் சூரணம்

மேற்றோல் நீக்கிய சீந்திக் கொடியை நறுக்கி யிடித்துத் தண்ணீர்விட்டுப் பிழிந்து, வடிகட்டித் தெளிவை யிறுத்துவிட்டுப் பிழிந்து, நிழலிலுலர்த்தி,

சர்க்கரை
வெட்டிவேர்
சீரகம்
லவங்கப்பத்திரி
கோஷ்டம்
நெல்லிமுள்ளி
நிலப்பனைக்கிழங்கு
ஏலம்
அரேணுகம்
முந்திரிப் பழம்
குங்குமப் பட்டை
சிறுநாகப்பூ

தாமரைவளையம்
தாமரைத்தாது
சந்தனம்
செஞ்சந்தனம்
திரிகடுகு
அதிமதுரம்
நெற்பொரி
அமுக்கலாங் கிழங்கு
தண்ணீர்விட்டான் கிழங்கு
நெருஞ்சிவேர்
கற்கடகசிங்கி
சாதிக்காய்
தக்கோலம்

இவைகளைச் சூரணித்து, சிரட்டியுப்பு, மேற்படி சர்க்கரை சேர்த்து அரைத்துக் கொண்டு, கற்கண்டு, தேன், பசுவினெய்யிற் கொள்ள,

1. சயம்
2. கைகாலெரிப்பு
3. எலும்புருக்கி
4. மூத்திரக்கிருச்சாரம்
5. நீரிழிவு
6. குண்டலவாயு

தீரும்!

## 124. சாங்கிரக் குழம்பு

தூதுவளம் பூ பலம் 4
முருங்கைப்பூ பலம் 4
தண்ணீர்விட்டான் கிழங்கு பலம் 3
நெருஞ்சிவேர் பலம் 1
நிலப்பனைக்கிழங்கு பலம் 1
நன்னாரிவேர் பலம் 1

அதிமதுரம் பலம் 2

ஏலம் பலம் 1

இவைகளைச் சூரணித்துப் பதக்கு பசுவின்பாலைக் குழம்பாய்க் காய்ச்சி, மேற்படி சூரணத்தைப் போட்டுக் கிளறி, நெய், தேன், சர்க்கரை வகைக்குப் பலம் 1 சேர்த்துப் புகையாம லிறக்கிக் கொண்டு, கைப்பு, புளிப்பு நீக்கித், தான்றிக்காய்ப் பிரமாணம் காலையிற் சாப்பிட,

1. பிரமேகம்
2. எலும்புருக்கி
3. பெரும்பாடு

தீரும்!

தாதுவிருத்தி யுண்டாம்.

## 125. தாகத்திற்கு

கொத்துமல்லி

அதிமதுரம்

கோஷ்டம்

சீரகம்

தாமரைவளையம்

அத்தி

இச்சி

நாவல்தளிர்கள்

நாவல்மரப்பட்டை

நெல்லிமுள்ளி

ஆல்அரக்கு

இவைகளை யரைத்துச் சீனிச்சருக்கரை அல்லது முலைப்பால் கலந்துவிட்டரைத்துத், தேற்றாவிதைப் பிரமாணம் குளிகை செய்து, உலர்த்திக் கொள்ளத், தீரும்!

## 126. சுக்காச் சூரணம்

சுக்கு

மிளகு

திப்பிலி

ஓமம்

நற்சீரகம்

கருஞ்சீரகம்

வகைக்குப் பலம் 1

பெருங்காயம் வராகனெடை 5

இவைகளை வெதுப்பிச் சூரணித்து, வெருகடிப் பிரமாணம் தேன், நெய்யிற், புளியும் புகையும் நீக்கிக் கொள்ளப், பசி, தீபனமுண்டாகும்!

இருமல், வெள்ளோக்காளமுந் தீரும்!

(வெள்ளோக்காளம் - உமிழ்நீரை மட்டும் வெளியேற்றும் இருமல்)

## 127. வில்வாதி லேகியம்

வில்வவேர் பலம் 30ஐ, நான்கு வள்ளம் தண்ணீர் விட்டு, மூன்று நாளெரித்து, நான்காம் நாள் நாலிலொன்றாய்க் காய்ச்சி, வடித்து,

வெல்லம்

பழம் புளி

வகைக்குப் பலம் 5 கரைத்துக் குழம்பானபின்,

சுக்கு

மிளகு

திப்பிலி

சீரகம்

செவியம்

தாளிசபத்திரி

சிறுநாகப்பூ

வகைக்குப் பலம் 1

இலவங்கம்

கடுக்காய்ச் சூரணம்

வகைக்குப் பலம் $\frac{1}{2}$

இவைகளைச் சூரணித்துப் போட்டுக் கிண்டித், தேன், நெய் விட்டுக் கிளறி வைத்துக் கொண்டு, மூன்று காசெடை வீதம் கொள்ள,

1. வாய் நீரூறுதல்
2. இருமல்
3. வெள்ளோக்காளம்
4. சிலேட்டும விகாரம்

முதலிய வியாதிகள் தீரும்!

பசி, தீபனமுண்டாகும்!

### 128. ஆமச்சுரத்திற்குக் குடிநீர்

முத்தக்காசு
சந்தனத்தூள்
பற்படாகம்
சீந்தில்தண்டு
இலாமிச்சம் வேர்
கொத்துமல்லி
தேசாவரம்
கோஷ்டம்
சீரகம்
சுக்கு
திப்பிலி
திப்பிலிமூலம்

வகைக்கு வராகனெடை 2

இவைகளைத் தட்டி, இளநீர்விட்டுக் காய்ச்சிக் கொடுக்க, அஸ்தியைப் பற்றிய சுரங்காய்ந்து, உடம்பு கனத்து, பாரமாய், மலபந்தமாய், சிறுநீர் அதிகமாய், அசீரணமாய், தீபன் மில்லா திருக்கிற ஆமச்சுரம் தீரும்!

### 129. சகல சுரத்திற்கும் கசாயம்

நிலக்குமிழ்
பாதிரி

வில்வம்

சிறுமுன்னை

வாகை

நெருஞ்சி

ஆதங்கொம்பை

தொட்டாற்சிணுங்கி

முள்ளி

சிறுகாஞ்சோறி

சிற்றாமுட்டி

பேராமுட்டி

பொன்முசுட்டை

இவைகளின் வேர்

கண்டங்கத்திரி வேர்

பேய்ப்புடல்

தூதுவளை

சீந்திற்கொடி

ஆடாதோடை

பற்படாகச்சமூலம்

காமப்பூ.

தேவதாரம்

சிறுதேக்கு

சுக்கு

கொத்துமல்லி

வகைக்கு வராகனெடை 2

இருநாழி நீர்விட்டு, ஆழாக்காகக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்!

## 130. பித்தச் சிலேட்டுமச் சுரத்திற்கு

சுக்கு

மிளகு

திப்பிலி

வெட்பாலையரிசி
கடுக்காய்
தான்றிக்காய்
நெல்லிமுள்ளி
சிறுவழுதலை
முத்தக்காசு
பொன்முசுட்டைவேர்
நிலவேம்பு
கோட்டம்

வகைக்கு வராகனெடை 2

இளநீர் வார்த்து, ஆழாக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

சிறுகாஞ்சோறிவேர்
இருவேலிவேர்
கடுகுரோகணி
சுக்கு
கோஷ்டம்

வகைக்கு வராகனெடை 1

இளநீர் விட்டுக் காய்ச்சிக் கொடுக்கக் குளிரும்; பின் தாகமுண்டாகும்; சிலேட்டுமம் வாயிலெடுக்கும்; உடம்பு மயக்கமாயிருக்கும்; செவி நோகும்; கண் சிவக்கும்; கண்ணில் நீர் பாயும்; வாயிலிரத்தம் விழும்; நித்திரையில்லை; நாவுலரும்; காதடைக்கும்; காது கேளாது! மேற்படி சுரத்தின் குணங்களாம்.

### 131. விக்கலுக்கு

மிளகு
சாம்பிராணி
மனோசிலை
பசுவினெய்

சரிகூட்டிச் சுங்கானில் புதைக்கவும்.

அல்லது, பருத்திக்கோல், மயிலிறகு, கோணிப்பட்டு இலைகளைச் சுட்டுக், கொம்புத் தேனிற் கொள்ளத், தீரும்!

### 132. பித்தச்சுரத்திற்குக் கசாயம்

முத்தக்காசு
நன்னாரிவேர்
சீந்திற்கொடி
முந்திரிப்பழம்
நெய்தற்கிழங்கு
இலாமிச்சம் வேர்
சந்தனம்
பேய்ப்புடல்
சதாவேரி

இவைகளைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

### 133. மேற்படி சுரத்திற்கு

நன்னாரிவேர்
தாமரைக் கிழங்கு
சந்தனம்
இலாமிச்சம்வேர்
முத்தக்காசு
அதிமதுரம்
நெய்தற்கிழங்கு
இலுப்பைப்பூ
சதாவேரி

இவைகளைக் கசாயமிட்டுச் சர்க்கரை, தேன் சேர்த்துக் கொள்ளத், தீரும்!

### 134. சிலேட்டுமச் சுரத்திற்கு

கண்டங்கத்திரிவேர்
சிறுகாஞ்சோறிவேர்
கண்டுபரங்கி
சுக்கு

சிந்திற்கொடி
முத்தக்காசு

இவைகளைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

திப்பிலி, மேல்பொடி போடவும்.

### 135. மேற்படி சுரத்திற்கு

பேய்ப்புடல்
சீந்திற்கொடி
நிலவேம்பு
முத்தக்காசு
கடுக்காய்
நெல்லிப்பருப்பு
தான்றிக்காய்
தேவதாரம்
கோஷ்டம்
திப்பிலி
கொள்ளைவேர்

இவைகளைக் கசாயமிட்டுத், திப்பிலிப் பொடியும் தேனும் சேர்த்துக் கொள்ள, தீரும்!

### 136. மேற்படி சுரத்திற்கு

கண்டங்கத்திரி
சுக்கு
சிந்திற்கொடி

இவைகளைக் கசாயமிட்டு, வறுத்துத், திப்பிலிப் பொடி சேர்த்துக் கொள்ளத், தீரும்!

### 137. பித்தச்சுரத்திற்கு

பேய்ப்பீர்க்கு
பேய்ப்புடல்
சீந்திற்கொடி

நிலவேம்பு
முத்தக்காசு
கடுக்காய்
நெல்லிப்பருப்பு
தான்றிக்காய்

இவைகளைக் கசாயமிட்டுத் தேன் கலந்து கொடுக்கத் தீரும்!

### 138. குளிர்ச்சுரத்திற்கு

இராடி
துளசிவேர்
விஷ்ணுகாந்தி
சுக்கு

இவைகளைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

### 139. பித்தச்சுரத்திற்கு

விலாமிச்சம் வேர்
வெட்டிவேர்
சுக்கு
முத்தக்காசு
பற்படாகம்
சந்தனம்
நெற்பொரி

இவைகளைக் கசாயமிட்டுக் கொடுக்கவும்.

### 140. தோஷகுணத்திற்கு

செம்முள்ளிவேர்
நிலவேம்பு
தேவதாரம்
முத்தக்காசு
பாடைக்கிழங்கு

வாய்விளங்கம்

மரமஞ்சள்

இவைகளைக் கசாயமிட்டுத், திப்பிலிப் பொடி கூட்டிக்கொடுக்கச் சுர, சூலை', சன்னி தீரும்!

### 141. தாபச்சுரம் வாந்திக்கு

கோரைக்கிழங்கு

பற்படாகம்

சந்தனச் சிராய்

விலாமிச்சம் வேர்

சீந்திற்கொடி

சுக்கு

இவைகளைக் கசாயமிட்டுச் சர்க்கரை போட்டுக் கொடுக்கத் தீரும்!

### 142. சகலச் சுரத்திற்கு

குடசப்பாலை யரிசி

விளாமிச்சம் வேர்

நிலவேம்பு

வெட்டிவேர்

நெய்தற்கிழங்கு

சந்தனம்

நெய்ச்சட்டிப் பூடு

மஞ்சள்

முத்தக்காசு

பெருங்குப்பை

இலுப்பைப்பூ

முந்திரிப்பழம்

அதிவிடயம்

மரமஞ்சள்

கோஷ்டம்

கடுக்காய்

வில்வவேர்
பாடைக்கிழங்கு
பேய்ப்புடல்
பேரீச்சம்பழம்
திப்பிலி
நன்னாரிவேர்
திப்பிலிமூலம்
சுக்கு
மிளகு
ஆடாதோடைவேர்
சதாவரி
பற்படாகம்
கொன்றைவேர்
சிறுகாஞ்சோறிவேர்
வேப்பம்பட்டை
சீந்திற்கொடி

இவைகளைக் கசாயமிட்டுக் கொள்ளச், சகல சுரமுந் தீரும்!

### 143. முடசைச் சுரம், சன்னிச் சுரத்திற்கு

சீந்திற்கொடி வராகனெடை 1
ஆடாதோடை வராகனெடை 2
செம்முள்ளி வராகனெடை 4
பற்படாகம் வராகனெடை 8
சுக்கு வராகனெடை 16
கண்டங்கத்திரி வராகனெடை 32
சிற்றாமுட்டி வராகனெடை 64

இவைகளைச் சேர்த்து, ஆறுபடி நீர்விட்டு, ஆழாக்களவாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்!

### 144. வாதச் சுரத்திற்கு

சிறுமுன்னைவேர்
பாதிரிவேர்
சிற்றாமல்லிவேர்
பேராமல்லிவேர்
குமிழம்வேர்
சிறுகாஞ்சோறிவேர்
கண்டங்கத்திரிவேர்
நெருஞ்சிவேர்
வாகைவேர்
பெருங்குமிழம்வேர்
சீந்திற்கொடி
ஆடாதோடை
முத்தக்காசு
செம்முள்ளிவேர்
பற்படாகம்
கோஷ்டம்
சுக்கு
திப்பிலி

இவைகளைச் சேர்த்து, 6 படி நீர் விட்டு, உரியளவாகக் காய்ச்சிக் கொடுக்கச், சன்னிவாதச் சுரமும் தீரும்!

### 145. வாய்வுக்கு

திப்பிலி
திப்பிலிமூலம்
செவியம்
கொடுவேலிவேர்
சுக்கு

வகைக்கு வராகனெடை 1

இவைகளை 1 படி நீர்விட்டு, ஆழாக்காய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

## 146. சுரத்திற்கு

பெருமரப்பட்டை
மலைதாங்கிவேர்
வில்வத்தோடு
சுக்கு
கோரைக்கிழங்கு
குடசம்பாலைப்பட்டை
ஓமம்
மாதுளையோடு
வில்வவேர்

வகைக்கு வராகனெடை 3

சாதிக்காய்
சாதிப்பத்திரி
கிராம்பு
அதிவிடயம்

வகைக்கு பணவெடை 1

இவைகளைத் தட்டிப்போட்டுப் பொன்னிறமாய் வறுத்து, நாழி நீர்விட்டு, ஆழாக்காய்க் காய்ச்சிச் சாதிக்காய் முதலியவைகளைப் பொடி செய்து போட்டுக் கொடுக்கத் தாபச்சுரம், முடசைச்சுரம், அதிசாரச்சுரம், ஆயிச்சுரம் முதலியன தீரும்!

2. மேற்படிக்கு கற்றாழஞ்சாறு, சதாவேரிச்சாறு, முசுமுசுக்கைச் சாறு, நன்னாரி வேர்க் கசாயம், தாமரைக்கிழங்குச் சாறு, நெய்தல் சாறு, சிறுகீரைச்சாறு, சீந்திக்கொடிச்சாறு, வகைக்குப் படி 4,

பசுவினெய், பால்

வகைக்குப்படி 2

ஏலம்
கிராம்பு

அதிமதுரம்
லவங்கப்பத்திரி
முந்திரிப்பழம்
கொத்தமல்லி
சுக்கு
மிளகு
திப்பிலி
பேரீச்சம்பழம்
விலாமிச்சம்வேர்
சந்தனம்
செண்பகமொட்டு
சீரகம்

வகைக்கு வராகனெடை 1

பாலிலரைத்து, மற்றவைகளையும் சேர்த்துக் காய்ச்சிப், பதமாய் வடித்துக் கொள்ளச் சகல சுரமும், உள்காய்ச்சல், மேகவெட்டை முதலியன தீரும்!

பத்தியம்- உப்பு, புளி, புகை நீக்கவும்.

### 147. ஆடாதோடை நெய் (குமரிநெய்)

ஆடாதோடைச்சாறு
நெய்
பால்

வகைக்குப் படி 2

நிலவேம்பு
குடசப்பாலை அரிசி
கோரைக்கிழங்கு
அதிமதுரம்
சந்தனம்

சீந்தில்தண்டு
இலுப்பைப்பூ
நன்னாரிவேர்
விலாமிச்சம்வேர்
தாமரைக்கிழங்கு
பெருங்குரும்பை

வகைக்கு வராகனெடை 1

**இவைகளைப் பால் விட்டரைத்துச் சேர்த்துக் காய்ச்சிப் பதமாய் வடித்துக்கொள்ள, இரத்தப் பித்தம் தீரும்!**

## 148. நாவல் நெய்

நாவல்பட்டை
நாவல் தளிர்

வகைக்குப் பலம் 4

இரண்டுபடி நீர்விட்டு 1 படியாகக் காய்ச்சி வடித்துத்,

தயிர்வடி நீர்
புளியாரைச்சாறு
நெய்

வகைக்குப் படி 1

சந்தனம்
அதிமதுரம்
வெள்ளிலோத்திரம்
இலவம்பிசின்
தாமரைக்கிழங்கு
சிறுநாகப்பூ
முந்திரிப்பழம்
குடசப்பாலை யரிசி
காட்டகத்திப்பூ

பேரீச்சம்பழம்

அதிவிடயம்

வகைக்கு வராகனெடை 1

இவைகளைப் பால்விட்டரைத்துச் சேர்த்துப், பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ள, இரத்தப்பித்தம் தீரும்!

## 149. பஞ்சகோலாதிருகில் கிருதம்

திப்பிலி

திப்பிலிமூலம்

செவியம்

கொடுவேலிவேர்

சுக்கு

சீந்திற்கொடி

வட்டத்திருப்பி

வில்வவேர்

ஆடாதோடை

மலைவேம்பு

நல்லவேம்பு

முத்தக்காசு

வசம்பு

ஆடுதின்னாப்பாலைவேர்

கொத்துமல்லி

தேவதாரம்

கொன்றைவேர்

புங்கம்வேர்

மூக்காவளைவேர்

சாரணைவேர்

பேய்ப்புடல்

கண்டங்கத்திரி

வகைக்குப் பலம் $\frac{1}{2}$

இவைகளை யிடித்து, 10 படி நீர் விட்டு, 5 படியாகக் காய்ச்சி வடித்து,

நெய்படி 1
திரிகடுகு பலம் 8
சாதிச்சாரம்
லவங்கப்பத்திரி
லவங்கப்பட்டை
ஏலம்
நாகப்பூ
வசம்பு
கோஷ்டம்
கருங்குங்கிலியம்
வெள்ளைக்குங்கிலியம்
கண்டுபரங்கி
திப்பிலிமூலம்
கொடுவேலிவேர்
கடுகுரோகணி
அதிவிடயம்
சவுக்காரம்
பவளத்துத்தம்
குச்சப்பாலை வேர்
சீரகம்
கருஞ்சீரகம்
வட்டத்திருப்பி
சடாமஞ்சி
மஞ்சிட்டி
கடுகு
வெண்கடுகு
பெருங்குரும்பை
யானைத்திப்பிலி
பெருங்காயம்

விளாம்பிசின்
அதிமதுரம்
பெருமரப்பட்டை
நிலவேம்பு
அசமதாகம்
பஞ்சலவணம்

வகைக்கு வராகனெடை $\frac{1}{4}$
குக்லு பலம் $\frac{1}{2}$

இவைகளைப் பாலிலரைத்துச் சேர்த்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ள, மேகப்புண், அரையாப்பு முதலியன தீரும்!

1. கண்டமாலை
2. கழல்வாதம்
3. பவுத்திரம்
4. மூலரோகங்கள்
5. பிளவை
6. அண்டவாதம்
7. கர்ணரோகங்கள்
8. நாசிரோகங்கள்
9. வாய்ரோகங்கள்
10. குட்டரோகங்கள்
11. கன்னப்பிளவை
12. யோனிரோகங்கள்
13. பீலிகை
14. குன்மம் தீரும்!

பத்தியம்-புளி, புகை நீக்கவும்.

பஞ்சகோலம்-சித்திரமூலம், சுக்கு, செவியம், திப்பிலி, திப்பிலி மூலம் இவற்றின் சேர்க்கை

கிருதம்- சேர்க்கப்பட்டது என்பது பொருள்; பல மருத்துவப் பொருட்களைச் சேர்த்து உருவாக்கப்படுவது, சமஸ்கிருதம் என்ற சொல்லிலும் சேர்க்கப்பட்டது என்ற இதே பொருளைக் காண்க.

பஞ்சலவணம் :- 1. காசலவணம்
2. பிடா லவணம்
3. சயிந்த லவணம்
4. சவ்வர்ச்ச லவணம்
5. சமுத்திர லவணம்

## 150. ஆடாதோடை நெய்

ஆடாதோடைச்சாறு
வெள்ளுள்ளிச்சாறு
இஞ்சிச்சாறு
நல்லெண்ணை

வகைக்குப் படி 1

கண்டு பரங்கி
கற்கடகச்சிங்கி
தாளிசப்பத்திரி
கிராம்பு
திப்பிலிமூலம்
செவியம்
சுக்கு
மிளகு
திப்பிலி
இந்துப்பு
சடாமஞ்சி
கண்டங்கத்திரி
வெங்காரம்
அரப்பொடி

வகைக்குப் பலம் 1

இவைகளைச் சூரணித்துச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி, வடித்துத் தேன் சேர்த்துக் கொள்ள, சகல இருமல்களும் தீரும்!

### 151. கந்தகச் சூரணம்

சுத்தித்த கந்தகம் பலம் 6
கொடிவேலிவேர்ப் பட்டைச் சூரணம் பலம் 1

இவைகளைச் சூரணித்துத், தேன், எருமை நெய்யிற் கொள்ள, சகல குஷ்டங்களும் தீரும்.

பத்தியம்.

### 152. ஆடாதோடைக் கிருதம்

செம்பருத்தியிலை
ஆடாதோடையிலை
சீந்தில் தண்டு
பெருங்குரும்பை
அதிமதுரம்

வகைக்குப் பலம் 2

இவைகளை யிடித்துக் கசாயம் வைத்துக், கசாயத்தளவு நெய் சேர்த்துப், பதமாய்க் காய்ச்சி, வடித்துக் கொள்ள இரத்தப்பித்தம், பெரும்பாடு ஏழு நாளில் தீரும்!

### 153. மயிர் விழுக

பேய்ச்சுரைக்காயும், அதிமதுரமும் கூட்டி, யரைத்துப் பூசினாலும்,

கள்ளிப்பால் 5
காவிக்கல் 3
அரிதாரம் 1

இவைகளைக் கூட்டி, யரைத்துப் பூசினாலும்,

அரிதாரம்
மனோசிலை
இந்துப்பு
சங்குச்சுண்ணாம்பு

இவைகளைச் சேராங்கொட்டைத் தைலத்தி லரைத்துப் பூசினாலும் மயிர்கள் உதிர்ந்துவிடும்!

### 154. விக்கலுக்கு

மெழுகு

சாம்பிராணி

மனோசிலை

பசுவினெய்

இவைகளை அடிச்சட்டி காய்ந்துபோகாமல், பதமாய்க் கிளறிக் கொள்ள,

1. க்ஷயம்
2. பிரமியம்
3. வாய் நீரோடல்
4. அருக்கி
5. விக்கல்
6. பீலிகை
7. குன்மம்

முதலியன தீரும்!

இது வெகு உசிதம்.

### 155. வாந்தி ஓக்காளத்திற்கு

பருத்திவிதைப்பருப்பு

நெற்பொரி

வகைக்கு ஆழாக்கு 1

ஏலம் வராகனெடை 5

திப்பிலி வராகனெடை 10

இவைகளைச் சூரணித்துச், சர்க்கரை கலந்து கொள்ளத் தீரும்!

### 156. சிங்காதிச் சூரணம்

சிறுவழுதலை

கண்டங்கத்திரி

சுக்கு

மிளகு

திப்பிலி

கடுக்காய்
தான்றிக்காய்
நெல்லிமுள்ளி
கண்டுபரங்கி
கற்கடகச்சிங்கி
கீழாநெல்லி
பஞ்சலவணம்

இவைகளைச் சூரணித்து, வெருகடியளவு, வெந்நீரிற் கொள்ள,

1. ஏங்கல்
2. விக்கல்
3. இளைப்பு
4. மேல்மூச்சுச்சுவாசம்
5. பீனிசம் முதலியன தீரும்!

## 157. முலைப்பாலுண்டாக

அதிமதுரம்
நெல்லிக்காய்ச்சாறு
சர்க்கரை

இவைகளைச் சரியாகக் கூட்டிக்கொள்ள, முலையில் பால் சுரக்கும்!

## 158. சகல கிராணிக்கு

1. சாதிக்காய்
இந்துப்பு
சுத்திசெய்த சாதிலிங்கம்
அதிவிடயம்

சுக்குப்பாலில் வேகவைத்து, உலர்த்திய கறுப்பூமத்தன் விதை வகைக்கு வராகனெடை 1, இவைகளைக் கறுப்பூமத்தனிலைச் சாற்றில் ஒருசாம மரைத்துக், குன்றியளவு மாத்திரை செய்து, தேனிற் கொடுக்கத், தீரும்!

2. மேற்படிக்கு, பொன்முசுட்டை வராகனெடை 5 ஒரு சட்டி தண்ணீரிலிட்டு, காற்படியாய் வற்றவைத்து, இலந்தைக்காய் பிரமாணம் தேனிற் கொடுக்கவும்.

1. வாயுக்கிராணி
2. மூலக்கிராணி
3. கழிச்சல்

முதலியவை தீரும்!

## 159. இரத்த வாந்திக்கு

1. இலாமிச்சம் வேர்
சந்தனம்
சுக்கு
அழிஞ்சிப் பருப்பு
இரத்தச் சந்தனம்
கிராம்பு
திப்பிலி
திப்பிலி மூலம்
ஏலம்
நாகப்பூ
முத்தக்காசு
நெல்விமுள்ளி
கற்பூரம்
கூகைநீறு
சாதிப்பத்திரி
கராலகம்

இவைகளைச் சூரணித்து, இதற்கு எட்டிலொரு பாகம் சர்க்கரை சேர்த்து, வெருகடி யளவு கொள்ளத், தீரும்!

2. மேற்படிக்கு, இலாமிச்சம் வேர், கொத்துமல்லி, சிற்றா முட்டிவேர், சுக்கு வகைக்கு வராகனெடை 2 கசாயமிட்டு, வேளைக்கு உரியளவு மூன்று நாள் கொள்ளத், திரும்!

நெடுநாள் சென்றதாகில், எட்டு நாள் கொடுக்கத் தீரும்!

கைகண்டது.

வெகு ரகசியமாய்ச் செய்யவும்!

## 160. சூலை வகைக்கு

1. நஞ்சுண்டாம்வேர்
   சங்கம்வேர்
   அமுக்கலாங்கிழங்கு
   கழற்சிவேர்
   மிளகரணைவேர்

வகைக்குப் பலம் 10

இவைகளைக் குறுக நறுக்கி, 4 வள்ள நீர் விட்டு, வேடுகட்டி ... கைகால் கடுப்பு, வெள்ளை தீரும்!

2. மேற்படிக்குப் புரசம் பட்டை, மேற்புறணி சீவி, குறுக நறுக்கி, யிடித்துப் பலம் 4, நாலுமரக்கால் நீர்விட்டு, நாலி லொன்றாய்க் காய்ச்சிப் பிசைந்து, வடிகட்டி, பின்பு கால்பாகம் சுண்டக் காய்ச்சி, சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி, வசம்பு இவைகளை வெவ்வேறாக மேற்படி கசாயத்திலரைத்து, ஒவ்வொன்றும் கொட்டைப்பாக்களவு மேற்படி கசாயத்திலரைத்து, 2 நேரமும் சாப்பிடத் தீரும்!

## 161. அதிசாரக் கழிச்சலுக்கு

பொன்முசுட்டை வேரை எருமை மோரிலரைத்து அரிசிலையில் வைத்துத் தைத்து, மேற்படி மோரில் ஏழுதரம் வேகவைத்துத் தேனில் 2 நேரம் கொடுக்கத் தீரும்!

## 162. சத்திக் குன்மத்திற்கு

சுக்கட்டி. களிப்பாக்கு சூரணித்துத் தேனில் குழைத்துச் சாப்பிட்டதற்குப் பின்பு கொடுக்கத் தீரும்!

### 163. சூலை வியாதி

சாதிக்காய்
சாதிப்பத்திரி
கஞ்சாவிதை
சுத்தித்த சாதிலிங்கம்
முருங்கைவிதை

வகைக்கு வராகனெடை 3

முருங்கைப்பட்டைச் சாறுவிட் டரைத்து இரண்டு கோழிமுட்டையில் வைத்துச் சீலைமண் செய்து அக்கினியுடன் வைத்து, இரும்புக் கதிரில் கிளறித், திரளும் பருவத்தில் எடுத்து, ஆறிய பின்பு சுண்டையிலையில் வைத்து, வைத்தநாள் முதல்கொண்டு, நேரத்துக்குக் கால் வடிதண்ணீர், இரண்டு நேரம் 24 நாள் கொள்ளவும்.

புளி, புகை நீக்கவும்.

சூலை வியாதி, கைகால் முடங்கல் முதலியவை தீரும்!

ஒரு மண்டலங் கொள்ளவும்.

### 164. வாய்வுக்கு

வாகைப்பட்டை
மாம்பட்டை
சங்கம்வேர்ப்பட்டை
சாரணைவேர்
மிளகு
வெள்வெங்காயம்

வகைக்கு வராகனெடை 3

இவைகளை நீர்விட்டரைத்து, விளக்கெண்ணை, பசுவினெய் வகைக்குப் படி 1 கலந்ததில் போட்டு, பதமாய்க் காய்ச்சி இறுகும் போது, எட்டு கடுக்காய் பொடி செய்து போட்டுக், கிளறி, நேரத்துக்கு 1 உருண்டை கொள்ளவும்.

புளிநீக்கிப் பத்தியமிருக்கவும்.

## 165. மூல வியாதிக்கு

நீர்ப்பூலாவின் வடவேர், பருமனாக எடுத்து, மேல் கறுப்பை நீவிப்போட்டுச், சிவந்த பட்டையா யெடுத்து, இதன் கால்பாகம் உதியம்பட்டையும், வறுத்த அசமதாகம் அரைக்காசெடை - இவை களை யரைத்துத் தயிர், தண்ணீரிற் கொள்ளவும்.

ஆண்பிள்ளையானால் ஒரு உருண்டையும், பெண்பிள்ளை யானால் ஐந்து உருண்டையும் கொள்ள வேண்டியது.

ஒவ்வொரு இராத்திரிக்கும் கொத்துமல்லி, மிளகு, சீரகம், ஏலம், சுண்டி வகைக்கு வராகனெடை 1 இவைகளைத் தட்டிப் பொட்டலங்கட்டி, இரண்டுபடி நீர்விட்டுக் கசாயம் வைத்துச் சாப்பிட்ட பின்பு, கொடுக்கவும்.

கசாயம் வற்றியபின், இந்த மருந்தை அரைத்துக் கொடுக்கவும்.

மூலவாயு, கிராணி தீரும்!

வெகு உசிதம்!

## 166. தாது விருத்திக்கு

வெள்ளைச் சாரணைவேர்
லவங்கப்பத்திரி
பேரீச்சம்பழம்
முந்திரிப்பழம்
கடுக்காய்ப் பொடி
தான்றிக்காய்ப் பொடி
நெல்லிப்பருப்பு
உளுந்துப்பருப்பு

வகைக்கு வராகனெடை 1

பூமிச்சர்க்கரைக்கிழங்கு
இந்துப்பு
அபினி
கஞ்சுர

வகைக்கு வராகனெடை 2

இவைகளைப் பொடித்து, இளநீர் வார்த்தரைத்துச் சர்க்கரை கலந்து, முள்ளிக்காயளவு உருண்டை செய்து நாள் 1 வீதம் சாப்பிடவும்.

தாதுவிருத்தி, தேகப்பலம், சீரணச் சக்தி அதிகமாம்; ஒரு மண்டலங் கொள்ளத் தாது விருத்தி யதிகமாம்! மேகவெட்டையும் தீரும்.

இன்னும், வாதம், குன்மம், மலக்கட்டு, பாண்டு, விஷபாகம், வீக்கம், காமாலை, மந்தாக்கினி, மூலம், பேதி, ஏங்கல், இருமல், ஈளை, திமிர், வயிற்றுவலி, வாய்வுகள் தீரும்!

கைப்பு, புளிப்பு நீக்கவும்.

லேகியமாயும் செய்துகொள்ளவும்.

## 167. மண்டைச்சூலைக்கு

பரங்கிப்பட்டை
கொடுவேலிவேர்
வகைக்குப் பலம் 5

சுக்கு
மிளகு
திப்பிலி
கருஞ்சீரகம்
வகைக்குப் பலம் 1

இவைகளைச் சூரணம் செய்து, வெருகடி பிரமாணம் தேனிற் கொள்ளவும்.

பத்தியம் புளி, புகை நீக்கவும்.

## 168. பரங்கிப்பட்டைச் சூரணம்

சிவனார் வேம்பு
வெள்ளறுகு
சீந்திற்கொடி
கையாந்தகரை

சிறு செருப்படை
சிறுகுறிஞ்சாவேர்
சங்கம்வேர்
சங்கங்குப்பிவேர்
தேற்றான்வேர்
அமுக்கலாங்கிழங்கு
பூமிச்சர்க்கரைக்கிழங்கு
கொடுவேலிவேர்
தழிஞ்சிவேர்
ஊஞ்சல்பட்டை

வகைக்குப் பலம் 1

கடுக்காய்ப் பொடி
பரங்கிப்பட்டை

வகைக்குப் பலம் 2

இவைகளைச் சூரணம் செய்து, காலை மாலை 2 வராகனெடை வீதம் சாப்பிடச், சூலைக்கட்டு, வெள்ளை, கை கால்களி லுண்டாகும் வெள்ளை, வாதச்சூலை, வாதக்கடுப்பு தீரும்!

உப்பு, புளி நீக்கவும்.

5 மண்டலங் கொள்ளவும்.

## 169. இளநீர்க் குழம்பு

பசலைக் கிழங்கு அரைத்து, எலுமிச்சங் காயளவு ஏலம், சீரகம், அதிமதுரம் சாணியிற் கழுவிப் பொரித்துப், பொரிகாரம் இவைகளை யரைத்து, எலுமிச்சங் காயளவு உமிக்காந்தலில் வேக வைத்து, இளநீர்க் காயைக் கண் திறந்து, மேற்படி மருந்து களுடன் சேர்த்துச் சீனி, சர்க்கரையைக் கூட்டி, குழம்பு செய்து கொண்டு சாப்பிட, நீரடைப்பு, கல்லடைப்பு மூத்திர எரிவு, இரத்த மூத்திரம் தீரும்!

புளி, புகை நீக்கவும்; பசுவின் பால், தயிர் கூட்டவும்.

## 170. வாய்வுக்கு

சுக்கு
மிளகு
திப்பிலி
ஏலம்
கண்டுபரங்கி
இந்துப்பு
அதிவிடயம்
எவச்சாரம்
பொன்முசுட்டை வேர்
ஓமம்
சீரகம்
செவியம்
சித்திரமூலம்
திப்பிலிமூலம்

வகைக்கு வராகனெடை 5

இவைகளைச் சூரணித்துப் பசுவினெய்யிற் கொள்ள, தீபனம் உண்டாம்.

புளி நீக்கவும்

(எவச்சாரம் - நவச்சாரம்)

## 171. உறுப்புத்தள்ளிய மூலத்திற்கு

1. கருங்குங்கிலியம் பலம் ¼ சூரணித்து, எருமைத் தயிரிற் கொடுக்கவும்.

பத்தியம் - உப்பு, புளி நீக்கிப், பச்சரிசிச் சோறும், எருமைத் தயிருங் கூட்டவும், மூலம் உள்ளுக்கு வாங்கிக் கொள்ளும்!

2. மேற்படிக்கு,

சுக்கு
மிளகு
திப்பிலி

வெள்வெங்காயம்

அசமதாகம்

சீரகம்

கருஞ்சீரகம்

கொடிவேலிவேர்

பெருங்காயம்

சிறுதேக்கு

பஞ்சலவணம்

செவியம்

இவைகளை யோர்நிரையாய் வறுக்கவேண்டியவைகளை வறுத்துச் சூரணித்து, நல்லெண்ணையில் குழப்பிக் கொடுக்கவும்.

## 172. வாய்வுக்கு

ஓமத்தைச் சூரணித்துத் தழிஞ்சியிலை, குப்பைமேனியிலை கையாந்தகரையிலை, நொச்சியிலை, சாரணையிலை இவைகளை பிழிந்த சாற்றிற் பிசறி, மூன்று நாள் அழுக்கி வைக்கவும்.

பின், உலர்த்திச் சூரணித்து வெள்ளெருக்கம் வேர்ப்பட்டை, அரசம்பட்டை, சங்கம் வேர்ப்பட்டை, புங்கம் வேர்ப்பட்டை, பெருமரத்துப்பட்டை, குறிஞ்சாவேர், பொன்முசுட்டை வேர் வகைக்கு வராகனெடை 5, வெள்வெங்காயம் பலம் 1, சுக்கு பலம் 1 பெருங்காயம் வராகனெடை 2, திப்பிலி வராகனெடை 5, இவைகளைச் சூரணித்து, மேற்படி ஓமச்சூரணத்திற்குப் பாதியெடையாகச் சேர்த்துக் கலந்து, வெருகடியளவு கொள்ள, வாய்வு மந்தச்சன்னி, வாதம், புளியேப்பம், அக்கினி மந்தம் தீரும்!

புளி நீக்கவும்.

## 173. பரங்கிப்பட்டைச் சூரணம்

பரங்கிப்பட்டை பலம் 5

ஏலம்

செண்பகப்பூ

செங்கழுநீர்க் கோஷ்டம்

அக்கிரகாரம்

அதிமதுரம்

கருஞ்சீரகம்

மரமஞ்சள்

சுக்கு

மிளகு

வெள்வெங்காயம்

தூதுவளை வேர்

அமுக்கலாங் கிழங்கு

பேராமுட்டிவேர்

வெள்வேலிவேர்ப்பட்டை

செங்கத்தாரிப்பட்டை

நஞ்சுண்டாம் வேர்ப்பட்டை

விழும்பி வேர்ப்பட்டை

வகைக்கு வராகனெடை 3

இவைகளைச் சூரணித்துக் காலை மாலை 3 வராகனெடை வீதம் வெந்நீரிற் கொள்ள 40 நாள்,

1. சூலை வியாதி
2. வெடிச்சூலை
3. கால்கை முடங்கல்
4. வாதச்சூலை, தீரும்!

பத்தியம் - நல்லெண்ணை, கோழிக்கறி, பிண்ணாக்கு, முருங்கைக்கீரை, துவரம் பருப்பு, பசுவின் பால், தயிர், வெள் வெங்காயம், உப்பு இவைகளைப் புளி நீக்கி, வெந்நீர் வார்த்துக் கொள்ளவும்.

குமராய நம.

நல்லதம்பி வாத்தியார் மகன் இராசப்பன் எழுதிய பிரதி முற்றிற்று.

இதுவும் அது.

## 174. வயிற்றிலிருந்த பிள்ளை விழ

1. ஓரிலைத் தாமரைச் சமூலம் காடியிலரைத்து, முலை யிறங்கத் தடவ, விழும்!

2. சிற்றாமணக்கின் வேர் முன்றானையில் முடிந்தாலும் பிரசவமாகும்.

3. அரிதாரத்தை யரைத்துத் தேனில் கொடுத்தாலும் பிறக்கும்.

## 175. நஞ்சுக்கொடி விழ

மஞ்சள், முள்ளிக்காயளவு அரைத்துக் காடியில் கலக்கி, முன் வெல்லத்தைத் தின்னக்கொடுத்துப், பின்பு மேற்படி மஞ்சள் கலக்கிய காடியைக் கொடுக்க, நஞ்சுக்கொடி விழும்.

மேற்படி பிரதி, ஐயம்பாளையம் ஜோதிடம் கருப்புச்சாமி யாரால் கிடைத்தது.

திரிபுரசுந்தரி திருவடிகளே சரணம்!

ஸ்ரீமந் மகாதேவ்யாக பாதார விந்தாப்யாம் நமஹ.

## 176. விடாதச் சுரத்திற்கு

மயில் துத்தத்தை வெற்றிலைச் சாற்றிலரைத்து, வில்லை செய்துலர்த்திப் புடமிட்டுப், பின்பு மேற்படி சாற்றிலரைத் துலர்த்திப் புடமிடவும்.

இவ்வாறு ஏழு புடமிட்டு, எடுத்துப் பொடித்து, இடகு நாசியில் உலர்த்தவும் தீரும்!

## 177. பெரும்பாட்டுக்கு

தென்னம்பாளையை எலுமிச்சங்காயளவரைத்துத் தயிரில் கொடுக்கத் தீரும்!

### 178. சூதக வாய்வுக்கு

தும்பைச்சாறு
குப்பைமேனிச்சாறு
முருங்கைச்சாறு
குக்குடச்சாறு

இவைகளைக் கலந்து கொடுக்கவும்; உடனே தீரும்!

### 179. காமாலைக்கு

வெள்ளைச் சாரணைவேர், சனிக்கிழமை காப்புக்கட்டி, ஞாயிற்றுக்கிழமை கோழி பலிகொடுத்து, எடுத்துவந்து, சிறுதுண்டு களாக நறுக்கிக், கன்னியழியா பெண்பிள்ளை நூற்ற நூலால், தனது காலை நீட்டித், தோளளவு பிடித்து, மேற்படி நூற்சரடு திரித்து, மேற்படி வேர்த்துண்டுகளை மாலைகட்டிக் கழுத்தில் போடத் தீரும்!

ஏழாம்நாள் எடுத்துப் போடவும்.

(எடுத்துப்போடவும்-நீக்கவும்)

### 180. உப்புச் செந்தூரம்

கல்லுப்பு படி $\frac{1}{8}$ தும்பைச் சாற்றிலரைத்துலர்த்திப் புடமிடக் கருகும். பின்பு சாறுவார்த்து அரைத்துலர்த்திப் புடமிட மேற்கண்டபடியே கருகி யிறுகும். குப்பைமேனிச் சாறு வார்த் தரைத்துப் புடமிடச் சற்றே சிவக்கும். மனோசிலை பணவெடை சேர்த்து, மாட்டுப்புளிச்சான்சாறு வார்த்தரைத்துலர்த்திப் புடமிட, நல்ல செந்தூரமாகும்.

இந்தப்படி உப்பு கட்டிக்கொள்ளவும்;

தேனில் கொடுக்கக் குன்மம் எட்டும் தீரும்.

### 181. பவுத்திரத்திற்கு

நத்தைச்சூரி வேரரைத்து, நல்லெண்ணையிற் குழப்பி 30 நாள் கொடுக்கத் தீரும்!

## 182. வயிற்றுவலிக்கு

செங்கல்பொடியும், மிளகும் வறுத்து நீர்விட்டுச் சுண்டக் காய்ச்சி யிறுத்துக் கொடுக்கவும்.

## 183. விப்புருதிக்கு

1. நித்துகத்திரி, கொட்டையிலை இவ்விரண்டை வதக்கிக் கட்டவும்.

2. மேற்படிக்கு

இந்துப்பு, சாரமண்ணு, பேய்க்குமட்டிக்காய் இவற்றை ஊறப் போட்டுக் குடிக்கவும்.

பாலிலரைத்துக் குடித்து, மேலிலும் பூசவும்.

3. ஈரவெங்காய மரைத்து எருமை வெண்ணையில் கலந்து விழுங்கவும்.

4. ஆவாரங் கொழுந்தை நல்லெண்ணையிலரைத்துக் கட்டவும் தீரும்.

## 184. பவுத்திரத்திற்கு

1. சிற்றாமணக்கிலையும், எருக்க மொட்டும் பூவும் வதக்கி, யரைத்துப், பூசத் தீரும்.

2. சீத்திற் கிழங்கை எருமைப் பாலிலரைத்துப் சாப்பிடவும்.

3. மேற்படி வீக்கத்திற்கு, வசம்பு, வெள்ளைப்பூண்டு, கடுகு, கடுக்காய் இவைகளைத் துளசிச் சாற்றிலரைத்துப் பூசவுந் தீரும்.

## 185. எலிக்கடிக்கு

பெருங்குறிஞ்சாவேர் பசுவின்பாலிலரைத்து, ஐந்துநாள் கொடுக்கவும்.

பின்னும், நாய்ப் பீர்க்க விதையும், மேற்படி தழையும், வேளைவேரும் அரைத்து மூன்றுநாள் கொள்ள, எவ்வித எலிக் கடியும் தீரும்!

கைகண்டது.

### 186. மலட்டு வலிக்கு

பொன்னாங்கண்ணிவேர், சிறுபூளை வேர், நல்ல வெல்லம் இவைகளைப் பசுவின்பால்விட்டரைத்து, ஒருநாள் கொடுக்கவும்.

கடும்பத்தியம்; பாலுஞ் சோறும் சேர்க்கலாம்.

வயிற்றுவலி தீரும்!

### 187. கண் வலிக்கு

மஞ்சள் தேறு
கருங்குங்கிலியம்
மிளகு

இவைகளைப் பொடித்து, சீலை வைத்துத் திரிசெய்து, வலிக்கிற பக்கத்தில், நாசியில் புகை பிடிக்கவும்.

(தேறு-துண்டு)

### 188. காதில் நாய் புகுந்தால்

கார்த்திகைக் கிழங்கிலையைக் கசக்கிக் காதில் பிழிந்து, அடைத்து வைக்கவும்.

பின்பு, நெல்லிவேர், உள்ளி, வசம்பு, விளக்கெண்ணை, நல்லெண்ணை இவைகளைக் காய்ச்சிக் காதில்விட் டடைக்கவும்.

(நாய் என்பது இங்கே வீட்டுநாய் (dog) அல்ல; ஒருவகைப் பூச்சி)

### 189. சிரங்குக்கு

இரசம் வராகனெடை 1
சுந்தகம் வராகனெடை 3
நீர் வெட்டி முத்து வராகனெடை 7
கார்போகரிசி வராகனெடை 7½

இவைகளை எருமைப்பால், தேங்காய்ப்பால் கலந்தரைத்துச் சூரியப்புடம் வைத்துப் பூசத் தீரும்!

## 190. விரைவாதத்திற்கு

முருங்கையிலை படி 1
வெள்வெங்காயம் 8
வெந்தயம் பலம் 1
சுக்கு பலம் 1
மிளகு பலம் 1
கழற்சிப் பருப்பு 2

இவைகளை 2படி நீர்விட்டு ஆழாக்காய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

## 191. சோகை, காமாலைக்கு

சிறுசெருப்படி
நாயுருவி
துளசி
மல்லிகை
கையாந்தகரை
பொடுதலை
அவுரி
உப்பிலி

இவைகள் ஒவ்வொன்றும் எலுமிச்சங்காயளவு புளியிலை, குறுணி இவைகளைக் காடிநீர் விட்டுத் துவைத்து, அரப்பொடி போட்டு, நான்கு நாள் வெய்யிலிலே வைத்துப் பிழிந்து, மிளகு, உள்ளி, அரத்தை, கருஞ்சீரகம், வெந்தயம், ஓமம், சதகுப்பை, கடுகு ரோகணி, சுக்கு, கரந்தம், அரப்பொடி, குங்கிலியம் வகைக்குப் பலம் 1, கடுக்காய் 2 இவைகளை யரைத்து வேகவைத்துப் பின்பு எடுத்துக் கொண்டு 20 நாள் கொள்ள; குங்கிலியம் மேற்பொடி போடவும்.

சோகை, காமாலை, பாண்டு, விஷப்பாகம் தீரும்.

பத்தியம், கண்டிதம்.

(கண்டிதம் - கட்டாயம்)

### 192. கண்வியாதிக்கு ஆனந்த வயிரவ மாத்திரை

பொன்னாங்கண்ணிவேர்
சிறுகீரைவேர்
வெள்ளைக்காபூணம்வேர்
ஓரிதழ்த்தாமரைவேர்
வகைக்குப் பலம் 5
சங்கு
துத்தம்
வகைக்குப் பலம் 3
செம்புப்பொடி பலம் 4
சமுத்திரப்பழம் பலம் 1

இவைகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, மாத்திரை செய்து, நிழலிலுலர்த்திக் கொண்டு, காடியிலுறவைத்துக் கண்ணி லிடத் தீரும்!

### 193. கண்வியாதிக்குச் சந்திரோதய மாத்திரை

பொன்னாங்கண்ணிவேர்
சிறுகீரைவேர்
வெள்ளைக் காபூணம் வேர்
சங்கு
செங்கழுநீர்க் கிழங்கு
திருத்துழாய்
செங்கழுநீர்த் தாது
தாமரைவளையம்
கோஷ்டம்
வகைக்குப் பலம் 1
துத்தம் பலம் 3
வெண்கல சாகமம் (?) பலம் 5

இவைகளை நாலுநாள் முலைப்பால் வார்த்தரைத்து, மாத்திரை செய்து, நிழலிலுலர்த்திக், கண்ணிலிடக் கண்ணோய் தலைநோய் தீரும்!

## 194. கண் ஆணிப்பூவுக்கு

[illegible]
சேவல்நெஞ்செலும்பு
குதிரைக்குளம்புமல்லு
கழுதைக்குளம்புமல்லு
ஆமையோடு
பலகரை
சங்கு
செம்பு
மான்கொம்பு
பன்றிக்கொம்பு
முயலெலும்பு
தேற்றான்விதை
கடல்சிப்பி
முட்டையோடு
புலிநகம்
வெள்ளைக்காவளைவேர்
வெள்ளைச்சாரணைவேர்
புங்கம்விதை
மகிழம் விதை
ஆட்டுக்கொம்பு
இந்துப்பு
மனோசிலை
கற்பூரம்

வகைக்குப் பலம் 1

இவைகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தி, நெய்யிலுறைத்துக் கண்ணிலிடச் சகல கண்ரோகங்களும் தீரும்!

### 195. கண்ரோகங்களுக்கு சந்திரோதய மாத்திரை

பலகரை
கடுக்காய்
தான்றிக்காய்
நெல்லிவற்றல்
கற்பூரம்
இந்துப்பு
துத்தம்
அஞ்சனக்கால்
கருடப்பச்சை
பீதரோகணி
கஸ்தூரி மஞ்சள்
தாமரைப் பூ
மாதுளை
கடல்நுரை
திரிகடுகு
வெள்ளிலை
ஓரிதழ்த்தாமரை
அரப்பொடி
தண்ணிவேர்

இவைகளை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து, மாத்திரை செய்து நெய்யிலுரைத்துக், கண்ணிலிடச் சகல கண் ரோகங்களும் தீரும்!

### 196. காது கேளாததற்கு

உள்ளி, வசம்பு, மஞ்சள் இவைகளைப் பாகலிலைச் சாற்றி லரைத்து, நல்லெண்ணெயிற் கலக்கிக் காய்ச்சிக் காதில் விட்ட டைக்கத் தீரும்!

### 197. உள்மூலம், புறமூலங்களுக்கு

பேய்ப்பீர்க்கன் விதை படி 1, இதை எருக்கலாம் பழுப்புச் சாறுவிட்டு அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துச் சூரியப் புடம் வைக்கத் தைல மிரங்கும்.

மேற்படி தைலத்தில் துருசு வராகனெடை 1/2 கலந்து, உள் மூலத்திற்கு விரலிற்றடவி, உள்ளுக்கு (எச்சில் வாயில்) சுற்றிலுந் தடவக் கரைந்து போகும்!

புறமூலத்திற்கு மேலே தடவ, மூல முளை விழுந்துவிடும்!

செம்பருத்திப் பூ நெய்யிலிட்டுக் காய்ச்சித் தடவ மேற்படி புண்ணாறும்.

### 198. விக்கலுக்கு

பொடுதலையிலை

சிறுசெருப்படியிலை

விளாவிலை

நொச்சியிலை

இவைகளைக் காடிவார்த் தரைத்துச் சட்டியிலிட்டு முகர்ந்து பார்க்க, விக்கல் உடனே நிற்கும்!

### 199. மலட்டுப் புழுவிக்கு

ஆண்வசம்பு

பெண்வசம்பு

வகைக்கு வராகனெடை 1

மிளகுதக்காளியிலைச்சாறுபடி ½

மேற்படி வசம்பையரைத்து, மேற்படி சாற்றில் கரைத்து, ஒரு படி தண்ணீரில் விட்டு, மேற்கு முகமாக நின்று, மேற்படி மருந்தைச் சாப்பிட்டுப், படியை எறிந்துவிடவும்.

படியை, வேறு ஆள்விட்டு எடுத்துவரவும். 3 தரம் மேற்படி நீரில் முழுகிவரவும். வீட்டுக்குத் தூரமான முதல்நாள், மறுபடி இரண்டுநாளும், மேற்கண்டபடியே செய்யவும். நான்காவது நாளில், பேய்க்குமட்டிக்காயில் விதையை நீக்கிச் சங்கிலை பிடி 2 சேர்த்து, அவித்துப் பிசைந்து, பிழிந்து குடிக்கவும்.

மேற்படி புழு மலத்தோடே விழுந்துவிடும்!

பச்சரிசிக் கஞ்சி குடிக்கவும்; உப்பு, புளி நீக்கியிருக்கவும். மூங்கிலிலை, தும்பையிலை, குப்பைமேனியிலை இவற்றின் சாற்றை முழுங்கியவுடனே கையிற் பிழிந்து குடிக்கவும். சூத்திரச் சாதியானால் முழுகிவந்தவுடன் கோழிச்சாறு குடிக்கவும். மலட்டுப்புழு வியாதி தீரும்!

கை கண்டது.

## 200. சிறுநீர் சிறுத்திரங்குவதற்கு

நல்ல பிண்ணாக்கை யிடித்துத் தேங்காய்ப் பாலில் வேக வைத்துச் சாப்பிடவும்.

தை வேளையை வாய்பேசாமல் பிடுங்கி, எலுமிச்சங்காயளவு அரைத்துப் பனங்கருப்புக் கட்டியில் 5 நாள், 2 வேளை சாப்பிடத் தீரும்!

பசுவின்பால் சேர்த்து, வெந்நீரில் குளிக்கவும்.

(சிறுத்திரங்குவதற்கு = சிறுத்து + இரங்குவதற்கு; கொஞ்சமாக வருவதற்கு

பசுவின் பால் சேர்த்து - பசுவின் பாலை உணவில் சேர்த்து.)

## 201. முலை சுரக்க

குன்றியிலைச்சாறு உரி

சுக்கு பலம் $\frac{1}{4}$

சிறுகுமட்டிவேர் பலம் $\frac{1}{2}$

இவற்றைப் பசுவின் பாலிற் கரைத்துச் சாப்பிட, முலைப்பால் சுரக்கும்!

மாடு, எருமை முதலியவற்றிற்குமாகும்.

## 202. முலைப் பெரும்பாட்டுக்கு

தென்னம்பாளையை விளாங்காயளவு அரைத்துப், பசுவின் பாலிற் கரைத்துச் சர்க்கரை சேர்த்துக் குடிக்கவும்.

கை கண்டது.

## 203. சலக் கழிச்சலுக்கு

சீலைசுட்ட சாம்பல் ஆழாக்கு, நெற்பொரிச்சூரணம் ஆழாக்கு இவ்விரண்டுங் கலந்தரைத்து, வடிகட்டி, வெருகடியளவு கொள்ளவும்.

கை கண்டது.

## 204. இலிங்கச் செந்தூரம்

சாதிலிங்கம் வராகனெடை 5, வேப்பங்காய்-இவற்றை யிடித்துச் சாறு பிழிந்து, சுருக்குக் கொடுத்துப் பொடித்துக் கொள்ளவும். சன்னி, சுரம் தீரும்!

மாத்திரையாகவும் உபயோகிக்கலாம்.

## 205. அப்பிரகச் செந்தூரம்

அப்பிரகத்தைக் கையாந்தகரச் சாற்றிலரைத்துலர்த்தி, ஓட்டி லிட்டுக், கட்டிச், சீலைமண் செய்து, புடமிடச் செந்தூரமாம்.

## 206. உப்புக்கட்டு

கறியுப்பைக், கொடிக்கள்ளியைத் துவைத்துச் சாறுவிட்டு அரைத்து, ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து புடமிடக் கட்டும்!

## 207. தாதுவிருத்தி அல்லது வாதமெழுப்பி

சாதிலிங்கத்தைக் கோழிக்கு மேய்த்து, மேற்படி கோழியைச் சமைத்துச் சாப்பிட, வாதமெழும்பும்!

## 208. வாந்திக்கு

சுக்கு
அரிதாரம்
சீனிக்காரம்
வெண்காரம்
கடுக்காய்
சீனிச்சர்க்கரை

இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றி லரைத்து, மாத்திரை செய்து கொண்டு, நாவிலிட வாந்தி நிற்கும்!

## 209. பாண்டுரோகத்திற்கு

1. கற்றாலஞ்சருகு, களிப்பாக்கு, கடுக்காய், விழிம்பித்தழை இவைகளை இரவடுப்பில் கசாயமிட்டு, மேற்படி கசாயத்தில் வெங்காரம், கடுகுரோகணி இவற்றையரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்!

2. மேற்படிக்கு,

நீலிவேர்
செங்கத்தாரி
பூதக்கரப்பான் பட்டை
வெள்ளைப்பூண்டு
வசம்பு

இவைகளைப் பொடித்து, விளக்கெண்ணையிலிட்டுச் சூரியப்புடம் வைத்து, மூன்று நாள் சாப்பிட்டு, ஏழு நாள் பத்தியமிருக்கவும்.

## 210. நாசியில் இரத்தம் விழுவதற்கு

சேலையைச் சுட்டு, இளவெந்நீரிற் கொடுத்து, ஆவாரை யிலையை யரைத்து, உச்சந்தலையிற் பற்றிடவும்.

## 211. உஷ்ணத்திற்கு

1. கற்றாழஞ்சோற்றில், கற்கண்டு, மான்கொம்பு இவற்றைப் பொடித்து, மத்தித்துச் சாப்பிடவும்.

2. சீரகம், சர்க்கரை இவற்றைப் பொடித்து, எலுமிச்சம் பழச் சாற்றில் மத்தித்துச் சாப்பிடவும்.

## 212. வாதச்சரீரத்திற்கு

நல்லெண்ணை
தும்பைச்சாறு
வெள்ளாட்டு மூத்திரம்

இவற்றைச் சமனிட்டு, மூன்று நாள் சாப்பிட்டு, 5 நாள் கடும் பத்தியமா யிருக்கவும்.

### 213. விப்புருதிக்கு

கருங்காவளை வேர்
மந்தைப்புலிக் கொழுந்து
ஊர்க்கள்ளிப்பால்

இவற்றை யரைத்து, வெந்நீரிற் கொடுக்கப் பேதியாகும்!

மாற்று - மோருஞ்சோறுண்கவும்.

இந்தப் பிரதி கோ. கருப்பநாவிதனால் கிடைத்தது.

"ஸ்ரீமந் மகாதேவ்யாக பாதாரவிந்தாப்யாம் நமஹ"

### 214. சகல புற்று, பிளவைக்குத் தைலம்

1. சரமாக அழிஞ்சிவிதை புங்கம் வித்து
தான்றிவிதை புன்னைவிதை காடுக்காய் கார்கோல்
அரியொடு சமமாகப் பாண்டத்தி லிட்டு
முறிவிட்டு இருபதுநா ளான போது
உரமாக நிழலுலர்த்தி மிளகு நாழி
உடன்கலந்து பின்னுமதைப் பாண்டத்தி லிட்டு
நிறமாகக் குழித்தைல மிறக்கி வாங்கி
நிருவாண பூசைசெய்து எடுத்துவைப் பாயே!

2. வைத்திருந்த தைலத்தில் கொஞ்சம் தொட்டு
மயிர்நுனியில் நடவைது கறுத்துப் போகும்!
மெய்த்திருந்த வெடிசூலை கண்ட மாலை
மேலூறு சொறிசிரங்கு கரப்பான் எல்லாம்
மொய்த்திருந்து நெற்றுபோ லாகு மப்பா
மூதண்டக் குழித்தைல மிறக்குவாயே!

3. முழுகையிலே விஷம்தீரும் குட்டம் தீரும்
முடிசிரங்கு தலைவெட்டை மேகந் தீரும்
மழுகையிலே புழுவெட்டு ரோமத் தீயால்
வறுமையிம்மை மற்ற ஆறும் தீரும்!
விழுகையிலே சுழற்றிநோய் நடுக்கம் தீரும்!
மிகுசிரங்கு குறுந்தடிப்பூ வினையும் தீரும்
வழுகையிலே பாம்பரணைக் கடியும் தீரும்
மணியடிச் சிலந்திக்கடி அரணை போமே!

4. போமென்ற குழிவாழை முட்டு வாழை
புறவாழை துடைவாழை முதகு வாழை
ஆமென்ற [illegible]புருதி [illegible] வாழை
ஆமை யூமையடி சிலந்தி வாழை
வேமென்ற . . . . . . . கன்னப் புற்று
மிகுபிடரி நுனிநாசி சிலந்திப் புற்று
தாமென்ற பிளவையிலை கண்மேல் வந்த
சரிநெற்றிப் பிளவையிலை தணியும் பாரே!

5. தணிவான பெண்குறிமேல் கரப்பான் கட்டு,
கடைச்சிலந்தி அல்குலின்மேல் புற்றும் பாரு
பிணியான பவுத்திரங்கள் மூளைமூ லங்கள்
பின்கரப்பான் முன்கரப்பான் ரணப்பத் துந்தான்
துணிவான உந்திப்புண் துடையில் புற்று
துடிசூலை இடிசூல மேகாச்சூலை
கணியான பலகடிகள் இலைமேற் புண்கள்
நாக்குமேல் நாக்குப் புற்றுப் போமே!

6. புற்றுப்போம் நரல்பிளவை நடுக்கிற்சூலை
புரைவிழுந்த படுகிடங்கு நிறுத்துப் பாரு
அற்றுப்போம் நாக்குநுனி மூக்கிற் புண்ணும்
அரையாப்பு பிசாசுநீர் கோளைப் புற்று
விற்றுப்போம் நாற்பூடு தாக்குண்ட புண்ணும்
விழிமுழுங்கி இமைமுழுங்கி வேசிப் புற்றும்
செற்றுப்போம் இத்தனைக்கும் பூசும்போது
தீர்ந்துபோம் இன்னமுண்டு சொல்லக் கேளே!

7. சொல்லக்கேள் நல்லரவும் விரியன் பாம்பு
சிலெலிகள், குருட்டெலிகள் புடையன் மூக்கன்
வெல்லக்கேள் தேள் நட்டு வக்காலி
விஷமுள்ளத் தைத்தாலும் பூசுபூசு
இல்லைகேள் இறந்துவிடும் விஷங்க ளெல்லாம்
இத்தைலம் பெருசுருக்கு சுருக்கு மெத்த
கொல்லக்கேள் விஷங்களோடு நோய்க ளெல்லாம்
கொல்லுமென்றே இத்தைலம் கூறி னேனே!

8. கூறினேன் புகையிலையும் புளியும் தள்ளு
   கூடாது பச்சைமீன் தள்ளு தள்ளு!
மீறியுண் ணாதே அன்னத் தையும்
   விழுங்காதே உறங்காதே தெய்வமோ தாதே
ஏறியே கண்டவனை எய்தி டாதே
   ஏசாதே வையாதே தீண்டி டாதே!
ஆறியே பதமாக நின்றா லப்பா
   வலமாகத் தானிலக் கறியும் பாரே!

## 215. அப்பிரகச் செந்தூரம்

அப்பிரகம், பூநீறு, காரம்-வகைக்குப் பலம் 1 வல்லாரைச் சாற்றில் மூன்று நாளரைத்து, வில்லை தட்டி, யுலர்த்தி, ஓட்டி விட்டுச், சீலைமண் 3 செய்து, கஜபுடம் போட்டெடுக்க, மஞ்சள் நிறமாகும்.

பின்பதனைக் காரம் பலம் 1 சேர்த்து, பொன்றலைக் கரிப்பான் சாற்றிலரைத்து, முலைப்பால் சேர்த்து, வில்லை செய்து, காய வைத்து, ஓட்டிவிட்டுச், சீலைமண் மூன்று செய்து, கஜபுடமிடச் செந்தூரமாகும்.

மேற்படி செந்தூரம் நெய்யிற் பணவெடை கொள்ள, வாத மேகம், நீரிழிவு தீரும்!

தேனிற்கொள்ள, பாண்டு தீரும்!

சர்க்கரையிற் கொள்ள, குஷ்டம் தீரும்!

கடுக்காய்ச் சூரணத்திற் கொள்ள நரை, திரை தீரும்!

## 216. பெரும் பாட்டிற்கு

நல்ல வெல்லத்தில், கருங்கம்பளி பொதித்துச் சுட்டு, அரைத்து, எருமைத் தயிரிற் கொடுக்கத் தீரும்!

## 217. நீரடைப்பிற்கு

முருங்கைக் கொழுந்து 5, மிளகு 5; எலிப்பிழுக்கை - இம் மூன்றுமரைத்து, விளக்கெண்ணெயிற் குழப்பித் தொப்புள், அடி வயிறு பூசி, முக்காலியின் பேரிலிருக்கவும்.

கல்லடைப்பு, நீரடைப்பு, மாங்கி அடைப்பு தீரும்!

இதற்கு உள்மருந்து-நல்ல தும்பை யிலையை யரைத்துக் கொட்டைப்பாக்களவு மிளகரைத்து கொட்டைப்பாக்களவு வெள்ளுள்ளியரைத்துக், கொட்டைப்பாக்களவு இம்மூன்றையும் கால்படி பழந்தண்ணீரிலரைத்துக் கலக்கி, வெருகடியளவு புகையூறல் போட்டுக் கொடுக்க, 5 நேரம்; உடனே எவ்வித அடைப்பும் தீரும்!

கைகண்டது.

## 218. பைத்தியம் எடுக்க

கலப்பு எருக்கலாம் பாலூட்டி, யுலர்த்திச் சூரணித்து, இள வெந்நீரிற் கொடுக்க, வாந்தியாகும்!

துருசைப் பொடித்துப் பாலிலிட்டுக் காய்ச்சி, யுறையிட்டுக் கொடுக்க, வாந்தியாகும்!

## 219. பித்தச் சன்னிக்கு

சீந்திக்கொழுந்து
சாரணைவேர்
வேலிப்பருத்திச்சமூலம்
இண்டங்கொழுந்து
வெள்ளுள்ளி
வசம்பு

இவைகளை விளக்கெண்ணையிலிட்டுச் சிவக்கக் காய்ச்சி வடித்து, உள்ளுக்குக் கொடுத்து, மேலினும் துவளையிடத் தீரும்!

## 220. விப்புருதிக்கு

வெள்ளைச் சாரணைவேர், வெள்ளாட்டுச் சிறுநீரில் முள்ளிக் காயளவு அரைத்துக் கொடுக்கப், பேதியாகிக் குணமாகும்!

## 221. கரப்பான் புண்களுக்கு

அமுக்கிலாங்கிழங்கு, புன்னாக்குப் பூருச்சமூலம்-வகைக்கு முள்ளிக்காயளவு அரைத்து $\frac{1}{4}$படி நல்லெண்ணையிலிட்டு, எலுமிச்சம்

பழச்சாறு படி ¼ சேர்த்துக் காய்ச்சி, யிறக்கி, யதில் வாழைப் பழம் போட்டு, நாள் ஒவ்வொரு பழம் சாப்பிட்டு, கல்கங்களைப் புண்களில், தேகத்தில் பூசவும் தீரும்!

(கல்கம்-நீர்விட்டு அரைக்கும் குளிகை மருந்து)

## 222. மண்டையிடி வகைக்கு

அரிதாரமும், எருக்கம் வேரும், எலும்மிச்சம்பழச் சாற்றி லரைத்துத் திரிசெய்து, புகைபிடிக்கக் கபாலச்சூலை, செவிநோய், பீனிசம், மண்டையிடி தீரும்!

## 223. அந்திரவாயுவுக்கு

உகானிலை படி 1, கல்லுப்பு படி 1, சேர்த்திடித்துத், தூளாக்கி, வறுத்துக் கொட்டிப்போட்டு, அந்தச் சட்டியில் ஒருபடி எருமை மோர் வார்த்துக் கலக்கி, வெஞ்சனம் வைத்துக் கொடுக்கவும்.

புளி, புகை நீக்கி மோர் சேர்க்கவும்,

## 224. மேகநீர், வீக்கம், சோகை, காமாலைக்கு

கோவைத்துண்டை மேற் புறணி நீக்கி, நறுக்கியிடித்துப், பிட்டு வேகவைத்துப் பிழிந்தெடுத்த சாற்றில் வெண்காரம் பொரித்துப் போட்டு, ஐந்து நேரங்கொடுத்துக், கடும் பத்தியமாயிருந்து, ஒன்பதாம் நாள் தண்ணீர் வார்க்கவும்.

அமுக்கலாங்கிழங்கு பலம் 5 தறித்துப், பசுவின்பால் விட்டாட்டி நல்லெண்ணையிற் போட்டு மெழுகுப்பதமாய்க் காய்ச்சித் தலை முழுகிவர, மேற்கண்ட வியாதிகள் தீரும்!

## 225. இரசப்பற்பம்

சாதிலிங்கம் வராகனெடை 2 - இதை வெங்கக்கல்லைப் பொடித்துச் சிவனார் வேம்புத் தைலத்தில் அரைத்துக் குகைசெய்து லிங்கத்தை வைத்து, மேல்மூடி வைத்துச் சீலைமண் மூன்று செய்து லர்த்தி, ஏழெருவில் புடமிடப் பற்பமாகும்.

## 226. தாளகப்பற்பம்

1. சுத்தி செய்த தாளகம் வராகனெடை 5, இதை வெங்கக் கல்லைப் பொடித்துப், பொற்றலைக் கையாந்தகரைச் சாறுவிட்டரைத்து, குகையும் மூடியும் செய்து, அதில் வைத்துச் சீலைமண் மூன்று செய்து, பத்தெருவிற் புடமிடப் பற்பமாகும்.

2. மேற்படி பற்பம் : 3,

பொற்றலைக் கையாந்தகரைச் சாறு, கள்ளிப்பழச் சாறு, குப்பைமேனிச் சாறு இவைகளில் போடலாம்.

3. மேற்படி பற்பம்:

தாளகம் வராகனெடை 5, அண்டஓடு வராகனெடை 5 - இவ்விரண்டையும் மேற்கண்ட நான்குசாறும் விட்டரைத்து, மணல் மறைவில் புடமிட்டாலும் பற்பமாகும்.

## 227. அயச்செந்தூரம்

அயம் பலம் 1
உப்பு பலம் $1\frac{3}{4}$
காரம் பலம் 1
வீரம் பலம் 1
3 தரம் வெள்ளாவியில் சுத்தித்த வெள்ளைப் பாஷாணம் வராகனெடை 5

இவைகளை எலியாமணக்கம் பாலாலரைத்து வார்த்து, தாமிரச் சிமிழில் வைத்து, மேற்படி மருந்து மறைய, மேற்படி பாலை விட்டு, அடுப்பில் வைத்துத், தீ வைத்து எரிக்கட்டும்.......

## 228. பிரமேகத்திற்கு

1. முற்றிய தேங்காய்ப்பால் படி $\frac{1}{2}$, வெள்ளுள்ளி பலம் 1, அரைத்துக் கலக்கி, இரண்டு காசெடை குப்பைமேனிச் சாறுவிட்டு, நான்கு நாள் கொடுக்கவும்.

பத்தியம் - வெந்நீரும் சோறு முண்கவும்.

2. மேற்படிக்கு கற்றாழையைப் பிழிந்து, அதில் பாசிப்பயறு போட்டு, ஊறவைத்தெடுத்தெடுத்துப் பசுவின் பாலிலரைத்துக் கொடுக்கவும்.

3. அகத்திப்பட்டைச் சாறும், பசுவின் பாலும் சரியாய்க் கூட்டிக் கொடுத்தாலும் தீரும்!

பத்தியமாயிருக்கவும்.

## 229. மண்டையிடிக்கு

கொடிவேலிவேர்ப்பட்டை பலம் 1, கற்றாழப்பால் விட்டரைத்து, ஒருபடி நல்லெண்ணெயிலிட்டு, மெழுகுப் பதமாய்க் காய்ச்சி முழுகவும்.

சிகைக்காய் தேய்க்கவும்; புளி, புகை தள்ளவும்.

## 230. நீரடைப்புக்கு

1. சுண்டையிலையைத் துவைத்து, வெண்காரம் பொரித்துப் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.

2. செங்கீரைத் தண்டுச் சாற்றை பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்க, நீரடைப்பு, கல்லடைப்பு, துர்மாங்கிஷ அடைப்பு இவைகள் தீரும்!

மேற்படிக்கு, தவசிமுருங்கையிலையைத் துவைத்துப், பெண்கள் சிறுநீரிற் பிசைந்து, அரைப்பிடி ஒருபிடி கொடுக்க, சணத்தில் கல்லிருந்தாலும் விழும்!

கை கண்டது.

## 231. வெள்ளை வெட்டைக்கு

1. வெங்காயச் சாறும், நல்லெண்ணையும் சரிசேர்த்து, மூன்று நாள், இரண்டு வேளையும் கொடுக்கவும்.

உப்பு, புளி, புகை யிவை நீக்கவும்; சீ விழுவதும் தீரும்!

(சீ-சீழ்)

2. மேற்படிக்கு, ஆவாரை விதை, வெந்தயம் இவைகளின் சூரணங்கள் சரிசேர்த்து, எருமைத் தயிரிற்கொள்ள தீரும்!

## 232. அருகம்வேர்க் கிருதம் தைலம்

அறுகின்வேர் துலாம் 1 நூறு படி நீர்விட்டு, நாலுபடியாகக் காய்ச்சி, வடிகட்டி, யதில் பசுவின் நெய்படி 1, மாதுளம் பழச் சாறு படி 1 சேர்த்து, அதிமதுரம் பலம் ½, தாமரை வேர், செங்கழுநீர் மூலம்-வகைக்குக் கழஞ்சு 2, இவைகளைப் பாலிலரைத்து போட்டுக், கமலாக்கினியாயெரித்துப் பதமாக வடித்துக் கொள்ள கிரிசனம், கிராணி, பிரமியம், கபாலச்சூடு, கிறுகிறுப்பு, இவைகள் தீரும்!

பத்துநாள் கொள்ளவும்; இடுப்பு வலி, கடுப்பு வலி முதலிய வைகள் தீரும்!

## 233. விஷபாக முதலிய வீக்கங்களுக்கு

வெள்ளைச் சாரணைச்சாறு, கையாந்தகரைச் சாறு சிற்ற கத்திச்சாறு, நீர் முள்ளிச்சாறு வகைக்கு படி ½, பசுவின் பால் படி 1, நல்லெண்ணை படி 1 கலந்ததில் அதிமதுரம் கஸ்தூரி மஞ்சள், வகைக்கு பலம் ½, சடாமஞ்சி கருஞ்சீரகம், நற்சீரகம் வகைக்கு வராகனெடை 2 இவைகளை யரைத்துப்போட்டு, மெழுகுப் பதமாய்க் காய்ச்சித் தலைமுழுகவும் தீரும்!

## 234. மூலக்கிராணிக்கு

கொம்பரக்கு, சாதிக்காய், அபினி, குரோசாணியோமம் இவை களைப் பொடித்து நல்லெண்ணையிற் பிசைந்து கொடுக்க மூலக் கிராணி, கடுப்பு, சூடு, குத்து தீரும்.

பத்தியம் மோருஞ்சோறுண்க,

## 235. உத்திர வாயுக்கு

ஏலவரிசி, ஈரவெங்காயம், நற்சீரகம், நல்லவெல்லம், இவை களைக் கற்றாழை வேர்ச்சாற்றிலரைத்துத், தானிக்காய்ப் பிரமாணம் ஆறுநேரங் கொடுக்க, உத்திரவாயு, பெரும்பாடு தீரும்!

பத்தியம் உப்பு நீக்கி, எருமைத் தயிரும் சோறுமுண்கவும்.

## 236. வைத்தியத்திற்கு

மாட்டெலும்பு, நாய்மண்டையோடு, மனிதர் வெந்த எலும்பு இவைகளைக் கழுதைப்பால் விட்டாட்டி, வில்லை செய்துலர்த்திக் குக்குடப் புடமிடப் பற்பமாகும்;

மேற்கண்ட பற்பம் கழஞ்சு கழுதைப் பாலில் பத்துநாள் கொடுத்துப் பசுவின்பால் சேர்த்துப் பத்தியமாயிருக்கவும்.

எலுமிச்சம்பழச்சாறு, முலைப்பால், கோகுலத்தின்பால், பசுவின் கோமயம், முசுமுசுக்கைச்சாறு, கொடுப்பைச்சாறு - வகைக்குப்படி 4 நல்லெண்ணை படி 1 சேர்த்ததில், அதிமதுரம், கோட்டம், ஏலம், சீரகம், சந்தனம், வகைக்குப் பலம் 1 - இவைகளைக் கோவையிலைச் சாறு யிட்டரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலையில் குடோரியாடி, நூறுகுடந்தண்ணீர்விட்டு, மோருஞ்சோறு உண்ணவும்.

இப்படி ஒரு மண்டலஞ் செய்தால் வெறி, பித்தந் தீரும்!

## 237. பாண்டு ரோகத்திற்கு

கொடுவேலிவேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்குப் பலம் 1, இவைகளைப் பசுவின் பாலிலரைத்து ஒருபடி பசுவினெய்பிற் கலக்கிக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடித்து, மூன்று நாளைக் கொருதரமாக முழுகிவரப், பாண்டு, தேகவெளுப்பு தசைநீர் இவைகள் தீரும்!

## 238. அரிதார எண்ணை

அரிதாரம் வராகனெடை 4, இதைக் கோசலத்தில் 1 சாமமும், சுண்ணாம்புத் தண்ணீரில் 1 சாமமும் ஊறவைத்து, மூன்று செங் கோட்டையை மனிதர் சிறுநீரில் வேகவைத் துலர்த்தி இவ்விரண்டை யும் பொடித்துப் பசுவினெய், எருமை நெய், வெள்ளாட்டு நெய் இம்மூன்று நெய்யும் ஆழாக்களவு இதில் போட்டு வேகும்போது அதில் நெல் போட்டால் பொரியும்! அப்போது, ஒரு தாழியில் குளிர்ந்த சலம் விட்டு, அதில் மேற்படி நெய்யையூற்றினால், நெய் மிதக்கும்!

அதை வழித்து, நாள் 1க்கு, வெருகடியளவு கொள்ள, மேக ரோகங்கள் எல்லாம் திரும் !

பத்தியமாயிருக்கவும்.

(கோசலம் – பசுமூத்திரம்)

### 239. வங்காரச் சஞ்சீவி

இரசம் வராகனெடை 12
அரப்பொடி வராகனெடை 50
காந்தம்
அப்பிரகம்
வெண்காரம்
கந்தகம்

வகைக்கு வராகனெடை 12

இவைகளைச் சுத்தித்து, நாவல்பட்டைச் சாற்றில் அரைத்து, வில்லை செய்துலர்த்தி, ஓட்டிலிட்டுச் சிலைமண் செய்து, வராகப் புடமிடவும்.

பின்னும், மேற்படி சாற்றிலரைத்து, மேற்படி புடமிடவும்.

இப்படியே, கற்றாழஞ்சாற்றில் 2 புடம், மருதம்பட்டைச் சாற்றில் 2 புடமும், முருங்கிலைச் சாற்றில் 2 புடமும், கொடிவேலிக் கஷாயத்தில் 2 புடமும், திரிபாலைக் கஷாயத்தில் 2 புடமும், எலுமிச்சம்பழச்சாற்றில் 2 புடமும், ஆவரம்பட்டைக் கஷாயத்தில் 2 புடமும், அரசம்பட்டைக் கஷாயத்தில் 2 புடமும், போட்டு எடுத்துக்கொண்டு, 1 நாளுக்கு 1 பணவெடை வீதம், திரிகடுகுச் சூரணத்தில் சுவாசக்காசமும், முருங்கைப்பட்டைச்சாற்றில் மந்தாரக் காசமும், சீரகக் கஷாயத்தில் பித்தக்காசமும், வெள்ளாட்டு மூத்திரத்தில்,

1. காமாலை
2. விஷவாதம்
3. பாண்டு
4. நீர்க்கோவை
5. மகோதரம்

இவைகளும், பசுவின் வெண்ணையில், சிப்பிரமியம், இரத்தப் பிரமியங்களும், இஞ்சிச்சாற்றில் சீதச்சுரமும், முலைப்பாலில் பித்தச் சுரமும், நொச்சிச்சாற்றில் சிலேட்டுமச் சுரமும், மலைதாங்கி, கருவேப்பிலை, சுக்கு இவைகளின் கசாயத்தில் சுரமும், மாதுளை, ஆவாரை, நீர்ப்புலா, காரை இவைகளின் வேர்க் கசாயத்தில் சகல கிராணிகளும், எலுமிச்சம்பழச்சாற்றில் ஆரோக்கியமும், பனை வேர்க் கசாயத்தில் விக்கலும், அரத்தைச் சூரணத்தில் கபக்கட்டும், வேப்பிலைக் கசாயத்தில் விஷமும் தீரும்!

பத்தியம் - கைப்பு, புளி நீக்கவும்.

## 240. ஈருள்ளி எண்ணை

சதுரக்கள்ளியுப்பு படி $\frac{1}{8}$ பொடித்து, மேல்தோல் போக்கிய வரிக்குமட்டிப் பழம் 8க்குள் வைத்து, விளக்கெண்ணை படி 2 இல் அமுங்காமல் வைத்து, ஐந்து ஈரவெங்காயம் நறுக்கிப்போட்டு, வேடு கட்டி ஏழுநாள் சூரியப்புடம் வைத்து, எட்டாம் நாள் சிறுகொதி யிட்டு, ஒரு படி நிலையாவாரை வேரைத் தட்டிப்போட்டுக் காய்ச்சி, வடியாமல் வைத்துக்கொண்டு, ஒரு தரம் காசெடை கொள்ள,

1. கெண்டை
2. கவுசை
3. காமாலை
4. மகோதரம்
5. வீக்கம்

இவை முதலியன தீரும்!

கை கண்டது.

## 241. தாகம், வாந்திக்கு

வில்வக்கொழுந்து
பூங்கோரைக்கிழங்கு
அதிமதுரம்
விலாமிச்சம்வேர்
வெட்டிவேர்
நன்னாரிவேர்

இவைகளைக் கலத்திலிட்டுக் காய்ச்சி வடித்துப், பணவெடை பஞ்ச தாரை போட்டுக் கொடுக்க, எல்லாவிதத் தாகமும், வாந்தியும் தீரும்!

### 242. வங்காரச்சஞ்சீவி அக்கினிகுமாரச் செந்தூரம்

அரப்பொடி
உருக்குப்பொடி
இரசம்
செம்பரப்பொடி
வெண்கல அரப்பொடி
வெண்காரம்
மனோசிலை
அரிதாரம்
திப்பிலி

வகைக்குப்பலம் 1

காந்தம் பலம் 2
நெல்லிக்காய்
கந்தகம் பலம் 6

இவைகளைக் கற்றாழஞ்சாறு விட்டு மூன்று நாளரைத்துச், சட்டியி லிட்டு, மேற்சட்டி மூடி. ஒரு சீலைமண் செய்து, மூன்று நாள் விடாமல் தீயெரித்து, ஆறவிட்டெடுக்கச், செந்தூரமாகும்.

மேற்படி செந்தூரம் ஒரு வராகனெடை பச்சைநாவியைக் கோசலத்தில் மூன்றுநாள் ஊற வைத்துலர்த்திப், பின்பு வெள்ளாட்டு மூத்திரத்தில் மூன்று நாலூற வைத்துலர்த்தித், திப்பிலி மூலம் 2 பலம் சேர்த்து, வெள்ளுள்ளித் தைலம் வார்த் தரைத்துச் செந்தூரத்துடன் கலந்து, பணவெடை யளவாக மாத்திரை செய்துகொள்ளவும்.

வெள்ளுள்ளித் தைலத்தில், அரை மாத்திரை கொள்ளக் கிருச்சிரவாதமும், தேனில் திரிகடியளவு திப்பிலிச் சூரணத்தில் 1 மாத்திரை வீதம் 16 நாள் கொள்ள,

1. பிரமியம் 18
2. கல்லடைப்பு
3. சதையடைப்பு 18
4. இந்திரக்கண்டி 5
5. அந்தரவாதம்
6. பித்தம் 128
7. சிலேட்டுமம் 96
8. உஷ்ணரோகம் 126 ம் தீரும்!

வெள்ளுள்ளித் தைலத்தில் 1 மாத்திரை கொள்ள, வயிற்று வியாதி 66ம், வாயுத்திரட்சி 36ம், பெருவயிறு, விஷப்பாகம், காமாலை, சிலேட்டுமம், பாண்டு தீரும்!

மேற்படி செந்தூரத்தில் ஒரு பணவெடையளவு திப்பிலி, மிளகு வெதுப்பிச் செய்த சூரணத்தில் தேனும் இஞ்சிச்சாறும் கலந்ததில் இரண்டு நேரம், இருபதுநாள் கொள்ள,

1. சன்னி 1
2. வாதம் 80
3. வாய்வு 26
4. சத்திக்குன்மம்
5. எரிகுன்மம்
6. காமாலை
7. பைத்தியம் 16
8. பவுத்திரம்
9. கரிவாய்வு
10. முகவாதம்
11. மண்டைச்சூலை
12. பீனிசம் 18
13. நாசிவலி
14. தலைவலி
15. பிடரிவலி
16. செவிநோய்

17. தொண்டைநோய்
18. எழுநோய்
19. முயல்கண்டன்
20. அண்டவாதம்
21. குடல்வாதம்
22. ஆனந்தவாய்வு
23. அந்திரவாய்வு
24. உள்வலிப்பு
24. புறவலிப்பு
26. குதிவாதம்
27. நடுக்குவாதம்

முதலியவை தீரும்!

பத்தியமாயிருக்கவும்.

## 243. செகை, நீர்க்கடுப்புக்கு

வெள்ளரிக்காயை முளை நீக்கியரிந்து, ஈர வெங்காயமு மரிந்து, மதுப்பானையிலிட்டுப், புது நெல்லுமிமேல் வைத்துச் சாப்பிட, எவ்வகைச் செகையுந் தீரும்!

## 244. செகைக்குட்டு

ஈரற்குலை வலி, கர்ப்பிணிக்கு அடிவயிற்றுச் செகைக்குட்டுக்கு நற்சீரகம், செம்மண் சீலை, ஈரவெங்காயம், நீலிவேர் இவைகளை விளக்கெண்ணை தடவி, மேற்படி எண்ணையில் மூன்றுதரம் புடம் வைத்தெடுத்தரைத்து, வெந்நீரிற் கொடுக்கத் தீரும்!

## 245. கர்ப்பரோகங்களுக்கு எண்ணை

விளக்கெண்ணை, குமட்டிக்காய்ச்சாறு, வேப்பம்பட்டைக் கசாயம், கழற்சியிலைச்சாறு, ஐவிரலிச்சாறு, பிரமிச்சாறு, முடக்கொற்றான் சாறு, உள்ளுலத்திச்சாறு, காட்டுள்ளிச்சாறு - வகைக்குப் படி 2, கொடுவேலிவேர், ஆடுதின்னாப்பாளைவேர், கிழுவம் பட்டை, நிலஆவாரைவேர், குறுந்தொட்டிவேர், சங்கம்வேர், மூங்கிலிலை, கஸ்தூரிப்பட்டை, வெள்ளருகு, தலைச்சுருளிவேர்,

வெள்ளைக் காவளைவேர், கற்றாழைவேர், வெள்ளைச் சாரணை வேர் வகைக்குப் பலம் 1 இவைகளைக் கொடிக்கள்ளிச் சாற்றி லரைத்துக், கடுகு, திப்பிலி, கடுக்காய், வால்மிளகு குராசாணி யோமம், கடுகுரோகணி, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், அரத்தை சுக்கு, மிளகு, சிறுநாகப்பூ, இந்துப்பு, ஆனைத்திப்பிலி. பெருங் காயம், சாதிக்காய், தாளிசைப்பத்திரி. சேங்கொட்டை, இரச கற்பூரம், இஞ்சி, நவச்சாரம், வகைக்குக் கழஞ்சு 4, காட்டா மணக்குச் சாறும், வெள்ளாட்டு நீரும் கலந்து, அதில் அரைத்து, மேற்படி எண்ணையில் கலக்கிக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடித்து, ஆகாசத்தூள், வெண்காரம் வகைக்குக் கழஞ்சு 2 போட்டு வீட்டுக்கு விலக்கமான மூன்று நாளுக்கு ஒருகரண்டி வீதங் கொடுத்து, வெள்ளாட்டுப் பாலில், கஞ்சி வைத்துக் கொடுக்கவும்.

பாலில்லாவிட்டால், வெந்நீரிற் கொள்ளவும்.

நாலாம் நாள், தலைமுழுகி, மறுமூன்று நாளும் ஆரையிலை, குழுவையிலை, ஐவிரலிலை மூன்று மரைத்துப் பசுவின் வெண்ணை யிலாவது, பாலிலாவது கொள்ளவும்.

ஆறாம் நாள், தலைமுழுகி, மேற்சொன்ன எண்ணையில் நவச்சாரமும் நீர்முள்ளிச் சாரமுங் கலந்துகொள்ள,

1. மகோதரம்
2. நீராம்பம்
3. பெருவயிறு
4. சூலை
5. குன்மம்
6. பித்தம்
7. உள்மாந்தை
8. பாண்டு
9. சோகை
10. கரப்பான்
11. வாதச்சூலை
12. இந்திரக்கண்டி
13. மலக்கட்டு

14. இரைச்சல்
15. கிருமி

முதலிய வியாதிகள் தீரும்!

## 246. கிளிமூக்கெண்ணை

நல்லெண்ணை படி 1
ஈரவெங்காயம் படி 3
கருஞ்சீரகம் பலம் 3
பச்சைக்கொட்டை எண்ணை படி 1
ஏலம்
சாதிக்காய்
கிராம்பு
சீனிச்சர்க்கரை
சீனாகற்கண்டு
கல்நார்
கசகசா

வகைக்குப் பலம் 1

இளநீர் படி 1

கம்பு இடித்துப் போட்டு, அந்தத் தண்ணீரில் எண்ணையூற்றி வடிக்கவும்.

## 247. உத்திரவாய்வுக்கு எண்ணை

சதுரக்கள்ளிச்சாறு
ஈரவெங்காயச்சாறு
கொடிவேலிச்சாறு
முள்ளிக்காய்ச்சாறு
கொங்கவெற்றிலைச்சாறு
தேங்காய்ப்பால்

வகைக்குப் படி 1

துத்தம்
துருசு
கடுக்காய்
சுந்தகம்
வகைக்கு வராகனெடை 1

அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடிக்கவும்.

## 248. அண்டவாய்வுக்கு

கழற்சியிலைச்சாறும் நல்லெண்ணையும் சரிகூட்டி, யுள்ளுக்குக் கொடுத்து, மேற்படி சக்கையை வேதுபிடித்துக் கட்டவும்.

## 249. முகச்சன்னிக்கு

கருநொச்சி
வெள்ளைநொச்சி
சித்திரமூலம்
வேலிப்பருத்தி
மாவிலங்கப்பட்டை
எருக்கலாம்பூ
சதுரக்கள்ளிப்பட்டை
கொடிக்கள்ளிப்பட்டை
குன்னிப்பட்டை
எட்டிப்பட்டை
கறுப்பூமத்தை

இவைகளை யிடித்து, மிடாவில் போட்டுப் பதக்கு நீர்விட்டு, எட்டிலொன்றாய்க் காய்ச்சி, யிறுத்து, அதில் சிறுதேக்கு, கல்நார், கோஷ்டம், வாய்விளங்கம், அக்கிரகாரம், சதகுப்பை, ஓமம், கடுகு ரோகணி, திப்பிலி, சுக்கு, வால்மிளகு வகைக்கு வராகனெடை 1 இவைகளைச் சூரணித்துப் போட்டு, வேப்பெண்ணை படி 1 சேர்த்துக் காய்ச்சி, மெழுகுப் பதத்தி லிறக்கிக் கொள்ளவும்.

## 250. சோபை வீக்கத்திற்கு

வெள்ளாட்டுப்பால்
வேலிப்பருத்திச்சாறு
கோவைத்தண்டுச்சாறு

வகைக்கு படி 1/8 சேர்த்து, மிளகுச்சூரணம் போட்டு, உட்கொள்ள வயிறு கழியும்!

புழுங்கலரிசிச் சோற்றில் பால் விட்டுச் சாப்பிடவும்.
இந்தப்படி 3 நாள் கொள்ளவும்.
தாகமெடுத்தால் வெந்நீர் கொள்ளவும்.
பத்தியம்.

## 251. சுரத்தின்பேரில் கண்ட சோபைக்கு

கற்றாழைவேர் வாட்டிப்பிழிந்த சாறு படி 1/8, மிளகு 17 அரைத்துக் கலக்கி 8 நாள் கொள்ளவும்.

புளி, புகையிலை நீக்கவும்.

இதற்கு அஞ்சனம்-கொட்டை முத்துப் பருப்பை முலைப்பாலி லரைத்துக் கண்ணில் போடத் தீரும்!

## 252. எல்லாச் சோபைச் சுரத்திற்கு

வெள்ளைச்சாரணைவேர்
இலந்தைவேர்
சிறுசெருப்படை வேர்
கையாந்தகரை வேர்
நில உகான் வேர்
சித்திரமூலம்

வகைக்கு வராகனெடை 3

இவைகளை நீர்விட்டு, எட்டிலொன்றாய் இறுத்துக் கொடுக்கவும்.

கடுக்காயும் சுக்கும் சேர்த்துக் கோசலத்தில் கசாயம் வைத்துக் கொடுக்கவும்.

வெள்ளைச் சாரணை வேரை, ஆட்டு மூத்திரத்தில் கசாய மிட்டுக் கொடுக்கவும், சோபை தீரும்!

## 253. சீழ்ப்பிரமிய வகைக்கு

வெதுப்பிப் பிழிந்த தழைவிழுதுச் சாறு படி 1, பசுவின் நெய் படி ½, நல்ல வெல்லம் பலம் 1, சீரகம் காசெடை 1, பற்படாகம் அரைத்து, முள்ளிக்காயளவு இவைகளைக் கலந்து சாப்பிடச் சீய்ப்பிரமியம், இரத்தப் பிரமியம், நீர்க்கட்டு, நீர்க் கடுப்பு, நீர்த்தாரையிலுள்ள சீழெல்லாந் தள்ளிவிடும்.

பத்தியம் - பசுவினெய் கூட்டி, 2 நேரமுந் தண்ணீரிற் குளிக்கவும்.

இந்தப் பிரகாரம் 5 நாள் கொள்ளவும்.

## 254. பித்தக்கிறுகிறுப்பிற்கு

முசுமுசுக்கை யிலைச்சாறு, பசுவின் பால், பசுவின் நெய் வகைக்குப் படி 2, இலுப்பைப் பூ, முந்திரிப்பழம், கூகைநீர், அதிமதுரம் வகைக்குப் பலம் 1, சந்தனம், கற்பூரம் வகைக்குக் கழஞ்சு 1 இவைகளை யரைத்துப் போட்டுக் காய்ச்சி, வடித்துச் சீனிச் சர்க்கரை பலம் 1 சேர்த்து, நாள் 1க்கு 2 கழஞ்சு வீதம் நெய் கொள்ளச் சகலவிதமான பித்த மயக்கமும், தலைக் கிறு கிறுப்பும் தீரும்!

## 255. அசுவகந்தித் தைலம்

அமுக்கலாஞ்சாறு
கருஞ்சுருட்டிச்சாறு (?)
வகைக்குப்படி 1
விஷ்ணுகரந்தைச்சாறு
சங்கங்குப்பிச்சாறு
வகைக்குப்படி 1
புண்ணாக்குப் பூட்டுச்சாறு
மிளகாய்தழைச்சாறு
சிவகரந்தைச்சாறு
வில்வயிலைச்சாறு
வகைக்குப்படி ½

பிரப்பங்கிழங்கு
அதிமதுரம்
சிறுநாகப்பூ
ஏலம்
வாய்விளங்கம்
தாளிசப்பத்திரி
பரங்கிப்பட்டை

வகைக்கு 2 ரூபாயெடை

கோஷ்டம்
சாதிப்பத்திரி
கிராம்பு

வகைக்கு 1 ரூபாயெடை

இவைகளைச் சூரணித்து, நல்லெண்ணை படி 1 சேர்த்துக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் மேற்படி சூரணத்தைப் போட்டு, யிறக்கி யாற விட்டு, வடித்துக் கொள்ளவும்.

இருபத்தினான்கு நாள் கொள்ள,

1. வாதக்கரப்பான்
2. பித்தக்கரப்பான்
3. விஷக்கரப்பான்

முதலியவை தீரும்!

இச்சாபத்தியம்.

## 256. வாயுவுக்கு

சீனிக்காரம் பலம் 1
வெடியுப்பு பலம் 4
இந்துப்பு பலம் ½
புளி பலம் ⅛

இவைகளை நன்றாயரைத்துப் புதுக்கலசத்தில் போட்டு, நன்றாய்க் காயவைத்து, மேலோடு மூடிச், சீலைமண் செய்து புடமிட, நல்ல வெண்மையான பற்பமாகும்!

தேன், பசுவினெய் இவற்றிற் கொடுக்கவும்.

## 257. இலிங்கக்கட்டு

சாதிலிங்கக் கட்டிக்குத் தனக்காஞ் சாற்றில் சுருக்கிடக் கட்டும்!

## 258. வெள்ளைப் பாஷாணக்கட்டு

வெள்ளைப் பாஷாணக் கட்டுக்குக் குட்டிவிளாச்சமூலம் குழித்தைலமிறக்கிச் சுருக்குக் கொடுக்க, இறுகிக்கட்டும்!

## 259. அறுகம்வேர்த் தைலம்

அறுகம்வேர் பலம் 10, 8 படி தண்ணீரிலிட்டு, எட்டொன்றாய்க் காய்ச்சியது படி 1, நல்லெண்ணை படி 1, வெட்டிவேர், கார்க் கோலரிசி, கோஷ்டம் - வகைக்குக் கழஞ்சு 1 இவைகளை யரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, முழுகிவர,

1. மண்டையிடி
2. தலைப்பித்தம்
3. மஞ்சள்போல் நீரிறக்கிற உஷ்ணங்கள்
4. நேத்திரவாய்வு
5. பித்தம்

முதலியவை தீரும்!

பத்தியம் - புளி, புகை நீக்கவும்.

## 260. வாய்வுகளுக்குச் சூரணம்

சங்கம்வேர்
முக்கொமுஞ்சி
பரங்கிப்பட்டை
கொடிவேலி
சுக்கு
வாய்விளங்கம்
சிறுதேக்கு
கொத்தமல்லி

வகைக்கு வராகனெடை 2

இவைகளை யிடித்து, மூன்றாய், காசெடை விட்டு ஆறு நேரம் கொடுக்கவும்.

புளி, புகை நீக்கவும்.

## 261. அமுதச் சர்க்கரை எண்ணை

மேல்தோல் போக்கிய சீந்திக்கொடி பலம் 40
நெல்லிவற்றல் பலம் 20
வில்வவேர்
நன்னாரிவேர்
முத்தக்காசு
வகைக்குப் பலம் 2

இவைகளை யிடித்து, 8 வள்ள நீர் விட்டு, எட்டிலொன்றாய்க் காய்ச்சி, வடித்த கசாயம் வள்ளம் 1, நல்லெண்ணை வள்ளம் 1, பசுவின் பால், வெள்ளாட்டுப் பால், இளநீர் வகைக்கு வள்ளம் 1, அரக்குக் கசாயம் படி 2 - இவைகளைச் சேர்த்துச்,

சந்தனம்
அதிமதுரம்
பேரீச்சம்பழம்
முந்திரிப்பழம்
வெட்டிவேர்
விலாமிச்சம்வேர்
கஸ்தூரிமஞ்சள்
மரமஞ்சள்
நல்லமஞ்சள்
கோரைக்கிழங்கு
ஏலம்
லவங்கப்பட்டை
லவங்கப்பத்திரி
கடுக்காய்
தானிக்காய்
நெல்லிப்பருப்பு
சுக்கு
மிளகு
திப்பிலி

சமுத்திரா
கோரைக்கிழங்கு
கடுகுரோகணி

வகைக்கு வராகனெடை 4

இவைகளைப் பால்விட்டரைத்துச் சேர்த்து, அடுப்பில் வைத்து, ஏழுநாள் அக்கினிப்புடத்தில் வைத்து, எட்டாம் நாள் காடாக்கினியாயெரித்து, மெழுகுப்பதத்தில் வடித்துக்,

குங்குமப்பூ
கோரோசனை
பச்சைக்கற்பூரம்
கஸ்தூரி
கோரோசனைக்கிழங்கு

வகைக்கு வராகனெடை 1

பொடித்துப் போட்டு, ஏழு நாள் தானியப் புடத்தில் வைத்து எடுத்துக்கொண்டு, வாரத்திற்கிரண்டு முறை தலைமுழுகிவர,

1. பித்தவெட்டை
2. உஷ்ணரோகம்
3. வறட்சி
4. எலும்புருக்கி
5. உள்ளுருகி
6. அதிசாரம்
7. ஆரோசியம்
8. அக்கினிமந்தம்

முதலிய வியாதிகள் தீரும்!

## 262. அமுத லேகியம்

சீனிச்சர்க்கரை படி 1
வெட்டிவேர்
லவங்கப்பத்திரி
கோஷ்டம்

நெல்லிவற்றல்
முள்ளிவேர்
நிலப்பனைக் கிழங்கு
ஏலம்
ரேணுகம்
முந்திரிப்பழம்
தக்கோலம்
குங்குமப்பூ
பரங்கிப்பட்டை
நாகப்பூ
தாமரை வளையம்
தாமரைக்கிழங்கு
பச்சைக்கற்பூரம்
சந்தனம்
சாதிக்காய்
இரத்தச் சந்தனம்
சுக்கு
திப்பிலி
மிளகு
அதிமதுரம்
நெற்பொரி
அமுக்கலாங்கிழங்கு
தண்ணீர்விட்டான் கிழங்கு
நெருஞ்சிவேர்
கற்கடகச் சிங்கி

வகைக்கு வராகனெடை 1

இவைகளைப் பொடித்து, இதற்கிரட்டி சீனிச்சர்க்கரை கலந்து கொண்டு, வெருகடியளவு பசுவினெய்யிற் கொள்ள,

1. யோனி பூஷணம்
2. மேகம் 20

3. பித்தவெட்டை
4. சேகை
5. உடல்வெக்கை

முதலிய வியாதிகள் தீரும்!

**கை கண்டது.**

## 263. மகாவிபூதிகாரத் தைலம்

எருக்கிலைச் சமூலம் இடித்துப் பிழிந்த சாறு படி 1, கள்ளிப் பால் படி $\frac{1}{2}$, வாத மடக்கிச்சாறு, வெள்ளாட்டுப்பால், நொச்சி யிலைச்சாறு, காட்டுமுருங்கைப் பட்டைச்சாறு

வகைக்குப் படி 1,

நல்லெண்ணை
வேப்பெண்ணை
விளக்கெண்ணை
இலுப்பையெண்ணை
புங்கெண்ணை

வகைக்குப் படி $\frac{1}{2}$

இவைகளைக் கலந்து,

அதிமதுரம்
கோட்டம்
சதகுப்பை
தேவதாரம்
அசமதாகம்
மரமஞ்சள்
கஸ்தூரிமஞ்சள்
வெள்ளிச்சப்பிசின்
வலம்புரிக்காய்
திப்பிலி மூலம்
கொடிவேலிவேர்

வகைக்குப் பலம் $\frac{1}{2}$

பெருங்காயம்
இரசம்
கந்தகம்
வெள்ளைப் பாஷாணம்
கௌரிப் பாஷாணம்
அரிதாரம்
மனோசிலை
நாபி
நீருவிஷம்
வகைக்குப் பணவெடை 5
வாய்விளங்கம் பலம் ½

இவைகளை யரைத்து, முந்தின சாறுகளில் கரைத்து, வேகவைத்து எண்ணையுடன் கூட்டிக் காய்ச்சி, மெழுகுப் பதத்திலிறக்கி வடித்து மேலுக்கு நாற்பது நாள் பூசிச் சாயந்தரம் வெந்நீர் வார்த்துக் கொள்ள,

1. சன்னிவாதம்
2. திமிர்வாதம்
3. முகவாதம்
4. குத்துவாதம்
5. தோல் சன்னிவாதம்
6. சருவாங்கவாதம்
7. பக்கவாதம்
8. எரிவாதம்
9. நடுக்குவாதம்
10. அரைக் கீழ்வாதம்
11. துடிவாதம்
12. முலைவாதம்
13. வீச்சுவாதம்
14. தனுவாதம்

முதலிய சகலவாத ரோகங்களும் தீரும்!

கை கண்டது.

### 264. அக்கினிகுமாரன்

எருக்கங்கொழுந்து
எருக்கம்பூ
வகைக்குப் பிடி 1
திரிகடுகு வராகனெடை 6

இவைகளை யரைத்து, உளுந்துப்பிரமாணம் மாத்திரை செய்து, மாத்திரை 1 அல்லது 2 கையாந்தகரைச்சாறும், தேனும் கலந்ததில்-வாதச்சுரமும்,

முசுமுசுக்கைச்சாறும், முலைப்பாலும் கலந்ததில் பித்தச்சுரமும்,

இரண்டஞ்சாறும், தேனும், திப்பிலிப்பொடியும் கலந்ததில் சிலேத்துமச்சுரமும், தீரும்!

நாடியதிகரித்திருந்தால், ஆடாதோடை, துளசி, எருக்கங் கொழுந்து இவைகளை யிட்டுக்கட்டி, வேகவைத்துப் பிழிந்த ரசமும், பசுவின்பால் கலந்ததில் கொடுக்கத் தீரும் !

### 265. மணிமந்திரச் சூரணம்

இந்துப்பு வராகனெடை 1
சீரகம் வராகனெடை 2
ஓமம் வராகனெடை 3
திப்பிலி வராகனெடை 4
சுக்கு வராகனெடை 5
கடுக்காய்ச்சூரணம் வராகனெடை 5

இவைகளைச் சூரணித்து, வெருகடிப் பிரமாணம் இரண்டு கவளை வெந்நீரிற் கொள்ள, விரோசனமாகும்; பசி தீபனமுண்டாகும்; கிராணி தீரும்! நாள்பட்ட மலக்கட்டு, சூலை தள்ளும்! அக்கினி மாந்தத்திற்கு, மண்டலங் கொள்ளவும். உண்ட அசனம் சீரணம் ஆகாதது தீரும்! மந்த வாய்வு தீரும்!

## 266. மூலக்கிராணிக்கு

கொம்பரக்கு
சாதிக்காய்
அபினி
குராசாணியோமம்

இவைகளைச் சூரணித்து, நல்லெண்வணயிற் பிசைந்து கொடுக்க,

1. கிராணிமூலம்
2. குத்துகிறமூலம்
3. சூடு
4. கடுப்பு

தீரும்!

## 267. மேகரோகங்களுக்கு

ஒருபடி புங்கம் பூவை, இரண்டுபடி பசுவினெய்யில். சிறுகச் சிறுகவிட்டு, வறுத்தெடுத்து, நாள் 1க்கு வெருகடியளவு, அந்தி சந்தி, கொள்ள,

1. மேகவெடிப்பு
2. மேகப்புண்
3. மேகச்சூலை
4. மேகவெட்டை

முதலிய மேகரோகங்கள் தீரும்!

வெள்ளாட்டு வற்றல் அதிகங் கூட்டிப், புளி, புகையிலை நீக்கவும்

## 268. பிரமியம் வகைக்கு

பழம்பாசியை நீரில் வேக வைத்துப் பிழிந்து, இறுத்து, அதில் நற்சீரகம், வெள்ளைப்பூண்டு வகைக்குப் பலம் 1 அரைத்துப் போட்டு, மேற்படி சாற்றளவு நல்லெண்ணையும், சீனிச்சர்க்கரை பலம் ½ சேர்த்து, மூன்று நாள் கொள்ள, முற்றிய வெள்ளைப் பிரமியம், மேகவெட்டை முதலியவை தீரும்!

## 269. வெள்வங்கப் பற்பம்

வெள்வங்கம், நாகம் வகைக்கு வராகனெடை 2 இவற்றைக் கூட்டி, உருக்கு முகத்தில் இரசம் வராகனெடை 2 கொடுக்க வெட்டையாகும்.

அதை உமிழ்நீர்விட்டு, ஒரு சாமமரைத்து, வில்லை செய்து லர்த்தி, ஓட்டில்விட்டுச் சீலைமண் செய்துலர்த்திக் கசபுடமிடப் பற்பமாகும்!

பணவெடை பசுவின் நெய்யிற் கொள்ள,

1. வெட்டை
2. சூடு
3. பிரமியம்
4. நீர்க்கடுப்பு
5. இரத்தமூலம்

முதலியவை தீரும்!

புளி, புகையிலை நீக்கவும்.

## 270. நீர்க்கடுப்பிற்கு

அதிமதுரம்

கசகசா

சீரகம்

மாசிக்காய்

கூகைநீறு

இவைகளைச் சூரணித்து, எருமைத் தயிரிற் கொள்ளவும்.

இச்சாபத்தியம்.

## 271. உலோகச் செந்தூரம்

அரப்பொடி

சூதம்

வீரம்

நவச்சாரம்

வகைக்குப் பலம் 1

பூநீறு பலம் $\frac{1}{2}$

இவைகளை மூன்றுநாள் நன்றாய்ச் சிவக்க மட்டும் அரைத்துப், புதுச்சட்டியிலாவது, இரும்புச் சட்டியிலாவது போட்டுப் பதமாய் வறுக்கச் செந்தூரமாகும்!

இதைக் கால் பணவெடை கருப்புக்கட்டியில் திரிகடுகு சூரணம் சேர்த்ததில் கொள்ள,

1. சோகை
2. பாண்டு
3. குன்மம்
4. வாதச்சூலை

முதலியவை தீரும்!

இச்சாபத்தியம்.

## 272. கந்தகப்பற்பம்

நெல்லிக்காய்

கந்தகம் பலம் 1

வெடியுப்பு பலம் $\frac{1}{8}$

சீனிக்காரம் பலம $\frac{5}{8}$

இவைகளை யுருக்கிக் கற்சுண்ண நீரிலரைத்து, வில்லைதட்டி யுலர்த்தி, ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து, பெரியமிடாவில் கீழு மேலும் எருவடுக்கிப் புடம்போட, நீறும்!

நெய், தேன், வெண்ணை இவைகளிலொன்றிற் கொடுக்கவும்.

## 273. வீரச்செந்தூரம்

வீரம்பலம் 1

அரப்பொடி பலம் $\frac{1}{2}$

கந்தகம் பலம் $\frac{1}{2}$

இவற்றைக் குமற்றிச் சாற்றிலரைத்து, வில்லை செய்துலர்த்திப், புதுச்சட்டியில் கற்றாழஞ்சோறு கீழும் மேலும் வைத்து, மேற்படி சட்டிமூடிச் சீலைமண் செய்து, ஐந்துசாமம் எரித்து, நன்றாய் ஆற விட்டு எடுத்துப் பனைவெல்லத்தில் பணவெடை செந்தூரம் கொடுக்கவும்.

1. குள்ளநரிப் பித்து,
2. நாய்ப்பித்து
3. அபினி
4. கறுப்பூமத்தன் விதை
5. கிராம்பு
6. தகரை விதை
7. கஞ்சா

இவையேழும் சாராயம்விட்டரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் குளிகை செய்து வைத்துக் கொள்ளவும்.

### 274. உளைமாந்தை வகைக்கு

கள்ளிப்பால்
இந்துப்பு
காந்தம்
சூதம்
கந்தகம்
உள்ளி
வசம்பு
சுக்கு
ஓமம்
திப்பிலி
கடுக்காய்
வெண்காரம்
நவச்சாரம்
வளையலுப்பு
கல்லுப்பு

இவைகளைச் சமனாகச் சேர்த்துத் தேங்காய்க்குள் போட்டு அடைத்து, மண்பொதிந்து மேலே சாணியப்பி வேகவைத்து

எடுத்து, வெல்லப்பாகு, சேர்த்தரைத்து வைத்துக்கொண்டு, கால் வராகனெடை வீதங் கொள்ள,

1. அகுவை
2. சூலை
3. கெண்டை
4. விஷப்பாகம்
5. அள்ளையிழுப்பு
6. விப்புருதி
7. குத்திருமல்
8. வீக்கம்

முதலியவை தீரும்!

## 275. சுகவிரேசனம்

இரசம் கழஞ்சு 1
கந்தகம் கழஞ்சு ½
சுத்தித்த நேர்வாளம் கழஞ்சு 1
சதுரக்கள்ளி விதை கழஞ்சு 2
வெண்காரம் கழஞ்சு 3
ஆமணக்கு முத்துப்பருப்பு கழஞ்சு 4
சேராங்கொட்டை கழஞ்சு 5
சிவதை கழஞ்சு 6
முருக்கான் விதை கழஞ்சு 6

இவைகளை, இலைக்கள்ளிச் சாற்றிலரைத்துத், தேங்காய்க் குள் வைத்துக் கசபுடம் போட்டெடுத்துக், கவசம் நீக்கி, மருந்தை யெடுத்துத் தொப்புளில் தடவப் பேதியாகும்! உள்ளங்காலில் தடவினாலும் பேதியாகும்! பூச்செண்டில் தடவி முகர்ந்தாலும் பேதியாம், குளிர்ந்த சலத்தில் கழுவினாலும் பேதிநிற்கும்!

பத்தியமில்லை.

## 276. குன்மம், வரந்தி, ஏப்பத்திற்கு

இந்துப்பு பலம் ⅛, கொடிகள்ளிப்பால் படி 1/16 இவைகளை முற்றிய தேங்காயில் நீர்போக்கிப் போட்டுக், கண்ணடைத்து,

மேலோடு கருகச்சுட்டு, ஓடு நீக்கி, மற்றவைகளை யரைத்து, லேகியம் போல் வைத்துக்கொண்டு, தூதுவளங்காயளவு கொடுக்கப் பேதியாகும்! வெந்நீர் கொள்ள அதிகமானால், மோருஞ் சோறுண்ணவும்.

பின்னும் அதிகமானால், துட்டெடை தேன் கொள்ளவும்; நோய் நீங்கும்!

## 277. க்ஷயம், இருமலுக்கு

கடுக்காய்ச் சூரம் நாள் 1க்கு 3 அல்லது 4 நேரம் ஒரு வராக னெடை வீதம் தேனிற் சாப்பிடவும்,

புளி நீக்கவும்.

## 278. மலசலக் கட்டுக்கு

வெண்காரம்

சவுக்காரம்

சீனிக்காரம்

இவைகளை வெதுப்பி, இளநீரிற் கொள்ள மலசலமிறங்கும்!

## 279. திரிதோஷத்திற்கு

கொடிவேலிவேர்

இந்துப்பு

திப்பிலி

கடுக்காய்

இவைகளைச் சூரணித்து, வெருகடியளவு தேனில் கொள்ள வாதமும், சீனியிற் கொள்ளப் பித்தமும், பாணியிற்கொள்ள உஷ்ணமும், வெந்நீரிற் கொள்ள பசியில்லாமையும் தீரும்!

## 280. விரைவாதத்திற்கு

மிளகு பலம் 1

இரசக்கற்பூரம் கழஞ்சு 1

சாதிலிங்கம் வராகனெடை ½

இவைகளைத் தேன்விட்டரைத்து, மெழுகாக்கித் தூதுவளங்காயளவு, அந்தி, சந்தி, ஐந்துநாள் கொள்ளவும்.

பத்தியம்.

### 281. கபாலவலிக்குத் தைலம்

பச்சைமஞ்சள் சாறு
ஆதொண்டைச்சாறு
நொச்சியிலைச்சாறு
விளக்கெண்ணை படி 1
அரத்தை
சதகுப்பை
வகைக்குப் பலம் 1

இவைகளைக் காய்ச்சி வடித்து, முழுகிவர, கபாலவலி, ஒருதலைவலி இவைகள் தீரும்!

### 282. வயிற்றுக் கடுப்பு, பெரும்பாடு வகைக்கு

தென்னம்பாளையை யிடித்துப் பிழிந்த சாறு, பசுவின் தயிர் வகைக்கு ஆழாக்கு 1, பழநீர் பலம் 1 இவைகளைக் கலந்து கொடுக்கச் சீதம், இரத்தம் விழுகிறது, பெரும்பாடு, நீர்ச்சுருக்கு முதலியவை தீரும்!

புளி நீக்கவும்.

### 283. மாதவிடாய் வராதவளுக்கு

வேலிப் பருத்திக் கொழுந்து 5 அல்லது 6, மிளகு 5 அல்லது 6 சேர்த்துக் கொள்ளவும்.

ஏழு நாள் இரண்டு வேளை கர்ப்பவாயு நீங்கி, மாதவிடாய் வரும்!

உப்பு, புளி, புகை நிக்கவும்.

வெந்நீரும், சாதமும் உண்ணவும்.

### 284. மேக உஷ்ணத்திற்கு

பொன்னாங்கண்ணி

வால்மிளகு

நற்சீரகம்

ஈருள்ளி

ஒருகொட்டைப் பூண்டு

இவைகளைப் பசுவின் மோரிலரைத்து, வில்வக்கொழுந்து, புளி, தண்ணீர்விட்டரைத்துப் பிழிந்த ரசம் படி 1/2 இதில் கரைத்து 3 நாள் சாப்பிடவும்.

இரசப் பத்தியம்.

### 285. சூட்டுக்கு எண்ணை

ஆதிப்பட்டை

நஞ்சுண்டாம்பட்டை

கொடிவேலி வேர்ப்பட்டை

சரிகூட்டி யரைத்து, நல்லெண்ணைபடி ஒன்றில் கலக்கி, ஆவாரை விறகாலெரித்துச் சாணிப்பதமாகும் போது, நல்ல வெல்லம் அச்சு 2 பொடித்துப் போட்டுக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் கிராம்பு, ஏலம் வகைக்குக் காசெடை 2, சாதிக்காய் ஒன்று, சீனிச்சர்க்கரை பலம் 2 இவைகளைப் பொடித்துப் போட்டுத்தூவிக் கிளறி, யிறக்கி, யாறவைத்து, ஒரு கரண்டி யெண்ணையும் அதனுடைய கல்கமும் இரண்டு வேளை சாப்பிடத் தீரும்!

பத்தியமாயிருக்கவும்.

பசுவின் தயிர், நெய், நெற்சோறு, காட்டுக் கலப்பஞ்சோறு, துவரை, பாசிப்பயறு, பிஞ்சுக்கத்தரிக்காய் சேர்க்கலாம்.

புளி, புகை கூடாது, அவபத்தியம்.

எல்லாவிதச் சூடுகளும் தீரும்!

ஒரு மகான் வாக்கியம்.

## 286. பிரமியம் எல்லாவற்றிற்கும்

பருத்திப்பிஞ்சு படி 2, ஈரவெங்காயம் படி 2 - இவைகளை யரைத்து, வறுத்துப், பசுவின் பால்விட்டுப் பிசைந்து, புதுச்சட்டியிற் பிழிந்து, மேற்சட்டி மூடிப் பனியில் வைத்து, உதயாதி முன்னமைக்கே கொள்ளவும்.

7 நாளில்,

1. சலப்பிரமியம்
2. இரத்தப்பிரமியம்
3. சுசிலப் பிரமியம்
4. உள்ளுருக்கி
5. உடம்புருக்கி
6. உள்காய்ச்சல்
7. வறட்சி
8. உஷ்ணம்

முதலியவை தீரும்!

கைகண்டது.

## 287. வெள்ளைக்கு

ஆத்திக்கொழுந்து
நற்சீரகம்
சீனிச்சர்க்கரை
பச்சைவாழைப்பழம்

இவைகளைச் சேர்த்தரைத்துச் சாப்பிடவும்.

இச்சாபத்தியம்

## 288. சூட்டுமேல் வயிற்றோட்டத்திற்கு

ஆழாக்குப் பசுவின் பாலில் கோவைச்சாறு பிழிந்து குடிக்கவும் உடனே நிற்கும்!

## 289. கண்ணில் ஆணிப்பூ வகைக்கு

தலைமயிர் சுட்டது, துத்தம் சரிகூட்டிச், சங்கிலை, புளியிலை இவைகளைப் பசுவின் பால் வார்த்து அரைத்து, வெண்ணையிற் குழப்பிக், கண்ணிலிட,

1. ஆணிப்பூ
2. நீர்முட்டு
3. தினவு

தீரும்!

## 290. வயிற்றுக்கடுப்பிற்கு

1. கூகைநீறு, எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணை இவைகளைக் குழப்பிக் கொடுக்கவும்.

2. பருத்திப் பிஞ்சை யரைத்து, எருமைத்தயிரிற் கொள்ளச், சீதக்கடுப்பு தீரும்!

3. எலுமிச்சம்பழச் சாற்றில் அரைப்படி பாலைப் பீச்சி, ஆவி அடங்குமுன் கொள்ள, இரத்தக்கடுப்பு தீரும்!

4. ஓமத்தை எருமைத்தயிரிலூறவைத்துச் சாப்பிடச், சீதரத்தக் கடுப்பு தீரும்!

5. வாழைப்பிஞ்சை மேற்தோல் சீவி அரைத்து, எருமைத் தயிரிற் கொள்ளத் தீரும்!

## 291. பெரும்பாட்டுக்கு

அத்திப்பட்டையைத் துவைத்துத், தண்ணீர்விட்டுப் பிசைந்து, பிழிந்து, வடிகட்டிய நீர் படி 2 ஒரு கொதியிட்டு, நல்லெண்ணை படி 1 சேர்த்துப் பனைவெல்லம் ஒருவட்டுப் போட்டு, கம்பி போலக் காய்ச்சி, குறுவை நெல்லரிசி மாப்போட்டுக், களி கிளறிச் சாப்பிடவும், தீரும்!

## 292. எருக்கரன் வேர்ச் சூரணம்

உலர்ந்த எருக்கம்வேர்ப் பட்டை மேற்புறணி, பால் நீக்கிச் சூரணித்துக் கொண்டு, கிரந்தி மேகத்தால் தோல்மேல் வரும்

வியாதிகளாகிய சொறி, சிரங்கு, வெண்குட்டம் முதலியவைகளுக்கு வலிய ஆளுக்கு 2 குன்றி முதல் 8 குன்றியெடை வரைக்கும் 2 மாதக் குழந்தைக்கு 1/15 ம், 7 மாதக் குழந்தைக்கு 1/12 ம், 14 மாதக் குழந்தைக்கு $\frac{1}{8}$ ம், 20 மாதக் குழந்தைக்கு $\frac{1}{6}$ ம், 3 வருடத்திய பையனுக்கு $\frac{1}{4}$ இப்பிரகாரம் வயது அறிந்து கொடுக்கவும்.

## 293. சீதத்தால் தொண்டை கமரலுக்கு

திருநீற்றுப் பத்திரி விதையை நீரிலூறவைத்து, அதிலுண்டாகும் கோழையைக் கொள்ளத் தீரும்!

## 294. சூதக வலிக்கு

வெள்ளைச்சாரணைவேர்
வெள்வெங்காயம்
சுக்கு
மிளகு

இவைகளை யரைத்து, வெந்நீரிற் கொடுக்கவும்.

## 295. விரோசனக் குளிகை

சாதிலிங்கம் வராகனெடை 1
இரசக்கற்பூரம் வராகனெடை 1
கிராம்பு வராகனெடை 4
நேர்வாளம் வராகனெடை 4

இவைகளைச் சங்கங்குப்பியிலைச்சாறு விட்டரைத்துத், தூதுவிளங்காயளவு மாத்திரை செய்து கொண்டு, அனுபானங்களில் கொடுக்கவும்.

## 296. சன்னிக்குக்குளிகை

வெள்ளைப்பாஷாணம், இரசம்,
அபினி
துத்தம்

கிராம்பு

வகைக்கு வராகனெடை 1

வெண்காரம் வராகனெடை $\frac{1}{8}$

இவைகளை இரும்புச் சட்டியிலிட்டு, இரும்புக் கிண்ணங்கொண்டு நான்கு சாமமரைத்துப் பயறுப்பிரமாணம் மாத்திரை செய்து கொண்டு, பச்சைத் தண்ணீரில் கொடுக்க,

1. பித்தச்சன்னி
2. வாதச்சன்னி
3. திருகுச்சன்னி

முதலிய சன்னிகளுக்கெல்லாம் கொடுக்கத் திரும்!

பத்தியமாயிருக்கவும்.

### 297. ஈளை, காசம், கோழை விப்புருதிக்கு எண்ணை

வெள்வெங்காயம்

மிளகு

சீரகம்

கடுக்காய்

திப்பிலி

சுக்கு

ஓமம்

இந்துப்பு

கடுகுரோகணி

கருஞ்சீரகம்

வகைக்கு வராகனெடை 3

தூதுவிளம்பழம் படி 1

நல்லெண்ணை படி 3

வேப்பஞ்சாறு ஆழாக்கு 1

இவைகூட்டிக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடித்து, 1 கரண்டியளவு 1 மண்டலங்கொள்ள, இருமல் முதலியவை தீரும்!

பத்தியம்.

## 298. பெரும்பாட்டுக்கு

ஈரவெங்காயம் படி 1 சிறுக அரிந்து, பசுவினெய்யில் வறுத்துச் சர்க்கரை பலம் $\frac{1}{2}$, ஏலம் வராகனெடை 2 கலந்து 5 நாள் கொள்ளவும்.

## 299. விஷப்பாகத்திற்கு

வெள்ளாட்டுப்பால் படி $\frac{1}{2}$, வேலிப்பருத்திச்சாறு படி $\frac{1}{8}$, கோவைத் தண்டுச்சாறு படி 1, மிளகு வராகனெடை 2, இவைகளைக் கலந்து சாப்பிடவும்.

## 300. சூட்டுக்கு

பொன்னாங்கண்ணி, வால் மிளகு, நற்சீரகம், ஈருள்ளி, ஒருகொட்டைப் பூடு இவைகளைப் பசுவின் மோர்விட்டரைத்து நீராகாரம் விட்டடித்துப் பிழிந்த வில்வயிலை ரசம் படி $\frac{1}{2}$, இதில் கலக்கி வடிகட்டி 4 அல்லது 5 வேளை சாப்பிடத் தீரும்!

இச்சாபத்தியம்.

## 301. மாந்தக்குளிகை

பெருங்காயம்
வசம்பு
ஓமம்
சுக்கு
திப்பிலி
மிளகு
ஒருகொட்டைப் பூண்டு
மலைதாங்கிவேர்
வகைக்கு வராகனெடை 3
முசுமுசுக்கை
முடக்கொற்றான்
பொரும்பி

வேலிப்பருத்தி
தும்பை
கொழிஞ்சி
காட்டவரை
துளசி
இவைகளினிலை
ஆவாரங்கொழுந்து

இவைகளைச் சிறுநீர்விட்டுத் துவைத்துப் பிழிந்த சத்தில், மேற்படி கடைச்சரக்குகளை யரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து, ஆண்குழந்தைக்குப் பெண்குழந்தைச் சிறுநீரிலும், பெண்குழந்தைக்கு ஆண்குழந்தைச் சிறுநீரிலும் கொடுக்கவும்.

### 302. காதுச்சீ வடிதலுக்கு

வாகை விதையும், பூவும், நல்லெண்ணையில் காய்ச்சிச் செவியில் விடச் சீழ் மாறும்!

### 303. சித்திரமூல எண்ணை

கொடிவேலிவேர் பலம் 4 - இதை 4 வள்ள நீரிலிடித்துப் போட்டு, ஒரு வள்ளமாகக் காய்ச்சி, இரும்புச் சட்டியில் வடித்து,

மிளகு
திப்பிலி
கடுக்காய்
நெல்லிவற்றல்
தான்றிக்காய்
முத்தக்காசு
விளாவரிசி
திப்பிலிமூலம்
நெருஞ்சிச்சமூலம்
கொத்துமல்லி
வசம்பு

சிறுதேக்கு
நன்னாரிவேர்
ஓமம்
சீரகம்
பெருங்காயம்
இந்துப்பு
கடுகுரோகணி
அத்திப்பட்டை

வகைக்கு வராகனெடை 10

இவைகளைச் சூரணித்து, மேற்படி கசாயத்தில் போட்டுப், பசுவினெய் படி 1 சேர்த்துக் காய்ச்சி, வடித்து, ஒரு மாதத்துக்குப் பின், முள்ளிக்காயளவு அந்தி, சந்தி, புளி, புகை நீக்கிப் பால் சேர்த்துக்கொண்டு சாப்பிட,

1. உள்மூலம்
2. பாண்டு
3. ஈளை
4. இருமல்
5. மேலிழுப்பு
6. காசம்
7. வாதச்சூலை
8. சோபை
9. வீக்கம்
10. வயிற்றுப் பொருமல்

தீரும்!

1 மண்டலங் கொள்ள, நரை திரை மாறும்! விகிருதம் 320 வியாதியைத் தீர்க்கும்!

(விகிருதம்-விகிர்தம்-நோய்)

### 304. ஈச்சுவரி சூரணம்

ஆவாரம்பூ
ஆவாரம்பருப்பு

ஆவாரம் கொழுந்து
ஆவாரம் விதை
ஆவாரம் வேர்ப்பட்டை

இவைகளைத் தனித்தனி காயவைத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்தது வகைக்குப் பலம் 1,

வாய்விளங்கம்
மரமஞ்சள்
மான்கொம்பு
புள்ளிமான்கொம்பு

இவைகளின் சூரணம் வகைக்குப் பலம் $1\frac{1}{8}$.

இருவகைச் சூரணமும் கலந்து புதுக்கலத்தில் வைத்துக் கொண்டு, வெருகடியளவு பசுவின் மோரில் கலக்கிக் குடிக்கவும்.

உஷ்ணத்திலெழுந்த 320 வியாதியும் தீரும்!

1 மண்டலம்.

கைகண்டது.

## 305. ஆதொண்டைத் தைலம்

ஆதொண்டையிலை சாறு படி 2
கையாந்தகரை
நொச்சி
முருங்கையிலைச்சாறு
வகைக்குப்படி 1
எண்னை
பால்
வகைக்குப் படி 2

சேர்த்துக்,

கடல்நுரை
வசம்பு

இந்துப்பு
கடுகுரோகணி
ஓமம்
சதகுப்பை
சாம்பிராணி
அரக்கு
சந்தனக்கட்டை
கோரைக்கிழங்கு
செங்கத்தாரிப் பட்டை
சுக்கு
திப்பிலிமூலம்
விலாமிச்சம் வேர்
அரத்தை
கன்மதம்
கல்நார்
பரங்கிப்பட்டை
அதிமதுரம்
கடலிராஞ்சிப்பட்டை
முருங்கைப்பட்டை
செவியம்
வாய்விளங்கம்
பூவரசம்பட்டை
நீர்முள்ளிவேர்
செண்பகப்பூ
கடுக்காய்

வகைக்குக் கழஞ்சு 1

மஞ்சள்
மிளகு

வகைக்குப் பலம் $\frac{1}{2}$

இவைகளை யரைத்துக் கரைத்துக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடித்து முழுகிவர

1. பீனிசம்
2. மண்டைக் கரப்பான்
3. கபாலக் குட்டம்
4. கர்ணரோகம்
5. கர்ணரோகம்
6. மார்வாதம்
7. சூலைவாயு
8. மூலரோகம்
9. அற்புத வாய்வு
10. நேத்திர வாய்வு
11. சர்வாங்க வாதம்
12. நாசிரோகங்கள்
13. தலைவலி

முதலியவெல்லாம் தீரும்!

## 306. இலகு பூதிகாரத்தைலம்

**ஆ**யப்பட்டை பலம் 50. நீர் படி 16 விட்டுக் காய்ச்சிப் படி 4 பசுவின் பால் படி 8, நல்லெண்ணை படி 2 சேர்த்து,

அதிமதுரம்
கோட்டம்
வாய்விளங்கம்
செவியம்
சித்திரமூலம்
திப்பிலி
திப்பிலி மூலம்
சுக்கு
சிற்றாமுட்டி
பேராமுட்டி
லவங்கப்பட்டை
லவங்கப்பத்திரி

ஏலம்
சிறுநாகப்பூ
கிராம்பு
அரத்தை
பெருங்காயம்
மஞ்சள்
மரமஞ்சள்
கடுகுரோகணி
சீரகம்
கருஞ்சீரகம்
கடுகு
அதிவிடயம்
அகில்கட்டை
வசம்பு
வெட்பாலையரிசி
இந்துப்பு
சண்பகப்பூ
மஞ்சிட்டி

வகைக்குப் பலம் $\frac{1}{8}$

இவைகளை யரைத்துக், கரைத்துக், காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடிக்கும்போது, வடிக்கிற கலசத்தில் புனுகு வராகனெடை 2 போட்டு, வடித்து, 5 நாள் தானியப்புடத்தில் வைத்தெடுத்து முழுகிவர,

1. செவிரோகங்கள்
2. சீதரோகங்கள்
3. நாசிரோகங்கள்
4. மூலரோகங்கள்
5. குன்மரோகங்கள்
6. ஆறாத ரணங்கள்
7. பவுத்திர ரோகங்கள்
8. வாதரோகங்கள்

முதலியவை தீரும்!

## 307. சிறுபூதிகாத் தைலம்

எருக்கம்பருப்பு
பேய்க்கரும்பு
வெற்றிலை
நொச்சி
வேளை
புளியிலை
தழுதாழை
எலுமிச்சம்பழம்

இவைகளின் சாறு வகைக்குப் படி $\frac{1}{8}$, நல்லெண்ணை படி 1 சேர்த்துக்,

கடல் நுரை
வலம்புரிக்காய்
செவியம்
வாய்விளங்கம்
மஞ்சள்
கடுக்காய்
காட்டுச்சீரகம்
கருஞ்சீரகம்

வகைக்கு வராகனெடை 1
மிளகு பலம் 1
சாம்பிராணி பலம் $\frac{1}{8}$

இவைகளை யரைத்துக், கரைத்துக், காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடித்து, முழுகிக் காதில் நசியமிட,

1, கபாலச்சூலை
2. தலைவலி
3. கர்ணரோகம்
4. செவியம்
5. நேத்திர வாயு

6. பீனிசரோகம்
7. நாசிகப் பீடம்
8. முகச்சன்னி
9. முகவாதம்
10. கண்டத்தில் வீக்கம்
11. வலி
12. தந்தவாயு

முதலியவை தீரும்!

## 308. பூதிகாத்தைலம்

ஆயில்பட்டை பலம் 106
சேவகன் கிழங்கு பலம் 106

ஒரு கல நீர்விட்டு, நாலிலொன்றாய்க் காய்ச்சி, யிறுத்ததில், நல்லெண்ணை படி 4, பால் படி 8 சேர்த்து,

அரத்தை
சாணி
தேவதாரம்
அகில்
மரமஞ்சள்
நறும்பிசின்
தகரம்
விளவரிசி
சடாமஞ்சி
வசம்பு
கோஷ்டம்
அடவிக் கச்சோலம்
குந்திரிக்கம் பிசின்
செவியம்
சாதிக்காய்
சிறுமூலம்

சீரகம்
கருஞ்சீரகம்
சிறுநாகப்பூ
கடுகுரோகணி
விலாமிச்சம் வேர்
புனுகுச்சட்டம்
அமுக்குராவேர்
சாரணைவேர்
வகைக்குக் கழஞ்சு 4

மேற்படி கசாயமிட் டரைத்துக் கலக்கிக், காய்ச்சி, மெழுகுப்பதத்தில் வடித்து, முக நசியமிடத், தலையில் கட்ட,

1. வாதப்பித்தங்கள்
2. கர்ண வாதம்
3. கபோல வாதம்
4. அற்புத வாதம்
5. மூக்கு நீர்பீச்சல்

தீரும்!

(சாணி - சாணாகப்பூடு)

## 309. கபால ரோகங்களுக்கு எண்ணை

சுக்கு
மிளகு
மஞ்சள்
மரமஞ்சள்
வெண்காரம்
திப்பிலி
கடல்நுரை
இலுப்பைக்கட்டி
வகைக்கு வராகனெடை 1

இவைகளை யரைத்துக் கால்படி நல்லெண்ணையிலிட்டுக் காய்ச்சிக் காதிலிட, நசியமிட, தலையிலிட,

1. பீனிசம்
2. தலைவலி
3. கபாலவலி
4. காதுரணம்

முதலானவை தீரும்!

## 310. சிரோ ரோகங்களுக்கெண்ணை

முருங்கைப்பட்டை
வசம்பு
வெள்வெங்காயம்
வெண்ணாயுருவி வேர்
வெற்றிலைக்காம்பு
கருஞ்சீரகம்
வகைக்கு வராகனெடை 1

இவைகளை யரைத்துக் கால்படி வேப்பெண்ணையிலிட்டுக் காய்ச்சி, வடித்துக் காதில்விட, நசியமிடத், தலையிலிட

1. மண்டைச்சீழ்
2. மண்டைக்கரப்பான்
3. காதுரோகம்
3. பீனிசம்
5. நாசிகபீடம்
6. தலைவலி
7. தலைத்திமிரம்
8. முகச்சன்னி
9. கபாலச்சன்னி
10. கபாலக்குட்டம்

முதலியவை தீரும்!

## 311. தூதுவளை எண்ணெ

தூதுவளைச் சமூலம் துலாம் $\frac{1}{2}$, நீர் படி 16 விட்டு, நாலி லொன்றாய்க் காய்ச்சி, நல்லெண்ணை படி $\frac{1}{8}$, கொம்புத் தேன் படி $\frac{1}{8}$, ஆவின்பால் படி $\frac{1}{2}$ சேர்த்துப் பனங்கருப்புக் கட்டி பலம் 5 சேர்த்துத்,

திரிகடுகு
திரிபாலை

வகைக்கு வராகனெடை 6

ஏலம்
கிராம்பு
தக்கோலம்
லவங்கப்பட்டை
சாதிக்காய்
சாதிப்பத்திரி

வகைக்கு பலம் $\frac{1}{2}$

அரைத்துக் கலக்கிக், காய்ச்சிப், பதமாய் வடித்துக் கொள்ளவும்.

## 312. பூலோக அக்கினிகுமாரச் செந்தூரம்

வெண்கலம்
செம்பு
பித்தளை
தரா
உருக்கு
இரும்பு-இவைகளின்
அரப்பொடி,
காந்தம்

வகைக்குப் பலம் 1

இரசம்

வராகனெடை 10

வெண்காரம்

பச்சைநாவி

காரீயம்

வகைக்கு வராகனெடை 10

இவைகளைச் சட்டியிலிட்டு உருக்கிக், குமரிச்சாறு வார்த்து மூன்று நாளரைத்து, நல்லெண்ணைபோல், புதுச்சட்டியில் வைத்துச் சித்திர மூலமரைத்து, அடைதட்டிக் கீழும் மேலும் வைத்து, அதன்மேல் நீர்மேல் நெருப்புப் பிடித்து, மேலே பொத்தி, அதன் மேல் குமரிச் சாறு விட்டு, மேல்சட்டி மூடி, ஒரு சீலைமண் செய்து, அடுப்பில் வைத்து, மூன்று நாள் 24 சாமம் தீயெரித்து, நான்காம்நாள் தீயார விட்டிறக்கி எடுக்கச் செந்தூரமாம்!

வெள்ளுள்ளித் தைலத்தில் பணவெடை 3 நாள் கொள்ள, சன்னி 18ம் சிலேட்டுமம் 96ம்,

திரிகடுகுச் சூரணம் பெருகடியில் தேன் சேர்த்துப் 10 நாள், ½ பணவெடை கொள்ள, வாதம் 80ம்,

திப்பிலிச் சூரணம் பெருகடியில் தேன் சேர்த்து ½ பணவெடை கொள்ள,

1. தலைவலி
2. மூர்ச்சை
3. முயல்கண்டன் மூர்ச்சை
4. சன்னிமூர்ச்சை
5. வாதமூர்ச்சை
6. பித்தமூர்ச்சை
7. சிலேட்டுமமூர்ச்சை
8. வயிற்றுவலி
9. கணவாதம் 4ம்

தீரும்!

(தரா-8பங்கு செம்பும், 5 பங்கு காரீயமும் கலந்த ஒரு உலோகம்; மூலியுமாம்)

### 313. தாளகப்பற்பம்

கழுதைமூத்திரத்தில் சுண்ணாம்பில் வைத்துச் சுத்தி செய்து, தாளகத்தை மருதம்பட்டை யரைத்துக் கவசம் செய்து, புடமிடப் பற்பமாகும்!

### 314. இரசப்பற்பம்

இரசம் வராகனெடை 25, ஒரு சட்டியில் உப்பு, செங்கற் பொடி-வகைக்குப் படி 1 கலந்து போட்டு, உள்ளங்கைபோல் குழி செய்து, அதில் பத்து வெற்றிலையைப் பரப்பி, அதன்மேல் மேற் படி இரதத்தை வைத்து, முள்முருங்கைத் தழையும் வாழைப்பழத் தோலு மடித்து, ஒரு சட்டியிற் றடவி, மேல்மூடி, ஐந்து சீலை மண் செய்து, நான்கு சாமம் அடுப்பில் வைத்தெரித்துக் கொள்ளவும்.

மேக, வாதச் சூலைக்குக் கருப்புக்கட்டியில் பணவெடை கொடுக்கவும்.

வாய், சூலைகட்டினால் தேங்காய்ப் பாலும் முலைப்பாலுங் கலந்து கொப்பளிக்கவும்

### 315. மூலக் கடுப்பு வகைக்கு

புளியரணைக் கிழங்கை மோரிலும் காடியிலும் ஊறப்போட்டு வேகவைத்து, உலர்த்தி, நெய்யில் வறுத்து, சாதிக்காய், கிராம்பு கூட்டிச் சூரணித்துத் தேனிற் கொள்ள,

1. கீழ்க்கிராணி
2. இரத்தக் கிராணி
3. மூலக்கிராணி
4. மூலக்கருப்பு

தீரும் !

### 316. கிராணிக்கு

1. இரசம் வராகனெடை 1
   கந்தகம் வராகனெடை 2

இவைகளை இரும்புக் கரண்டியில் விட்டு, மெதுவாய் வறுத்துக், கையால் மத்தித்து, ஒரு பணவெடை வெண்ணை, தயிர், சர்க்கரையிலிட, கிராணி தீரும்!

2. புழுங்கலரிசி வராகனெடை 2
அரசங்கொழுந்து வராகனெடை 12
கடுக்காய்தோல் வராகனெடை 3

இவைகளைக் கசாயமிட்டு, 6 வேளை சாப்பிடவும்.

இச்சாபத்தியம்.

### 317. உஷ்ணத்திற்கு

சுக்கு
கிராம்பு
ஏலஅரிசி
மிளகு
இலவங்கப்பட்டை
வால்மிளகு
கருஞ்சீரகம்
சாதிக்காய்

வகைக்குப் பலம் 2

பரங்கிப்பட்டை பலம் 3

இவைகளைச் சூரணித்துத் தேன், நெய்யிற் கொள்ளவும்.

### 318. குந்திரிக்க மெழுகு

கொம்பரக்கு
குங்கிலியம்
அதிவிடயம்
சாதிக்காய்
அபினி
குராசாணியோமம்

இவ்வாறும் நல்லெண்ணை விட்டரைத்துக் கொள்ள, கிராணி தீரும்!

## 319. மன்மதச் சிந்தாமணி லேகியம்

மன்மதச் சிந்தாமணியென் லேகியத்தை
தன்வந் தரியுரைத்தார் தாரணியில் - நன்மைபெறு
தூதுவளை வில்வவேர் தோன்று மருகின்வேர்
தீதகவி லாமிச்சை சீந்தியுடன் -கோதிலா
வாய்ந்தசந் தனக்கட்டை வாகாய் வனமூலி
பார்த்துவகைக் குப்பலம் பத்தாக -நேர்த்தியுடன்
கூட்டி யிடித்துக் கூரிய மிடாவதனில்
போட்டுஎட்டு வள்ளநீர் போதவிட்டு -வாட்டமிலா
தண்ணீர் ஒருவள்ளம் தயவாக வேகாய்ச்சி
எண்ணிக்கை தப்பாம லேபார்த்து -நன்மையாய்ச்
சர்க்கரை தானெடுத்துத் தானைம்பது பலமாய்
மிக்க கசாயத்தில் மேவியே -அக்கரையாய்
பாகுப்பத மாய்க்காய்ச்சிப் பண்பாய்க் கடைச்சரக்கு
வாகு பொருந்தும் வகையைக்கேள்!- நாகப்பூ
வால்மிளகு தக்கோலம் வாய்த்த திரிகடுகு
ஏலமிரு சீரகமும் ஏற்கையாய்ச் சாலவேதான்
திரிபாலை செண்பகப்பூ சேருமகரப்பூ சிற்றரத்தை
கொத்தமல்லி பாலு மதிமதுரம் பண்பாக
நீர்முள் ளிவிதை சரியாய் சாதிப்
பத்திரியும் கஸ்தூரி மஞ்சள் கதித்த
முந்திரிப் பழமும் அஸ்த கிராம்பும்
முகிலம்வேர் . . . . . . சுத்தமுள்ள
அக்கிர காரம் அதிகமுள்ள வில்வம்
பிசிறு சடாமஞ்சி யுடன்தானும்-முந்து
பக்குவமாய்ச் சன்ன லவங்கமுடன்
தக்கவிரு பத்திரியும் வண்ணமணி - கோஷ்டமுடன்
வருத்தம தாய்ச்சொன் னவகை ஓமம்
குராசாணி யோமம் கசகசா - நீதமுள்ள
வாலுளுவை நின்றாசி மோத(?) யானைத்திப்பிலி

வகைக்குச் சேர்ந்த வராகனெடை - ஒப்புறவாய்
பத்து உகந்துகொண்டு செப்பும் இளவறுப்பதாய்
வறுத்துஏற்ற பொடியாகி விளைவுடைய கஞ்சா-
மேவியேதான்
பழகியதோர் பானையதில் பத்துப்பலம் போட்டு
நிறுத்தி ஞானமையாய் ஆறு நாழிகையும் - ஊறவிட்டுப்
பிசைந்துதான் நிழலுலர்த்தி யானபின்பு துய்ய
வஸ்திர காயமிட்டுத் தீர்ந்தபின்பு - . . .
தேனும்நெய் யும்விட்டுச் சிந்தாமல் நிறுத்தித்
தானும் அபினியைத் தானெடுத்து -ஆனதொரு
அலைகரண்டி அதில்போட்டு நெய்யூற்றிக் காய்ச்சி
மேலாகவே பாத்திரத்தில் வடித்துவைத்துப் -பாங்குடனே
கண்டுமொரு கழற்சிக் காயளவு கொண்டால்
வியாதி தொலைவது கேள்! -பண்டான
காமாலை கைகா லசரிக்கை சோமாலை
காசி ...துடிரோகம் -ஆமாலை
கண்ணிரு பத்தோர்மேகம் காதடைப்பு யட்டகுன்மம்
எண்ணரிய சூலை பதினெட்டுமே -குன்மம்
குட்டம் பதினெட்டு கொல்லும் அதிசாரம்
சிட்டியதோர் மூலக் கிராணியுமே -ஒட்டியுடல்
மெலிவு தாதுநஷ்டம் ஓக்காளம் வாய்நாற்றம்
குடல்எரிவு அஸ்திசுரம் கோழையுடன் -நெடியமலம்
கண்ணெரிவு வாந்தி பசியெட்டு மாரடைப்பு
தொண்டைவலி, எல்லாம் தீரும்- ......
திரேகம் வலுக்கும் தீர்க்காயு சுண்டாகும்
போகம் அடிக்கடிதான் பொங்குமே! -நேருடனே
பொய்கண்ட தல்ல புவியில் மனிதருக்கு
மெய்கண்ட தென்றே விரும்பு!

## 320. விஷப்பாண்டுக்கு அயச்செந்தூரம்

அரப்பொடி வராகனெடை 10; இதைப் புளியம் பிரண்டை மடல் சாறுவிட்டு, 4 சாமமரைத்துக் காசுபோல் வில்லைசெய்து, உலர்த்தி, ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து குழிப்புடமிடவும்.

மறுபடியும், மேற்கண்டபடியொரு புடமிடவும்; செந்தூரமாகும்.

இரண்டு பணவெடை கரிப்பான் கசாயத்தில் கொடுக்கத், தீரும்!

## 321. தாளகப் பற்பம்

1. தாளகம் வராகனெடை 3

சீனிக்காரம் வராகனெடை 3

இவைகளைப் பொடித்துக் காகிதத்தில் வைத்து மடக்கி, நூலிற் கட்டி, ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து 5 எருவிற் புடமிடப், பற்பமாகும்!

பணவெடை தேனிற் கொள்ளவும்.

(சீலைமண்: சேலைத் துணியை நீள வார்போலப் பட்டையாக, சுமார் 2 அங்குல அகலத்தில், கிழித்துக் கொண்டு, அதைக் களிமண்ணில் தோய்த்தெடுத்து, பாண்டம்-மூடி இவற்றுக்கு இடையே உள்ள இடைவெளி மறைவது போலச் சுற்றுவர். சீலைத்துணியில் உள்ள ஈரமண் காயக்காய, இறுக்கமாக, 'சீல்' வைத்தது போலப் பற்றிக் கொள்ளும். ஒன்றின் மேல் ஒன்றாகச் சில சீலைத் துண்டுகளை இவ்வாறு அடுக்கிச்சுற்றினால், காற்று கூட உட்புகாது! எளிய, ஆனால் நம்பகமான முறை இது! பழந்தமிழர் கண்ட அறிவியல் இது!)

2. மேற்படிக்கு, தாளகம் வராகனெடை 2, பவளம் வராகனெடை 2, வேலிப் பருத்திச்சாறுவிட்டு, 1 சாமமரைத்துலர்த்தி, ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து, 10 எருவிற் புடமிடப் பற்பமாகும்!

தேனில் மூன்று வேளை கொள்ள, சுவாசம், இரைப்பு தீரும்!

மேற்சொன்ன அயச்செந்தூரம் பணவெடை கொள்ளவும்.

# பின்னிணைப்பு

1. 1 மண்டலம் — 21 நாட்கள்; 41 நாட்கள்; 48 நாட்கள்
2. 1 உரி — 672 மி.லிட்.
3. 1 மஞ்சாடி — 250 மி.கிராம்.
4. நசியம் — முகர்ந்து பார்த்தல்
5. முரி — கம்பளித்துணி
6. 1 காணி — 12.5 மி.லி.
7. 1 பணவெடை — 488 மி.கி.
8. 1 மா — 50 மி.லி.
9. 1 நாழி — 1.3 லி.
10. செவியம் — Piper Chaba
11. எழுத்தாணிப் பூண்டு — Prenanthera Sarmentose
12. பிஸ்தா — Pistacia vera
13. திப்பிலி — Piper longum
14. தருப்பை — Poa conosuroides
15. ஆல்பகோடா — Prunus cummunis
16. 1 தூணி — 8 படி (43008 மி.லிட்)
17. 1 பதக்கு — 21504மி.லிட்.
18. 1 துலாம் — 100 பலம்.
19. இச்சாபத்தியம் — கடுகு, நல்லெண்ணை,
    புணர்ச்சி நீக்குதல்:
    அவபத்தியம் என்றும் இது கூறப்படும்